REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 நவம்பர் 20 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 275 | Monday 20, November, 2023 | 24 பக்கங்கள் | 50/-

## மின்சார துறையில் புரட்சி: விரைவில் அணுமின் திட்டம்



இலங்கையில் அணுமின் நிலையத்தை நிர்மாணிக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகிறது.

2032ஆம் ஆண்டளவில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதக, இலங்கை அணுசக்தி சபையின் தலைவர் பேராசிரியர் எஸ்.ஆர். 06

வரலாற்று மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும்

## மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வரவு செலவு திட்டம் சமர்ப்பிப்பு

### இரண்டாவது "உலக தெற்கின் குரல்" மாநாட்டின் அமர்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்திருக்கும் வேளையிலும், நாட்டு மக்களின் நலிவடைந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி, அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிகழ்நிலை முறையில் "உலக தெற்கின் குரல்" அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு (17) ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி



ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த மாநாடு இரண்டாவது முறையாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்தியாவில் ஆரம்பமாகியது. அபிவிருத்தி அடைந்துவரும் பல நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தமைக்கு பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தமைக்காக இந்தியாவிற்கு பாராட்டு தெரிவித்தார். முதல் முறையாக நடைபெற்ற 06

எஸ்.எம்.எம். முஷாரப் எம்.பியின் முயற்சியில்

## பொத்துவில் டிப்போ பிரதான டிப்போவாக நேற்று தரமுயர்வு

### அமைச்சர் பந்துல, ஆளுநர் செந்தில் பங்கேற்பு

**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

பொத்துவில் உப பஸ் டிப்போ நேற்று (19) பிரதான டிப்போவாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவால் தரம் உயர்த்தப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பின் முயற்சியால்,இந்த டிப்போ தரமுயர்த்தப்பட்டது.



புதிய பொருளாதார மூலோபாயங்களை வலுப்படுத்தும் நோக்கில், பொத்துவில் 06



# நாடு முழுவதும் டெங்கு நோயின் தாக்கம் தீவிரம்

## இதுவரை 72.840 டெங்கு நோயாளர் பதிவு



### 45 வலயங்கள் மிகுந்த அவதானம் கொண்ட பிரதேசங்களாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர் எண்ணிக்கை விரைவாக அதிகரித்துவருவதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், நாடு முழுவதும் 72,840 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. மிகுந்த அவதானம் கொண்ட வலயங்களாக 45 வலயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 34,645 டெங்கு நோயாளிகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் அது 47.5% எனவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் எச்சரிக்கை மிகுந்த வலயங்களாக 10 பிரதேசங்களும் கம்பஹா மாவட்டத்தில் 08 பிரதேசங்களும் களுத்துறை மாவட்டத்தில் 03 பிரதேசங்களும் கண்டி மாவட்டத்தில் 11 பிரதேசங்களும் மாத்தளை மாவட்டத்தில் 02 பிரதேசங்களும் காலி மாவட்டத்தில் 02 பிரதேசங்களும் மட்டக்களப்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களில் தலா ஒரு பிரதேசமும் புத்தளம் மாவட்டத்தில் 04 பிரதேசங்களும் கேகாலை மாவட்டத்தில் 03 பிரதேசங்களும் பதிவாகியுள்ளன.

அதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் 15,464 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 14,596 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 4,585 06

## சீனி தட்டுப்பாட்டுக்கு வாய்ப்பில்லை 19,000 மெற். தொன் கையிருப்பில்

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



நாட்டில் சீனி தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் கிடையாது என, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் சீனிக்கான வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னர் 19,000 மெற்றிக் தொன் சீனி சந்தையில் காணப்படுவதாகவும் அதனால் சீனிக்கான தட்டுப்பாடு ஏற்படவோ அல்லது அதிகமான விலை விதிப்பு மேற்கொள்வதற்கான எத்தகைய அவசியமோ கிடையாது என்றும் இராஜாங்க 06

## விதண்டாவாதங்களுக்கு பதிலளிப்பதைவிட மக்களுக்கு வீடுகளை அமைப்பதே எனது இலக்கு

### 'நாம் 200' 25 ஆம் திகதி நிகழ்வில் விளக்கமளிப்பேன்



விதண்டாவாதம் பேசுபவர்களுக்கு பதிலளிப்பதைவிட எனது மக்களுக்காக வீடுகளை அமைப்பதே எனது இலக்கென நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மலையகம் நாம் 200 நிகழ்வு தொடர்பில் முன்வைக்கப்பட்டு வரும் விமர்சனங்கள் தொடர்பில், எதிர்வரும் 25இல், விளக்கமளிக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

"விமர்சனங்களை மாத்திரமே முன்வைத்துக் 06

அமைச்சர் டக்ளஸ் தலைமையில்

## கிளி. புதுமுறிப்பில் நன்னீர் மீன்வளர்ப்பு திட்டம் ஆரம்பம்



நன்னீர் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதனூடாக உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், நன்னீர் மீன்வளர்ப்பு திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பமானது.

தேசிய நன்னீர் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதுடன், உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதி 06

## மீன்பிடிப் படகு கடலில் விபத்து ஜப்பானியர் உட்பட நால்வர் மீட்பு

### ஜப்பானியரின் ரூ. 70 இலட்சம், கடவுச்சீட்டு மாயம்

பொழுதுபோக்குக்காக கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஜப்பான் பிரஜை உள்ளிட்ட நால்வர் அடங்கிய படகு நீரில் மூழ்கியதில், ஜப்பானிய பிரஜையின் 70 இலட்சம் ரூபா பணம் மற்றும் கடவுச்சீட்டு 06



## 'வற்' வரி அதிகரிக்கப்பட்டாலும் மின் கட்டணத்தை பாதிக்காது

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனவரி மாதத்தில் வற் வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளபோதும் அது, மக்களுக்கான மின் கட்டணம் உள்ளிட்ட சில பிரிவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என நிதி இராஜாங்க 06

## சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு

### 389 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

சிறுபோகத்தில் சேதமடைந்த பயிர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

முதற்கட்ட இழப்பீடுகளின் கீழ் 389 மில்லியன் ரூபாவை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க விவசாய மற்றும் கிராமிய காப்புறுதி சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

இதற்கமைய, அங்குணுகொலபெலஸ்ஸவில் நேற்று முதற்கட்டமாக 250 விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டது. கடந்த முறை சிறுபோகத்தில் 06

## வடக்கின் கல்வித் தரத்தை உயர்த்த பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்

### வடக்கு அதிபர்கள் சங்கம் வடக்கு ஆளுநரிடம் உறுதி



வடக்கு மாகாண கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவை சரி செய்வதற்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக வட மாகாண அதிபர்கள் சங்கத்தினர், மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் உறுதியளித்தனர்.

வட மாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைவர் த. ஜெயந்தன் தலைமையிலான குழுவினர், 06

## 55 வயது நிறைவடைந்த அரச ஊழியர் சுயவிருப்பில் ஓய்வு

### முறைமையை தயாரிக்க யோசனை முன்வைப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

55 வயது நிறைவடைந்துள்ள மற்றும் 20 வருட அரச சேவையிலுள்ள அரசாங்க ஊழியர் சுயவிருப்பத்தின் பேரில் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் முறைமையொன்றை தயாரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான முறைமையொன்றை தயாரிப்பதற்காக அரச 06

2024 ஜனவரி முதல் வாரத்தில்

## KKS - நாகபட்டினம் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்க திட்டம்

### android & iOS app மூலம் பதிவுகள் செய்யலாம்

ஜனவரி முதல் வாரத்தில் காலநிலையைப் பொறுத்து காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவிருப்பதாக இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட IndSri Ferry Services Pvt Ltd நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சோ.நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

இந்த கப்பல் சேவையை மேற்கொள்ள பூர்வாங்க அனுமதிகள் இலங்கை, இந்தியா 06

## நாட்டின் பல பகுதிகளில் இடி மின்னலுடன் மழை

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை



நாட்டின் பெரும்பாலான மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென, சிரேஷ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்

## நீதியை நிலைநாட்டும் முயற்சிகளை ஒருபோதும் கைவிடவேண்டாம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் நீதியை நிலைநாட்டல், உண்மையை கண்டறிவதற்கான முயற்சிகளை ஒருபோதும் கைவிடவேண்டாமென பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அண்மையில் கர்தினால் மல்கம் 06

## பருத்தித்துறை கடற்பரப்பில் 22 இந்திய மீனவர்கள் கைது



யாழ். பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி எல்லை தாண்டி மீன்பிடித்தலில் ஈடுபட்ட இந்திய கடற்றொழிலாளர் 22 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 22 பேரும் சனிக்கிழமை (18) மதியம் கைது செய்யப்பட்டனர். தமிழகம் 06

## யாழ். உரும்பிராய் பகுதியில் நபரொருவர் அடித்துக்கொலை

**யாழ். விசேட நிருபர்**

யாழ்.உரும்பிராய் பகுதியில், முதியவர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார். உரும்பிராய் பகுதியை சேர்ந்த எஸ். பிரேமராஜன் (வயது 68) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் செல்வபுரம் பகுதியை சேர்ந்த 48 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 06

# நகர்வலம்



## மேல் மாகாண பாடசாலைகளில்...

# பட்டதாரிகளை சேர்ப்பதற்கான நேர்முக பரீட்சைகள் நாளை 21 முதல் 25 வரை

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

மேல் மாகாண பாடசாலைகளில் நிலவும் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முக பரீட்சையும் செயல்முறை பரிசோதனையும் நாளை (21) முதல் இடம்பெறவுள்ளது. ஐயாயிரத்து முன்னூற்றி மூன்று பேர் நேர்முகப் பரீட்சைக்கு தெரிவாகியுள்ளனர்.

பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள மேல் மாகாண சபையின் கட்டடத் தொகுதியில் நாளை 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை ஐந்து தினங்கள் இப்பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட பகிரங்க போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் 5303 பேர் இந்த நேர்முகப் பரீட்சைக்கு தெரிவாகியுள்ளனர்.

நேர்முகப் பரீட்சை பொதுவானதும் மற்றும் செயல்முறை பரிசோதனையையும் உள்ளடக்கி இடம்பெறவுள்ளதுடன் அவசியமான அனைத்து ஆவணங்கள், சான்றிதழ்களின் மூலப்பிரதி மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திலக் செனரத் தெரிவித்துள்ளார். ஆவணங்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட மாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

செயல்முறைப் பரிசோதனை ஆசிரியர் தொழிலின் முக்கிய அங்கமான கற்பித்தல் செயல்பாடுகள் தொடர்பிலான தகைமை, மதிப்பீடு உள்ளிட்ட ஐந்து அம்ச விடயங்கள் தொடர்பானதாக இடம்பெறவுள்ளது.

செயல்முறை பரிசோதனைக்கான ஆகக்கூடிய மொத்த புள்ளிகள் இருபத்தைந்தாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை

# உடப்பு, ஆண்டிமுனை ஸ்ரீகிருஷ்ணா ஆரம்ப பாடசாலை மாணவர்கள் சித்தி



உடப்பு குறூப் நிருபர்

2023ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் புத்தளம் தெற்கு கல்விக் கோட்டத்துக்குட்பட்ட ஆண்டிமுனை ஸ்ரீகிருஷ்ணா ஆரம்பப் பாடசாலையின் நான்கு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் வி.ரஹிதா (144 புள்ளிகள்), எஸ்.ரேஹர்சன் (147 புள்ளிகள்), ஏ.தினுஸ்கர் (152 புள்ளிகள்), கே.லிதுர்ஷி (171 புள்ளிகள்) ஆகியோருடன் பாடசாலை அதிபர் எஸ்.கோகிலகாந்தன், கற்பித்த ஆசிரியைகள் வி.கிருஷ்ணவேணி, எஸ்.அஜந்தனி ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கருவலகஸ்வெவ தேவநுவர கிராமத்தில் காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளிக்கிழமை (17) இரவு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கருவலகஸ்வெவ, தேவநுவர பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய டபிள்யூ. நிக்கோலஸ் பெரேரா எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.குறித்த நபர் வீட்டை விட்டு வெளியே சென்ற போது, காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாகவும், அதன் பின்னர் உறவினர்கள் அவரின் சடலத்தை வீட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து, உயிரிழந்த நபரின் வீட்டுக்கு வருகை தந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை;

# அநுராதபுரம் மாவட்ட முஸ்லிம் பாடசாலை மாணவர்கள் இம்முறை சிறந்த பெறுபேறு

அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்

அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட சாஹிரா தேசிய பாடசாலை கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட ஹோராபொள முஸ்லிம் வித்தியாலயம் , கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலம், கலாவெவ முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து எம்.எஸ்.சஸ்பா 174, என். நஷ்ஹா 165, எம்.டப்ளியு. எப். அய்னி 161, எம்.ஏ.எப்.அபானா 161, எம்.எச்.ஹம்தா 159, எம். வீ.எம்.சஹ்ரி 154, எம்.எஸ்.ஆரா 153, எம்.ஐ.றீஹா 152, எம்.எஸ். ஹிமானி 148.

ஹோராபொள முஸ்லிம் வித்தியாலயம். என்.ஹனீப் 168, எம்.ஏ. ஆயிஷா 166 ,எம்.மஹதி 162 , என். எம்.யூஸுப் 152 , எம்.அப்ரினா 149, என்.பீ.நிஹாதா 147, எம்.ஆர்.எம். நப்லி 143, எம்.ஏ.எப்.ஷாரா 143.

கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயம் : எம்.என்.நுஷ்ரி 172, சசிகுமார் தனன்யா சஸ்வேதா 172, எம்.ஆர்.றீமா 166, எம்.ஐ.பாத்திமா ஹிஸாமா 158, எம்.ஏ.பர்ஹா 155, எம்.எச் ஹம்தீ 150, எம்.எப்.அய்த் அஹமட் 147, எஸ்.எப்.நஷ்ரின் 147, ஆர்.எப்.பாத்திமா ரஹ்லா 147, எம். எம். ஷேஷா மரியம் 145.

கலாவெவ முஸ்லிம் மத்திய கல்லூரி : எம்.ஏ.நாதியா 161, எம். ஆர்.எம்.ராஹிஸ் 160, எம்.ஏ.ஹப்சா 157, எம்.ஆர்.எச்.உமர் மக்தும் 156, எம்.பீ.செய்னப்156, எம்.ஏ.எப். அக்சா 155, எம்.என்.எம்.நஹ்தீ 152, எம்.என்.றிஸ்தி ருசைத் 152, ஏ.ஆர். எம்.சகீப் 146, எம்.ஐ.இபத் மிபா 146, எம்.என்.நாசிம் 145, எம்.என். எம்.அக்லம்ஷா 143 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

# போதைப்பொருள் வியாபாரி விமான நிலையத்தில் கைது

## தாய்லாந்து சுற்றுலா சென்று குடும்பம் சகிதம் திரும்புகையில் சம்பவம்

கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்

தனது குடும்பத்துடன் தாய்லாந்திற்கு சுற்றுலா சென்று இலங்கை திரும்பிய போதைப் பொருள் வியாபாரி ஒருவர் நேற்று (19) நண்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு 08, பொரளை பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர், திருகோணமலை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு போதைப்பொருள் வழங்கியவர் என தெரிவிக்கப்படுகிறது.கைது செய்யப்பட்டவர், தனது குடும்ப உறுப்பினர்களுடன் தாய்லாந்துக்கு சுற்றுலா பயணத்தை முடித்துக் கொண்டு பேங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானமான UL405 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## இன நல்லிணக்கத்திற்காக செயற்பட்ட

# பேருவளை, மாலேவன விகாராதிபதியின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

## சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் அனுதாபம்



பேருவளை மாலேவன விகாராதிபதி அதி. வணக்கத்திற்குரிய மாலேவன சோபித நாயகதேரரின் திடீர் மறைவு பேருவளை பிரதேச இன நல்லிணக்க செயற்பாடுகளுக்கும் ஒற்றுமைக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகுமென பேருவளை சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பேருவளை பிரதேசத்தில் அன்று தொடக்கம் இன்று வரை முஸ்லிம்களுடன் பெரும்பான்மை சமூகத்தினர் ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் வாழ்ந்து வருகிறார்கள். அதேபோல் மாலேவன விகாரைக்கும் சீனன்கோட்டை முஸ்லிம்களுக்கும் வரலாற்றுரீதியாக நிறைய தொடர்புகள் இருந்து வந்தன. இன்றும் இருக்கின்றன.

அதனை இறுதி வரை பேணி பாதுகாக்கும் நடவடிக்கையில் மறைந்த விகாராதிபதி சோபித தேரர் செயற்பட்டு வந்ததை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுகூர்வதோடு தொடர்ந்தும் அந்த ஒற்றுமை எதிர்காலத்தில் தொடர வேண்டுமெனவும் தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ள் பள்ளிச்சங்கம், அன்னாரின் மறைவுக்கு சீனன்கோட்டை மற்றும் பேருவளை முஸ்லிம்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாகவும் பள்ளிச்சங்கம் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள குருந்துவத்தை விகாரைக்கு நேற்று (19) பள்ளிச்சங்க உறுப்பினர்கள், பிரதேச முஸ்லிம் அமைப்புகளின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் சென்று தமது இறுதி அஞ்சலியை செலுத்தி வருகின்றனர்.

# ஹம்பாந்தோட்டை இக்ரா இம்முறை சிறந்த பெறுபேறு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

அண்மையில் வெளியான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளில் ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுல் ஆகக் கூடுதலான மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டி தென் மாகாணத்தில் சாதனை படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். இம்மாணவர்களுள் 15 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத்தாண்டி பாடசாலைக்கு புகழ் சேர்த்துள்ளனர். இவர்களுள் வி. கம்சிதா 173, எம். ஐ. எ. ஸைத் 172, எம். என். அம்மார் 167, எம். ஆர். எப். ஹுமைரா 165, எம்.எச் பீ. ஹுஸைர் 165, எம். என். எம். வாரிஸ் 161, டி. ஆர். எப். ரம்லா 157, ஆர். சாலிக் மொஹமட் 155, எம். ஐ. எப். ஹனா 153, எம். சுஸாட் ரிப்கான் 149, எம். எம். சாஜித் 145, எம். எஸ். சுஸாட் அம்ஹர் 143, எம். ஆர்.எப். இப்ரா 143, எம். டீ. எப்.நஸா 143, எம். ஆர்.எப். ரைமா 143 ஆகியமாணவர்களே வெட்டுப்புள்ளியைத் தாண்டி பாடசாலைக்கு புகழ் சேர்த்துள்ளனர்.

## பாணந்துறை அல் பஹ்ரியா மாணவி

# 182 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் மூன்றாம் இடம்

( பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



பாணந்துறை அல்பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவி எம். ஆர். பாத்திமா ஸைனப் அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்2023 தமிழ் மொழி மூலமாக 182 புள்ளிகள் பெற்று கோட்டக் கல்விப் பிரிவில் முதலாமிடத்தையும் களுத்துறை மாவட்டத்தில் மூன்றாம் நிலையும் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் அல்பஹ்ரியா தேசிய பாடசாலையின் ஆங்கில ஆசிரியராக கடமை புரியும் பாத்திமா ரிஸ்னா மற்றும் முஹம்மத் ரியாஸ் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார். இந்த மாணவி தனது பரீட்சை வெற்றி தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்; தனது கல்விப் பயணத்தில் உறுதுணையாக இருந்து நெறிப்படுத்தி வழிகாட்டிய பெற்றோர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் கல்வி அபிவிருத்திக்காக செயல்பட்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

# நௌபர் மௌலவியின் தாயார் காலமானார்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் முக்கியஸ்தரும் கல்விக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் எஸ்.எல். நௌபர் மௌலவியின் தாயார் பாத்திமா பீவி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவரது ஜனாஸா நேற்று தல்கஸ்பிடிய பனபுர ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜம்இய்யத்துல் உலமா பிரமுகர்கள் உட்பட பெருமளவிலானோர் இந்த ஜனாஸாவில் கலந்து கொண்டனர்.



இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்ட பட்டப்படிப்பைத் தொடரும் அநுராதபுரம் பிராந்திய நிலைய மாணவர்களால் இம்முறை 06 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததானம் வழங்கும் நிகழ்வு அநுராதபுரம் திறந்த பல்கலை கழக பிராந்திய நிலையத்தில் (16) இடம் பெற்றது. இதில் ஏறக்குறைய 100 நன்கொடையாளர்கள் இரத்த தானம் செய்ய முன்வந்திருந்தனர். இந்த நன் கொடையாளர்கள் ஒவ்வொருவருக்கும் மரக்கன்றுகளை வழங்க திறந்த பல்கலை கழக அநுராதபுரம் பிராந்திய சட்டப்பிரிவு மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

படம் : திறப்பனை தினகரன் நிருபர்

# மனைவியின் தாக்குதலில் கணவன் உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இபலோகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட பலுகஸ்வெவ பிரதேசத்தில் தனது கணவரை கட்டையால் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இபலோகம விஜிதபுர பலுகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு (18) கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய இபலோகம பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் கொலையை செய்ததாக கூறப்படும் 47 வயது பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இருவருக்கும் இடையில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த குடும்பத்தகராறு அதிகரித்ததையடுத்து மனைவி, கணவனை கட்டையால் அடித்து கொலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# வட மத்திய மாகாண நூலக கட்டடம் திறந்து வைப்பு

(கல்நேவ தினகரன் விசேட நிருபர் )



வடமத்திய மாகாணத்தில் சிறந்த நூலகம் மற்றும் தகவல் சேவையை பேணும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட வடமத்திய மாகாண மத்திய நூலக கட்டடம் வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் தம்புத்தேகம நகரில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது. இரண்டு மாடிகளைக் கொண்ட இந்த நூலகக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக வடமத்திய மாகாண சபை 85 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான நிலம் மகாவலி அதிகார சபையினால் அன்பளிப்பு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும். இந்த நூலகத்தை நிறுவுவதன் முக்கிய நோக்கம் தம்புத்தேகம நகரைச் சுற்றியுள்ள மக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், கல்வி வலய அலுவலகம், பொலிஸ், மகாவலி அதிகாரசபை, பிரதேச செயலகம், தபால் நிலையம் போன்ற தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் அறிவை மேம்படுத்துவதாகும்.

இந்நிகழ்வில் வடமத்திய மாகாண பிரதம செயலாளர் சந்திர சிறி பண்டார, பிரதான அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 நவம்பர் 20 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : காலை : 7.39 - 9.09வரை
சுபநேரம் : பகல் : 12.09 - 1.39வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

### தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார சக்தியைப் பயன்படுத்த
# பிராந்திய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம்



தெற்காசிய பிராந்தியத்தில் வளர்ந்து வரும் பொருளாதார சக்தியைப் பயன்படுத்த பிராந்திய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். ஆசியாவை நோக்கி நிகழும் பொருளாதார இடப்பெயர்வு குறித்தும் இதன் போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் (18) நடைபெற்ற YPO Colombo Experience: Rediscover the Pearl மாநாட்டில் பிரதான உரையை ஆற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அவர்:

பிராந்திய நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தக்கூடிய புதிய மாதிரியையும் முன்மொழிந்தார். மாலைதீவின் புதிய ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சுவுக்கும் தமக்குமிடையில் நேற்று முன்தினம் நடந்த இருதரப்பு பேச்சுவார்த்தைகள் குறித்தும் கருத்து தெரிவித்தார். இலங்கை மற்றும் மாலைதீவுடன் இணைந்து சுற்றுலா வலயமொன்றை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடினோம். டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் மேலும் வலுசக்தி மாற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவது அவசியம் .

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது, விவசாயத்தை நவீனமயமாக்குவது, காணி உரிமை தொடர்பான மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் அதிக அந்நியச் செலாவணியை அதிகரிக்கும். விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக சுமார் 02 மில்லியன் ஏக்கர் காணிகளை, அந்தக் காணிகளை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு முழு உரிமத்துடன் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பாரியளவிலான நவீன விவசாய தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கு அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயற்படவுள்ளன.

செயற்கை நுண்ணறிவுக்குள் (AI) பிரவேசித்தல் உள்ளிட்ட தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பாரிய பொருளாதார மத்திய நிலையத்தை உருவாக்குவதன் மூலம் தமிழ்நாடு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் தொழில்மயமாக்கலை உருவாக்க இயலும்.

அதேபோன்று, பங்களாதேஷ், மியன்மார், கம்போடியா, லாவோஸ், கிழக்கு மற்றும் மேற்கு ஆபிரிக்க பிராந்திய நாடுகளில் உள்ள புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்ந்து அந்த நாடுகளிலும் முதலீடு செய்ய இலங்கை தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளன. இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து பிராந்தியத்தில் சுற்றுலாத் துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக நேபாளத்தையும் ஒன்றிணைக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

வங்காள விரிகுடாவை சூழவுள்ள நாடுகளுக்கிடையில் சுற்றுலா வலயத்தை உருவாக்கும் திட்டம் குறித்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்குரமசிங்க, கெரீபியன் தீவுகளை விட இது மிகப்பெரிய மாற்றீடாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் சூர சம்ஹாரத் திருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட பெருந்திரளான பக்தர்கள் மத்தியில் சூரன்போர் நடைபெறுவதையும் காணலாம்.

# தெதுரு ஓயா நீர்த்தேக்கம் நிரம்பி வழியும் மட்டத்தில்

தெதுரு ஓயா நீர்த்தேக்கம் நிரம்பி வழியும் மட்டத்தை எட்டியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக வாரியபொல, நிகவெரட்டிய, மஹவ, கெபோய்கனே, பிங்கிரிய, சிலாபம் ரஸ்நாயக்கபுர, ஆராச்சிக்கட்டுவ மற்றும் பள்ளம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நிலப் பிரதேசங்களில், சிறிதளவு வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அப்பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

### கிழக்கு மாகாண வரலாற்றில் 04 மாதங்களில்
# வைத்தியசாலையை கட்டிமுடித்த ஆளுநர் செந்தில் தொண்டமான்





கிழக்கு மாகாண ஆளுநரின் முயற்சியால் கிழக்கு மாகாண வரலாற்றில் முதல் முறையாக அடிக்கல் நாட்டப்பட்டு நான்கு மாத காலத்துக்குள் வைத்தியசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ள சம்பவம் நிகழ்ந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் கோனோகொல்ல கிராமத்தின் வைத்தியசாலையே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் அம்பாறை மாவட்ட கோனோகொல்ல கிராமத்துக்கு விஜயம் செய்தபோது, அப்பகுதி மக்கள் வைத்தியசாலையை நிர்மாணித்து

06 ஆம் பக்கம் பார்க்க...

# தேர்தலை இலக்குவைத்த வரவு செலவுத் திட்டமே இது
### ஐ.ம.சக்தி அவ்வாறே பார்க்கிறது



வரவு செலவு திட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் முன்மொழிவுகள் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படுவதற்கு முன்னர், இது குறித்து ஆய்வுகள் நடத்தப்படாமல் வெளியிடப்படுகிறதா? என்ற கேள்வி எழுகிறது.

அத்துடன் நாடு தவிர்க்க முடியாத முக்கிய தேர்தல்களை நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில், உபாயங்களை மாற்றியமைத்து, தேர்தல் வரவுசெலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளதாகவே இந்த பட்ஜட்டை தாம், பார்ப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி வரவு செலவு திட்ட உரையில் நாடு வங்குரோத்து நிலைக்கு வழி வகுத்த போக்கை அப்பட்டமாக கூறியிருந்தார். இன்று, நமது நீதிமன்றம், நமது நாடு வங்குரோத்தாவதற்கான

06 ஆம் பக்கம் பார்க்க...

# வருமான வரித் தொகை ரூ,943 பில். நிலுவை; கோபா குழுவில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் இவ்வருட ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியில் தேசிய வருமான வரி திணைக்களத்தின் வரி வருமான நிலுவை, 943 பில்லியன் ரூபா என கோபா குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வருமான வரி திணைக்களத்தின் முக்கிய அதிகாரிகள் கோபா குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலிலே, இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி முதல் இவ்வருடத்தின் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியில் தேசிய வருமான வரி திணைக்களத்தின் வரி வருமான நிலுவை, 943 பில்லியன் ரூபா என்றும் அதில் 39 பில்லியன் ரூபா இம்மாதத்தின் முதல் 7 மாதங்களில் வருமான வரி நிலுவையாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரி அறவிட வேண்டியவர்களிடமிருந்து முறையாக அதனை அறவிடுவது தொடர்பில் வருமான வரி திணைக்களம் தற்போது பல்வேறு செயல்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.




## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



உழவினார் கைம்மடங்கின் இல்லை
விழைவதூஉம் விட்டேம்என் பார்க்கும் நிலை

எல்லாப் பற்றையும் விட்டுவிட்டதாகக் கூறும் துறவிகள்கூட உழவரின் கையை எதிர்பார்த்துதான் வாழ வேண்டும்.

# வீதிப்போக்குவரத்து சட்டங்களை மதித்து செயற்படுவது அவசியம்!

அம்பாறை மாவட்டத்தின், ஒலுவில் பிரதேசத்தில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற மோட்டார் பைசிக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் அப்பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இந்த இரு இளைஞர்களும் மருதமுனையில் இருந்து ஒலுவிலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இ.போ.ச பஸ் வண்டியுடன் மோதுண்டு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

நாட்டில் நாளுக்குநாள் வீதிப்போக்குவரத்து வாகன விபத்துக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. இவ்விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர் சட்டம் ஒழுங்கை கடுமையாக அமுல்படுத்தியுள்ளனர். இருந்தும் கூட வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்கள் குறைந்ததாக இல்லை. நாளொன்றுக்கு 7 தொடக்கம் 8 பேர் இவ்விபத்துக்களால் உயிரிழப்பதாகக் குறிப்பிட்டுள்ள பொலிஸ் திணைக்களத்தின் போக்குவரத்து பொலிஸ் பிரிவினர், வருடமொன்றுக்கு 3000 ஆயிரம் பேர் உயிரிழப்பதாகவும் பொலிசார் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அந்த வகையில் இந்நாட்டில் இடம்பெறுகின்ற வீதி விபத்துக்களில் மூன்றில் ஒரு பகுதி விபத்துக்கள் மோட்டார் பைசிக்கிள் விபத்துக்களாக விளங்குகின்றன. அவ்விபத்துக்கள் மூலமான உயிரிழப்புக்களும் அதிகம் என்றும் போக்குவரத்து பிரிவு பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டில் நாட்டில் 83 இலட்சம் வாகனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 41 இலட்சம் வாகனங்கள் மோட்டார் பைசிக்கிள்களாகும். நாட்டில் காணப்படும் மோட்டார் வாகனங்களில் அரைப்பகுதி மோட்டார் பைசிக்கிள்களாகக் காணப்படுவதை இத்தரவுகள் வெளிபடுத்தி நிற்கின்றன.

மோட்டார் பைசிக்கிள் உட்பட வாகனங்களின் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை சீரமைக்கவென வீதிப் போக்குவரத்து சட்ட ஒழுங்குவிதிகள் நடைமுறைகள் உள்ளன. வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களைக் குறைத்து கட்டுப்படுத்துவதே இச்சட்ட ஒழுங்குகளின் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. அதனால் தான் இச்சட்ட ஒழுங்குவிதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட ரீதியில் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படுகின்றன. அந்த ஒழுங்குவிதிகளை உரிய ஒழுங்கில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு வாகன ஓட்டுனருக்கும் உள்ளது.

இருந்த போதிலும் இச்சட்ட ஒழுங்கு விதிகளை மதியாதும் மீறியும் செயற்படுவதன் விளைவாகவே பெரும்பாலான விபத்துகள் இடம்பெறுகின்றன. இவ்விதிகளை பேணிச் செயற்படும் போது பெரும்பாலான வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதுவே சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினரின் கருத்தாக இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் மோட்டார் பைசிக்கிளில் தலைக்கவசம் அணியாது வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறி அதனை செலுத்திய குற்றத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் 218,928 பேருக்கும், 2022 ஆம் ஆண்டில் 206,730 பேருக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தரவுகள் மோட்டார் பைசிக்கிளை செலுத்தும் போது பெருந்தொகையானோர் தலைக்கவசம் அணியாது அதனை செலுத்துவதை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் மோட்டார் பைசிக்கிளை செலுத்தும் போதும் பயணிக்கும் போதும் தலைக்கவசம் அணிவதானது தலைப்பகுதிக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கானது. ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தியாவசியமான உடல் உள்ளுறுப்புக்கள் தலைப்பகுதியில் காணப்படுகின்றன. அந்த உறுப்புக்களின் பாதுகாப்பு இன்றியமையாததாகும்.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் மோட்டார் பைசிக்கிளை வேகமாக செலுத்துவதையும், வீதி போக்குவரத்து சட்டங்களை மதியாது செயற்படுவதையும் பெரும்பாலான இளைஞர்கள் நவீன நாகரிகமாகக் கருதுகின்றனர். பல இளைஞர்கள் மோட்டார் பைசிக்கிளின் சைலன்சர்களது வெளிப்பகுதி மூடிகளை அகற்றிவிட்டு ஒலியெழுப்பியபடி மோட்டார் பைசிக்கிளை வேகமாக செலுத்துகின்றனர்.

இதன் விளைவாக பிரதேசமெங்கும் கடும் ஒலியெழுப்பப்படுகின்றது. அதனால் பிரதேசவாசிகள் அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர். அவை கைகலப்புகளுக்கு இட்டுச்சென்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

அதன் காரணத்தினால் மோட்டார் பைசிக்கிளை செலுத்தும் பெரும்பாலான இளைஞர்களின் இவ்வாறான செயற்பாடுகளை பெற்றோர் அறியாதவர்களாக இருப்பது தெரியவந்துள்ளது. தம் பிள்ளைகள் மோட்டார் பைசிக்கிள்களை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பது குறித்து ஒவ்வொரு பெற்றொரும் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் வீதிப் போக்குவரத்து சட்டங்களுக்கு அமைவாக மோட்டார் பைசிக்கிளை செலுத்துவதற்கு வழிகாட்ட வேண்டும். 'இளங்கன்று பயம் அறியாது' என்பதை மறந்து விடலாகாது.

அவ்வாறான ஒழுங்குபடுத்துதலின் ஊடாக மோட்டார் பைசிக்கிள்கள் மூலமான வீதி விபத்துக்களைப் பெரிதும் குறைத்துக்கொள்ளலாம்.

editor.tkn@lakehouse.lk

# 'நமக்கு நாம் மட்டுமே' கருப்பொருளை மையமாக கொண்டு நல்லிணக்க மனிதநேயத்தின் ஆரம்பம்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார உட்பட முக்கியஸ்தர்கள் பங்கேற்பு

அனைத்துக்கும் மேலாக மனிதநேயத்துக்கு மதிப்பளிக்கும் மனிதர்களாக சகல பேதங்களையும் மறந்து சகோதரத்துவமுடனும் அந்நியோன்ய புரிந்துணர்வோடும் ஒருவருக்கொருவர் கடமைகளை நிறைவேற்றும் மக்கள் சமூகமொன்றை கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்தில் 'நமக்கு நாம் மட்டுமே' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு செயற்படும் நல்லிணக்க மனிதநேயத்தின் ஆரம்பம் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப அமர்வு அண்மையில் நடைபெற்றது.







சர்வமதத் தலைவர்கள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோர் தலைமையில் பிரதம அதிதிகள் பலரின் பங்கேற்புடன் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

உன்னதமான மனிதநேயத்துடன் கூடிய மனிதாபமான குணாம்சங்களை பாதுகாத்து பொதுநல நோக்கோடு செயல்படும் அவைரினதும் ஒத்துழைப்பைப் பெற்று எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவிருக்கும் நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டங்களின் மேற்படி ஆரம்ப அமர்வில் பங்குபற்றிய ஆலிம் அஷ் ஷேக் அம்ஹர் ஹகம்தீன், உவிஷ்வ ஆனந்த சிவ குருகுலமின் செயலாளர், மக்கள் சங்கத்தின் உபதலைவர்/ தத்துவம் தொடர்பான போதகர் சிவா ஸ்ரீ சிவா, இந்து தத்துவஞானி ஷர்மா குருக்கள், இலங்கை மெதடிஸ்த சபையின் போதகர் அருட்தந்தை அனுர பேரேரா மற்றும் ஸ்ரீ லங்கா அமரபுர மற்றும் ராமஞ்ஞ நிகாயவின் முன்னாள் தலைமை ஆசிரியர், ரஷ்ய மொழி விரிவுரையாளர், இலங்கை_ ரஷ்ய நட்புறவு சங்கத்தின் தலைவர் பூஜ்ய பல்லேகந்தே ரதனசார தேரர் உள்ளிட்ட சர்வமத பிரதிநிதிகளும் இந்த நல்லிணக்க நிகழ்ச்சியின் தற்கால முக்கியத்துவம் பற்றி பல கருத்துக்களை முன்வைத்தனர்.

என்ற ஒரே உணர்வோடு ஒன்றிணைந்து நாம் எல்லோரும் செயற்பட வேண்டும்" என்று அனைத்துமதப் பிரதிநிதிகளும் கருத்து வெளியிட்டனர்.

எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்கள் தொடர்பாக ஒவ்வொருவருக்கிடையிலும் எந்தளவு முரண்பாடுகள் இருந்தாலும், நாம் அனைவரும் மனிதர்கள் என்ற எண்ணத்தோடு செயல்படுவது மிக முக்கியமானது. உன்னதமான மனிதநேயத்துடனும் மனிதாபிமானத்துடனும் நாம் செயல்பட வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர். மனிதாபிமனத்துடனும் சகோதரத்துவத்துடனும் உணர்வுபூர்வமாக இணைந்துள்ள மக்களால் எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்ள முடியும். துன்பங்கள், துயரங்கள், நோய்கள், விபத்துகள் ஏற்படும் போது எமக்கு கைகொடுப்பது எம்முடன் இருக்கும் சகோதர மக்களே. அச்சந்தர்ப்பத்தின் போது மனிதநேயம் என்ற உயர்ந்த குணத்தையே நாம் காண்கிறோம். இவ்விதமாக நாம் செயலாற்றும் போது 'எப்பொழுதுமே நமக்கு நாம் மட்டுமே' என்ற சொற்றொடர் முழு இலங்கை மக்களுக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கின்றது.

இக்கருத்தை அனைத்து மக்களிடையே கொண்டு செல்லும் நோக்கத்தில் 'நமக்கு நாம் மட்டுமே' என்ற கருத்தாக்கத்தை இந்நிகழ்ச்சியின் ஆரம்ப செய்தியாக நாம் உள்வாங்கியிருக்கிறோம். அந்நியோன்னிய புரிந்துணர்வு, நட்புணர்வு, கௌரவத்துடன் கூடிய மனிதாபிமான உணர்வோடு நீண்ட காலம் ஒற்றுமையுடன் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்கள் குழுக்களினதும் தேவைகளை அறிந்து நட்புணர்வு மேலும் அதிகரிக்க முயற்சி செய்யும் மக்கள் இந் நிகழ்ச்சித் திட்டத்தில் உண்மையான சகோதரத்துவத்துடனேயே இணைந்து செயல்படுகிறார்கள். தம்மோடு வாழும் சகல சகோதர மக்கள் குழுக்களுக்காக அவர்களின் தேவைகளை கண்டுகொண்டு அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சிப்பதும் ' நமக்கு நாம் மட்டுமே' என்ற கருத்தாக்த்தை உள்வாங்கியமையே காரணமாகும்.

நல்லிணக்கத்தின் மனிதாபிமான நிகழ்ச்சித் தொடரின் ஆரம்ப அமர்வில் பங்கேற்க முடிந்தமையிட்டு உண்மையிலேயே தாம் மகிழ்ச்சியடைகிறோம் எனவும் அங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

# நந்தவனம் பவுண்டேசன் ஏற்பாட்டில் சாதனை மாணவர்களுக்கு விருதுகள்

நந்தவனம் பவுண்டேசன் ஏற்பாட்டில் ஆண்டு தோறும் சாதனை மாணவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா கடந்த 18. 11. 2023 அன்று தமிழ்நாடு, திருச்சி அருண் உணவகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொறிஞர் ப. நரசிம்மன் எழுதிய நற்சுவைக் கவிதைகள், நம்மை மேம்படுத்தும் நற்பண்புகள் ஆகிய இரண்டு நூல்களும் வெளியிடப்பட்டன.







இனிய நந்தவனம் ஆலோசகர் மேஜர் டோனர் கே. சீனிவாசன் தலைமையில் நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழக முன்னாள் அமைச்சர் என்.நல்லுசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

இவர் உரையாற்றும் போது, "மாணவர்களை சிறுவயதிலேயே இது போல ஊக்குவித்து விருது வழங்குவது பாராட்டக் கூடியது. எதிர்காலத்தில் அவர்கள் இன்னும் நிறைய சாதிக்க இது நல்ல வாய்ப்பாக அமையும். இதே போல மாணவர்களுக்கு மொழி உணர்வையும் கற்றுக்கொடுக்க வேண்டும். தாய்மொழியில் சிந்திக்கும்போதுதான் அவர்களின் அறிவாற்றல் வளரும். அவர்களுக்குள் தன்னம்பிக்கையும் வளரும்" என்று தெரிவித்தார். திருச்சி பாட்சா பிரியாணி உரிமையாளர் அபுபக்கர் சித்திக், ஜெர்மனி தமிழருவி வானொலி நிறுவனர் நைனை விஜயன், சசிகலா விஜயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கவிஞர் பா.சேதுமாதவன், முனைவர் ஜா.சலேத் இருவரும் நூல் ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

பல துறைகளில் சாதனை புரிந்த பாடசாலை மாணவர்களுக்கு சாதனை மாணவர் விருது_ 2023 வழங்கப்பட்டது.

வி. ல. ரக்ஷ்தா (ஈரோடு), வி.ல.நந்தனராஜ் (ஈரோடு), வி.ஜெயச்செல்வன் (திருச்சி), சரக்ஷ்னா (திருச்சி), எஸ். அவினாஷ் (திருச்சி) ஆகியோர் விருது பெற்றனர்.

நந்தவனம் மக்கள் தொடர்பாளர் பா. தனபால் அனைவரையும் வரவேற்க, பொறிஞர் ப. நரசிம்மன் ஏற்புரை நிகழ்த்தினார். விழாவின் நிறைவாக நித்யா கோபாலன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# மாணவர் விஞ்ஞான பாடத்தை விருப்பத்துடன் கற்கும் நிலையை ஏற்படுத்தியவர் ஆசிரிய ஆலோசகர் நிலூபர்

யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ஏ.ஜே.நிலூபர் அவர்களுக்கான அல்குர்ஆன் தமாம் மற்றும் பிரார்த்தனை நிகழ்வுகள் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றன.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் (நழீமி) தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளை கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் அக்கரைப்பற்று அபுபக்ர் சித்தீக் இஸ்லாமியக் கல்லூரி மாணவர்கள் அல்குர்ஆன் தமாம் நிகழ்வில் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து, கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம்.கலாமுல்லாஹ் (ரஷாதி) அன்னாருக்கான பிரார்த்தனையை நிகழ்த்தினார்.

நிகழ்வில் நினைவுரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ் ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், "அக்கரைப்பற்று கல்வி வலய மாணவர்கள் விஞ்ஞான பாடத்தை விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் கற்கும் நிலையை ஏற்படுத்தியவர் நிலூபர்.





யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர் ஏ.ஜே. நிலூபர் அவர்களுக்கான பிரார்த்தனை நிகழ்வில் புகழாரம்

அவரது பணி வினைத்திறனாக அமைந்திருந்தது. க.பொ.த (சா.தர) பரீட்சை, விஞ்ஞானபாட பெறுபேற்றில் அக்கரைப்பற்று கல்வி வலயம் தேசிய ரீதியில் முன்னணி வகிப்பதற்கு விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.அப்துல் வாஹித், மர்ஹூம் நிலூபர் ஆகியோர் ஆற்றிய மகத்தான பணி பிரதான காரணம். அவர்கள் இரவு பகல் பாராது அர்ப்பணிப்புடன் பணியாற்றியதனால் எங்களுக்கு நிறைவான வெற்றி கிடைத்தது. ஆசிரிய ஆலோசகர் நிலூபர் அவர்களின் மரணம் கல்விக்கும், மாணவர்களுக்கும் பேரிழப்பாகும்" என்றார்.

அக்கரைப்பற்று அபுபக்ர் சித்தீக் இஸ்லாமியக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம்.கலாமுல்லாஹ் (ரஷாதி) கருத்து வெளியிடுகையில் "நல்லதொரு மனிதர், சிறந்த ஆசிரியர், உத்தமர், மிருதுவான மனம் படைத்தவர், பொறுமைசாலி, இங்கிதமானவர். எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர், யாருக்கும் தொந்தரவு இல்லாதவர் நிலூபர் ஆவார்" என்றார்.

இந்நிகழ்வில் பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், கணக்காளர் கே.லிங்கேஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.றிம்ஸான், மர்ஹூம் நிலூபர் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ஏ.ஜே.நிலூபர் தனது அட்டாளைச்சேனை கமநலப் பிரிவிலுள்ள, கணையாங்குழி கண்ட நெற்காணிக்கு அதிகாலை வேளையில் பயணித்துக் கொண்டிருந்த போது, யானைத் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில்உயிரிழந்தார்.

முகம்மட் றிஸான்
அட்டாளைச்சேனை மத்திய நிருபர்





# மாலைதீவு ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி ரணில்








மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி மொஹமட் முய்சுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டதுடன் மாலைதீவு ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்விலும் கலந்துகொண்டார். கடந்த 17ஆம் திகதி மாலைதீவின் தலைநகர் மாலேயில் பிரமாண்டமான முறையில் பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு தலைவர்களையும் இதன்போது சந்தித்து உரையாடினார். ஜனாதிபதிக்கு மாலைதீவில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

# பாசிக்குடாவில் 61 மில்லியன் டொலர் முதலீட்டில் ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தி திட்டம்

## • 2000 பேருக்கு நேரடி தொழில் வாய்ப்பு; 5000 குடும்பங்கள் பயனடையும் கருத்திட்டம்



இலங்கை கடந்த வருடம் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியது. நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றார். அதனைத் தொடர்ந்து பொருளாதார ரீதியில் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதை நோக்காகக்கொண்டு வேலைத்திட்டங்களை பரந்த அடிப்படையில் ஆரம்பித்தார். அவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலத்தில் பயனளிக்கத் தொடங்கின. அதனால் பொருளாதார நெருக்கடி காலத்தில் நிலவிய அசௌகரியங்களும் பாதிப்புக்களும் பெரும்பாலும் நீங்கியுள்ளன. நாடு மறுமலர்ச்சிப் பாதையில் நம்பிக்கையுடன் பிரவேசித்திருக்கிறது.

நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதையும், பொருளாதார நெருக்கடி மீண்டும் நாட்டில் ஏற்படுவதைத் தவிர்ப்பதையும் இலக்காகக் கொண்டு ஜனாதிபதி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். அவற்றில் முதலீடுகளின் வருகைக்கும் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. நாட்டின் அபிவிருத்திக்கு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் மிகவும் அவசியம். அதேநேரம் உள்நாட்டில் காணப்படும் வளங்களையும் நாட்டின் அபிவிருத்திக்காக உச்சளவில் பயன்படுத்திக் கொள்வது அவசியம்.

இலங்கையின் அமைவிடமும் சீதோஷண நிலையும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடியனவாக உள்ளன. எழில்மிகு கடற்கரைகள், நீர்வீழ்ச்சிகள், வரலாற்று மரபுரிமைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்கள் இங்கு இயற்கையாகவே அமையப்பெற்றுள்ளன. அவற்றை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

அந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் முதலீடுகளின் வருகைக்கும் சுற்றுலா மேம்பாட்டுக்கும் பல்வேறு ஊக்குவிப்பு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாக ஒவ்வொரு வருடமும் 50 இலட்சம் உல்லாசப் பயணிகளை நாட்டுக்குள் வரவழைப்பது இலக்காகும்.

இந்நிலையில் கிழக்கில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய தளங்களில் ஒன்றாக விளங்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாசிக்குடா பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தித் திட்டமொன்று 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் முன்னெடுக்கப்பட உள்ளது.

'மட்டக்களப்பு மாவட்டத்தின் மேம்பாட்டுக்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிக்கும் வகையில் இந்த ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்' என்று இத்திட்டத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருமான மங்கள செனரத் தெரிவித்திருக்கிறார்.




இத்திட்டம் குறித்து அவர் குறிப்பிடுகையில், "பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு பங்களிப்பது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அப்போதுதான் நாட்டு மக்களுக்கு வளமானதும் சுபீட்சம்மிக்கதுமான பொருளாதார வாழ்வைப் பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருக்கும். அந்த வகையில் பாசிக்குடா பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட உள்ள ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 35 அறைகளையும் 250 பேர் அமரக்கூடிய மாநாட்டு மண்டபத்தையும் உள்ளடக்கிய ஐந்து நட்சத்திர ஹோட்டல், ஆயுர்வேத சிகிச்சை நிலையம், சுற்றுலாப் பயணிகளுக்கான உணவுச்சாலை, 50 ஏக்கரில் 09 ஹோல்களை கொண்ட சர்வதேச தரத்திலான கொல்ப் மைதானம், பிரதேசத்திலுள்ள அரும்பொருட்களை உள்ளடக்கிய காகிதாதி அரும்பொருட்காட்சியகம், ஹெலிகொப்டர் தரையிறங்குவதற்கான தளம், 100 கைத்தொழில் இயந்திரங்களுடனான பேக் தொழிற்சாலை, 100 ஜுக்கி தையல் இயந்திரங்களை உள்ளடக்கிய ஆடைத்தொழிற்சாலை, விளையாட்டு மைதானம், சகல வசதிகளுடனான பங்களாக்கள், கொரிய தொழில்நுட்பத்துடனான பசுமை இல்ல பயிர்ச்செய்கை, மட்பாண்டத் தொழிற்சாலை, தண்ணீர் போத்தல் தொழிற்சாலை, இறால் வளர்ப்புப் பண்ணை, கோழிவளர்ப்பு பண்ணை ஆகியனவும் அமைக்கப்படும்.

அத்தோடு வேலைவாய்ப்பு தேடும் இளைஞர், யுவதிகளின் நலன்களை முன்னிலைப்படுத்தி இங்கு தொழில்பயிற்சி நிலையமொன்று அமைக்கப்படும். ஜப்பான், கொரியா மொழிகள் பயிற்சிகள் அடங்கலாக முன்பள்ளி ஆசிரியர் கற்கைநெறிகளும் இங்கு இலவசமாகக் கற்றுக்கொடுக்கப்படும். அத்தோடு 25 மெகா வார்ட் சூரியசக்தி மின்நிலையமொன்றும் நிறுவப்படும். அவற்றின் மின்சாரம் இக்கருத்திட்டத்தின் கீழ் இங்கு அமைக்கப்படும் நான்கு தொழிற்சாலைகளுக்கும் இங்கு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும். ஏனைய 21 மெகாவார்ட் மின்சாரமும் இலங்கை மின்சார சபையின் பயன்பாட்டுக்கு வழங்க திட்டமிட்டுள்ளோம்.

இந்த அபிவிருத்தித் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது முதல் 18 மாதங்களில் நிறைவு செய்யப்படும். இக்கருத்திட்டம் முழுமையாக செயப்படும் போது 2000 பேர் நேரடி தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதோடு 5000 குடும்பங்கள் பிரதிபலன்களை அடைந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்' என சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம் இந்த ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இச்சமயம் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். யோகேஸ்வரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தனர். ஜனாதிபதியின் ஆதரவுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படும் என சுட்டிக்காட்டிய முகாமைத்துவப் பணிப்பாளர் மங்கள செனரத், மட்டக்களப்பு தனியார் பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சி அளிக்கவென 2026 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு தொழிற்சாலைகள் இக்கருத்திட்டத்தினுள் அமைக்கப்படும்' எனவும் கூறினார்.

முதலீடுகளை கவர்ந்திழுக்கும் வகையிலும் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் வகையிலும் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி முன்வைத்துள்ள யோசனைகளும் முன்மொழிவுகளும் இக்கருத்திட்டத்திற்கு பக்கபலமாக அமையும். அது மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதார மறுமலர்ச்சிக்கும் தேசிய பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாரிய உந்துசக்தியாக இருக்கும்.

மர்லின் மரிக்கார்

# இன்றைய பலன்கள்

**( 20. 11. 2023 )**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**
திடீர் திடீரென செலவுகள் வந்து மனதை வாடவைக்கும். ஏதேனும் ஒரு பொருள் வாங்கவோ அல்லது சுப காரியங்கள் நடத்தவோ சேமித்த தொகை வேறு வழியில் செலவாகலாம்.



**ரிஷபம்:**
குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் வந்து கொண்டே இருக்கும்.



**மிதுனம்:**
பிள்ளைகளின் எதிர்காலத்தை பற்றி கவலை அகலும். வாங்கிய கடனை கொடுத்தும் கொடுத்த கடனை வசூலித்தும் மகழும் நேரம் இது.



**கடகம்:**
அயல் நாட்டு அழைப்புகளை நம்பி செயல்படுவதால் மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். சில்லறை கடன்களில் இருந்து விடுபடுவீர்கள்.



**சிம்மம்:**
ஆரம்பத்தில் சில விஷயங்கள் அச்சுறுத்தலாக தோன்றலாம். சில காரியங்கள் முடியாமல் எழுபறி நிலையில் இருக்கலாம்.



**கன்னி:**
பொருளாதாரத்தில் சில சமயம் நெருக்கடிகள் அதிகரிக்கும். ஒரு கடனை அடைக்க மற்றும் ஒரு கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படும்.



**துலாம்:**
அதிகாரிகளின் அனுகூலங்களும் ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பும் தக்க சமயத்தில் கை கொடுக்கும். இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் வரும்.



**விருச்சிகம்:**
பணி புரியும் இடத்தில் பாராட்டும் புகழும் குவியும் பதவியில் இருப்பவர்கள் பக்கபலமாக இருப்பர். விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும்.



**தனுசு:**
நல்ல நல்ல சந்தர்ப்பங்கள் வந்தாலும் அவை நழுவி செல்லும் சூழ்நிலை உருவாகும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியவில்லை என்று கவலைப்படுவீர்கள்.



**மகரம்:**
உடல் உபாதைகளை சந்திக்க நேரிடும். பிள்ளைகளாலும் தொழில் ரீதியாகவும் பிரச்சனைகள் வந்து கொண்டே இருக்கும்.



**கும்பம்:**
தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. சுகங்களும் சந்தோஷங்களும் குறையும். பணப் பற்றாக்குறையின் காரணமாக ஒரு சிலர் கடன் வாங்கும் சூழ்நிலை கூட உண்டு.



**மீனம்:**
உத்தியோகத்தில் முன்னேற்றம் இல்லாத இடமாற்றங்கள் வரலாம். நன்மைகளையும் எதிர்பார்க்கலாம். மாதத் தொடக்கத்தில் மகிழ்ச்சி இருக்கும்.



## கிளி. புதுமுறிப்பில் நன்னீர்...

செய்யவும், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை வளர்க்கவும் மீன்குஞ்சுகளை வைப்பிலிடும் வேலைத்திட்டம் (19) ஆரம்பமானது.

புதுமுறிப்பு நன்னீர் மீன் உற்பத்தி பண்ணையில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர், ஈழமக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள், மீனவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் இத்திட்டத்துக்காக 100 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிகழ்வாக 02 இலட்சம் மீன் குஞ்சுகள் 05 தொட்டிகளில் விடப்பட்டன. ஏனைய 25 தொட்டிகளிலும் மீன்குஞ்சுகளை வைப்பிலிட நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பொத்துவில் டிப்போ பிரதான...

மற்றும் அறுகம்பே சுற்றுலா வலயத்தை ஒருங்கிணைத்து போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் பொத்துவில் உப பஸ் டிப்போ நேற்று பிரதான டிப்போவாக தரம் உயர்த்தப்பட்டது.

இதன் போது பொத்துவில் பஸ் டிப்போவுக்கு போக்குவரத்து அமைச்சரினால் நவீன சொகுசு பஸ் வண்டியொன்றும் வழங்கி வைக்கப்பட்டதுடன் 60 மில்லியன் ரூபாய் செலவில் புதிய கட்டிடத்துக்கான அடிக்கல்லும் நட்டி வைக்கப்பட்டது.

நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்,

பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாரை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யூ. டி.வீரசிங்க, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பொறியியலாளர் லலித் டி அல்விஸ், போக்குவரத்து சபையின் உயரதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு கொண்டனர்.

பஸ் டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான முதற்கட்ட நிதியாக சுமார் 60 மில்லியன் ரூபாவை பாராளுமன்ற உறுப்பினர் எஸ் எம் எம் முஷாரப்பின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்வின் பணிப்புரைக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தது.

## 'வற்' வரி அதிகரிக்கப்பட்டாலும்...

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். உலக வங்கியுடனான இணக்கப்பாட்டுக்கு இணங்க அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வற் வரியில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.எனினும் அது தற்காலிக வேலைத் திட்டமாகவே முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வற் வரியில் அதிகரிப்பை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எவ்வாறாயினும் வரி வலையமைப்பில் விரிவான முறைப்படுத்தல் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர்,

அதன் மூலமாக நிவாரணங்களை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## KKS நாகபட்டினம் பயணிகள்...

அரசாங்கங்களிடமிருந்தும் கிடைத்துவிட்டன. இதற்காக இந்திய கொடியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 'சிவகங்கை' என்ற கப்பலை தமது நிறுவனம் எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கப்பல் டிசம்பர் நடுப்பகுதியில் நாகபட்டினத்துக்கு வந்து சேருமென நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

கப்பலில் 150 பயணிகள் தலா 60 கிலோ பொதிகளுடன் (check in baggage) பயணிக்கலாம். ஒரு வழிப் பயணக் கட்டணமாக இந்திய ரூபாவில் 4,250 மற்றும் வரியும் அறவிடப்படும். இலங்கை ரூபாவில் 17,000 மற்றும் வரிகள் அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் பிரதான விற்பனை முகவர்களான 'மெற்றோ வொயேஜஸ்' மூலமாகவோ அல்லது அவர்களின் துணை முகவர்களினூடகவோ, விரைவில் வெளியிடப்பட இருக்கும் android & IOS app மூலமாகவோ கப்பல் பயணத்துக்கான பதிவுகளை மேற்கொள்ளமுடியுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கின் கல்வித் தரத்தை...

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோதே, அவர்கள் இவ்வாறு உறுதியளித்தனர். வட மாகாணத்தில் அதிகரித்துள்ள மாணவர்களின் இடைவிலகல், பிரத்தியேக வகுப்புகளுக்கு அதிக நேரத்தை செலவிடுதல், இணை பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பு குறைந்திருத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தனது கவலையை வெளியிட்ட ஆளுநர், இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் எனவும் கூறினார். மாணவர்கள் மீது அதிக அழுத்தங்களை பிரயோகிப்பதால், அவர்கள் மனநிலை ரீதியாக பாதிக்கப்படுவதாகவும், வாழ்க்கையின் அடுத்த நகர்வுக்கு அது இடையூறாக அமைவதாகவும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஆகவே, பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதோடு, இணை பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதன் பின்னர், வட மாகாண அதிபர்கள் சங்கத்தினர் ஆளுநரின் ஆலோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததுடன், இவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதாக கூறினர்.

வட மாகாண கல்வி மேம்பாட்டை முன்னெடுப்பதற்கு தேவையான 19 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினையும் அதிபர்கள் சங்கத்தினர், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் கையளித்தனர்.

## விதண்டாவாதங்களுக்கு பதிலளிப்பதைவிட...

கொண்டு, மற்றையவர்களை தாழ்த்தி பேசி காலத்தை வீணடிப்பதைவிட, மலையக மாற்றம் பற்றியே நான் சிந்தித்துக்கொண்டிருக்கி றேன். அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறேன்.

இதற்கு எமது மக்களும் ஆதரவு வழங்கி வருகின்றனரெனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா நானுஓயா, கிளாரண்டன் தோட்டத்தில் தற்காலிக குடில்களில் வசித்த குடும்பங்களுக்கு, குடிநீர், மின்சாரம், உட்கட்டமைப்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகளை, அமைச்சர் ஜீவன் தொண்டமான் கடந்த 18 இல், வழங்கி வைத்தார்.அத்துடன், அவர்களுக்கு பிரத்தியேக 'முகவரி' வழங்கப்பட்டு, வீடுகளுக்கு முன் வைப்பதற்கான கடித பெட்டியும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

" மலையகத்தில் வீடு கட்ட முடியாது, வீடு கட்டுவதற்கு நிதி இல்லை என்றெல்லாம் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவற்றுக்கு பதிலளிப்பதற்கு நாம் விரும்பவில்லை.

தனிநபர்களையும் விமர்சிக்கவில்லை. மாறாக செயலில் இறங்கினோம். இதன்பலனாகவே வீடுகளை கையளிக்க முடிந்துள்ளது.

நுவரெலியா மாவட்ட மக்கள் பொதுத் தேர்தலின்போது எனக்கு அமோக ஆதரவை வழங்கினர். எனவே, மக்கள் நலன்கருதி, அனைத்து மலையக கட்சிகளையும் ஒன்றிணைக்க முயற்சித்தேன். நல்லெண்ணத்துடன் செயற்பட்டேன். அதற்கான சிறந்த ஆரம்பத்தையும் வழங்கினேன். ஆனால் நேரில் ஒன்றையும், வெளியில் சென்று மற்றுமொன்றையும் பேசுபவர்கள்தான் இருக்கின்றனர். கடும் சவால்கள், போராட்டங்களுக்கு மத்தியிலேயே காணி உரிமையை பெற்றுக் கொடுத்துள்ளோம். பழைய விடயங்களை வைத்து எனக்கு ஆதரவு வழங்க வேண்டியதில்லை. இப்போது என்ன செய்கின்றோம் என சிந்தித்து பாருங்கள், அதற்கான பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளது. மக்களுக்கு பிரச்சினை என்றால் நாம் வருகின்றோம், நெருக்கடியான சூழ்நிலையிலும் இந்த வீட்டு திட்டத்தை நிறைவு செய்துள்ளோம்.

எமக்கு ஒரு இலட்சத்து 76 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன. 10 ஆயிரம் வீடுகள்தான் தற்போது எம்வசம் உள்ளன. எனவேதான் காணி உரிமையை பெறுவதற்கான நடவடிக்கையில் இறங்கி, அதனை முன்னெடுத்துவருகின்றோம்.

## 55 வயது நிறைவடைந்த...

சேவை இணைப்பு செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள குழு அறிக்கையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. பிரதமரின் செயலாளர் அநுர திசாநாயக்கவின் தலைமையிலான 06 பேர் கொண்ட இக்குழுவின் அறிக்கை மூலம், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஊழியர்களை நியமிப்பதற்காக இதுவரை நடைமுறைப்படுத்தியிருந்த முறைமை ஒழிக்கப்படவுள்ளது.

இதற்குப்பதிலாக அமைச்சின் கீழுள்ள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட திட்டத்துடன் இணைந்ததான வெற்றிடங்களை நியமிப்பது தொடர்பில் புதிய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக விசேட நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள அதிகாரிகளை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன .

நிறுவனம் ஒன்றுக்காக ஒரு அதிகாரியை மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்வதற்கு அந்தக் குழுவில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது, தாம் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்துக்கு இடமாற்றம் பெறுவதற்கான முன்னுரிமையை வழங்குவதற்கும் அந்தக்குழு யோசனை முன்வைத்துள்ளது.

## நாட்டின் பல பகுதிகளில்...

தெரிவித்தார். வானிலை குறித்து மேலும் அவர் கூறுகையில்,

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய, வடமேல், வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் குருநாகல் மற்றும் மன்னார் மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லிமீற்றர் வரையிலான பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேல், தென் மற்றும் வட மாகாணங்களிலும் அத்துடன் புத்தளம் மாவட்டத்திலும் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும் என்பதால், பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பாடு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணிக்கு 20 30 கிலோமீற்றர் வேகத்தில் சிலாபம் தொடக்கம் கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் தென்மேற்குத் திசையில் இருந்தும் புத்தளம் தொடக்கம் மன்னார், காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடல் பிராந்தியங்களில் வடகிழக்குத் திசையிலிருந்தும் நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களில் மாறுபட்ட திசைகளில் இருந்தும் காற்று வீசும்.

## யாழ். உரும்பிராய் பகுதியில்...

கோண்டாவில் பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் வேலை செய்யும் நபரே கொலைசெய்யப்பட்டவராவார்.

கைதானவரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் நேரில் சென்று விசாரணைகளை முன்னெடுத்ததுடன், சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

## பருத்தித்துறை கடற்பரப்பில்...

பாம்பன் பகுதியிலிருந்து இரண்டு படகுகளில் வந்து மீன்பிடியில் ஈடுபட்ட 22 பேரையும் படகுகளுடன் கடற்படையினர் கைது செய்துள்ளனர். கைதான அனைவரும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று (19) காலை யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## நீதியை நிலைநாட்டும் முயற்சிகளை...

ரஞ்சித்தும் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவர்களும் பரிசுத்த பாப்பரசரை சந்தித்தபோதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பிலான நீதி, உண்மையை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை ஒருபோதும் கைவிடவேண்டாமென பரிசுத்த பாப்பரசர் தன்னிடம் கேட்டுக்கொண்டதா மெல்கம் ரஞ்சித் கர்தினால் தெரிவித்துள்ளார்.

## சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட...

65 ஆயிரம் ஏக்கர் வரட்சியினால் சேதமடைந்தன. 11 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை அறுவடைக்கு தயாராகவிருந்தபோது, பெய்த மழையினால் இவை அழிவடைந்திருந்தன.

# யாழ்ப்பாணத்தில் விபஸ்ஸனா தியான பயிற்சி முகாம்

**05 முதல் 16 டிசம்பர் 2023 வரை**



சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரால் வடிக்கப்பட்டு, பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின்னிடமிருந்து கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்று தந்த ச. கோயங்காவால் நடத்தப்படும் விபஸ்ஸனா தியான முறை பற்றி அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

குருஜி எஸ்.என் கோயங்காவின் வழிவந்த தியான ஆசிரியர்கள், மோகன் ராமசந்திரன், திருமதி ஜானகி சுப்பிரமணியம் மற்றும் சிறுவர்களுக்கான தியான ஆசிரியர்கள் பாலசந்திரன் கிருஸ்ணமூர்த்தி, சரவணன் செல்வராஜ், திருமதி. சத்யவாணி முருகன் ஆகியோர் ஒன்றிணைந்து தமிழ், ஆங்கில மொழிகளில் டிசம்பர் 5 முதல் 16ம் திகதி வரை பத்து நாட்களுக்கான விபஸ்ஸன தியான வதிவிடப்பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இவர்களது பயிற்சிநெறியில் கலந்து கொள்ளும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அனைத்து தியான நிகழ்ச்சிகளும். உணவும், தங்குமிடவசதியும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், பாத்திமா றிட்ரீட் ஹவுஸ் பண்டதரிப்பு இடத்தில் இப்பயிற்சி நடைபெறவுள்ளது. மனத் தூய்மைக்கான இந்த தியான பயிற்சி நெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலும் தகவல்களுக்கு 0773504491, 0716439454 தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

**எச். எச். விக்கிரமசிங்க**

## மின்சார துறையில் புரட்சி:...

டி.ரோசா தெரிவித்துள்ளார். இலங்கையில் அணுசக்தி சட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

இதற்காக சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் அணுசக்தி மற்றும் ஒப்பந்தச் சட்டப் பிரிவின் தலைவர் அந்தோனி வெதரோல் உட்பட நான்கு பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.

கொழும்பு துறைமுக நகரம், இலகுரக ரயில் உள்ளிட்ட நாட்டின் புதிய திட்டங்களுக்கு அணுசக்தி மின்சார வழங்கல் மிகவும் பொருத்தமான தெரிவாகும்.

## நாடு முழுவதும் டெங்கு...

பேரும், கண்டி மாவட்டத்தில் 7,068 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 3,371 பேரும், கேகாலை மாவட்டத்தில் 3,065 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 2,933 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 2,797 பேரும் பதிவாகியுள்ளனர்.

நவம்பர் 06 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை 1,586 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதுடன், அது 3.5 வீத அதிகரிப்பாகும் என்றும் அந்த பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## சீனி தட்டுப்பாடுக்கு வாய்ப்பில்லை...

அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு அதிகரித்த விலையில் சீனியை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை சுற்றிவளைப்புச் செய்யும் நடவடிக்கைகளில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நிர்ணய விலையில் சீனியை கொள்வனவு செய்தல் மற்றும் சீனி தொடர்பில் வீண் தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல் ஆகியவற்றை தடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு மட்டுமின்றி நாட்டு மக்களுக்கும் உரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறான முறைகேடுகளின் போது, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு மக்கள் அறிவிக்க வேண்டியது அவர்களின் பொறுப்பு என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்...

"உலக தெற்கின் குரல்" மாநாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் தலைமைத்துவத்தையும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் முன்னுரிமைகள் தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதால் கிடைக்கக்கூடிய முன்னேற்றகரமான தாக்கத்தையும் வரவேற்றார்.

இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்ற G20 உச்சிமாநாட்டின் வெற்றியை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அதனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் முன்னுரிமைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடிந்ததாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதலாம் தவணைக் கடனைப் பெற்றுக்கொண்டமை மற்றும் இலங்கையின் இரு தரப்புக் கடன் தொடர்பாக உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவினால் அடைந்துகொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டினார்.

படுகடன் தொடர்பிலான பிரச்சினைகளின் கடினத் தன்மையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கான நிலையான தீர்வு காண கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நீண்டகால வளர்ச்சிக்கான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதும், உறவுகளை மேம்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இதேபோல் தனது அண்மைய இந்திய விஜயத்தின்போது பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து வெளியிடப்பட்ட கூட்டுக் கொள்கையின் பலனாக பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடையும் வகையில் இரு நாடுகளினதும் உறவுகளை பலப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## மீன்பிடிப் படகு கடலில்...

காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த அனர்த்தம் கடந்த 18 இரவு 7:15 மணியளவில் இடம்பெற்றதாகவும், இப்படகில் ஜப்பானிய பிரஜை உட்பட நால்வர் பயணித்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படகு கடலில் மூழ்கியபோது அதிலிருந்த இருவர் உயிர் காக்கும் அங்கியை அணிந்திருந்ததால் அவர்கள் இருவரும் உடனடியாக மீட்கப்பட்டனர். ஏனையோர் நேற்றைய தினம் காலை 07 மணியளவில் சிலாபம் இரணவில கடற் பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீண்ட தேடுதலுக்குப் பின்னர் அவர்கள் பயணம் செய்த படகும் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்டுள்ள ஜப்பான் பிரஜை மாரவில அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இவரது 70 இலட்சம் ரூபா பணம் கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களும் காணாமற் போயுள்ளன.

## வைத்தியசாலையை கட்டிமுடித்த... 03 பக்கம் தொடர்ச்சி

தருமாறு கோரிக்கை முன்வைத்ததுடன், அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்கவினால் வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

இந்த வேண்டுகோளுக்கமைய 34 மில்லியன் ரூபா செலவில் அம்பாறை மாவட்டத்தில் கோனோகொல்ல கிராமத்தில் வைத்தியசாலை நிர்மாணிப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆளுநரின் இந்த துரித நடவடிக்கைக்கு அம்பாறை மாவட்ட மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## தேர்தலை இலக்குவைத்த... 3 ஆம் பக்கம் தொடர்ச்சி

உடனடி காரணங்களை வெளிப்படுத்தும் வரலாற்றுத் தீர்ப்பின் பின்னணியில் இந்த வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படுகிறது. நீதிமன்றத் தீர்ப்பு இலங்கையின் அரசியல் நோக்கு நிலையில், பாரிய தாக்கத்தை ஏற்படுத்துமென, நான் நம்புகிறேன்.

அத்துடன், இந்த தீர்ப்பு அரசியல் நடத்தையின் பொறுப்புணர்வை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

அத்துடன், எந்த அறிவியல் ஆய்வும் இன்றி எடுக்கப்பட்ட முடிவுகளால், நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் சதவீதத்தை இழந்து, மக்கள் மிகவும் வேதனையான சூழலையும், உலகத்தின் முன் அவமானகரமான சூழலையும் அனுபவிக்க நேரிட்டுள்ளது. இலங்கை பொருளாதார ரீதியில் தலை நிமிர வேண்டுமாயின், நாட்டை சரியான பாதைக்கு வழிநடத்த வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, கோஷங்கள் மற்றும் விசித்திரக் கதைகளை உள்ளடக்கிய வழமையான, பாரம்பரியமான வரவு செலவுத் திட்ட உரைகளையே இலங்கையில் நாம் இன்னும் பார்க்கிறோம்.

கடந்த சில ஆண்டுகளாக வரவு செலவு திட்ட உரைகள் அதிக இலக்குகளைப் பற்றி பேசுகின்றன. என்றாலும், நாம் செயல்களையும் முடிவுகளையும் கவனிக்கும் போது, அந்த இலக்குகளை அடைவதில் தோல்வியைத் தொடர்ந்து காண்கிறோம்.

வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை இடைவெளியை எடுத்துக்கொண்டாலும், அரசின் வருமானத்தை எடுத்துக்கொண்டாலும், அரச செலவினங்களை எடுத்துக் கொண்டாலும், வரவு செலவுத் திட்ட ஆவணங்களில் கூறப்பட்டுள்ள இலக்குகள் எட்டப்படவில்லை என்பதே யதார்த்தம்.

2023 வரவு செலவுத் திட்டத்தில் 2022ஐ விட 65% வருவாய் அதிகரிப்பை எட்டுவது குறித்து அரசாங்கம் பேசியது. ஆனால், அந்த இலக்கை நெருங்க முடியவில்லை. இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 2023ஐ விட 45% வருமான அதிகரிப்பு குறித்து பேசுகிறது. அதாவது வருவாயை 4 டிரில்லியனாக அதிகரிப்பது என்பது ஒரு இலக்காகும்.

**புத்தளம் மாவட்டத்தில் அடைமழை**

# 25 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் சுமார் 2265 பேர் பாதிப்பு; இருவர் பலி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

தெதுரு ஓயா நீர்த்தேக்கம் நிரம்பி வழியும் மட்டத்தை எட்டியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை, தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 25 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 584 குடும்பங்களைச் சேர்ந்த 2265 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வாரியபொல, நிகவெரட்டிய, மஹவ, கெபோய்கனே, பிங்கிரிய, சிலாபம், ரஸ்நாயக்கபுர, ஆராச்சிக்கட்டுவ மற்றும் பல்லம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் தாழ்நிலப் பிரதேசங்களில் சிறிதளவு வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



எனவே, அப்பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறும் நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவில் 3 கிராம சேவகர் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் 2 கிராம சேவகர் பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேரும், முந்தல் பிரதேச செயலகப் பிரிவில் 13 கிராம சேவகர் பிரிவில் 388 குடும்பங்களைச் சேர்ந்த 1408 பேரும், மஹாவெவ பிரதேச செயலகப் பிரிவில் 1 கிராம சேவகர் பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேரும், கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் 2 கிராம சேவகர் பிரிவில் 114 குடும்பங்களைச் சேர்ந்த 574 பேரும், வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 104 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வெள்ள அனர்த்தம் காரணமாக இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நாத்தாண்டிய மற்றும் முந்தல் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தலா ஒவ்வொரு மரணம் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், வெள்ளம் காரணமாக முந்தல் பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் நான்கு வீடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மடவளை பஸார் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம்





ஐக்கிய இராச்சிய மடவளை பஸார் நலன் புரிச்சங்கத்தின் 18ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் லெஸ்டர் நகரின் Crown Hill Community College கேட்போர் கூடத்தில் அண்மையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இங்கிலாந்தின் சகல பாகங்களில் இருந்தும் மடவளை வாழ் மக்களும் அவர்களின் நண்பர்களுமாக சுமார் 400 பேர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். நிர்வாக சபைக்கு தேவையான ஐந்து அங்கத்தவர்கள் சபையிலிருந்து முன்மொழியப்பட்டு தெரிவு செய்யப்பட்டனர்.

ஐக்கிய இராச்சிய மடவளை பஸார் நலன் புரி சங்கமானது இங்கிலாந்தில் வாழும் மடவளை பஸார் மக்களால் 2005 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மேலும் ''உலகெங்கும் பறந்து சென்றாலும் பிறந்த ஊரை மறந்து விடாதீர்கள்'' என்ற தெளிவான கோஷத்தோடு, தாம் பிறந்து வளர்ந்த மடவளை பஸாரில் பல்வகை நலன்புரி வேலைகளில் கடந்த 18 வருடங்களாக வெற்றிகரமாக பணியாற்றி வரும் நலன்புரி அமைப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சீனன்கோட்டை அல்ஹுமைஸராவில் 09 மாணவர்களுக்கு சிறந்த பெறுபேறு

பேருவளை, சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையிலிருந்து 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் ஒன்பது மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப்பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் இப்றாஹீம் தெரிவித்தார்.

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் அஹமட் அதீப் 164, எம்.ஆர்.எம். அம்ஹர் 160, எம்.எஸ். சாஹிட் ஜுனைத் 159, எம்.ஐ. ராயிட் ஸலாஹ் 154, எம்.எஸ்.எம். சஸான் சியான் 151, எம்.எப்.எம். ஆகித் 150, எம்.ஐ.எம். மஹ்தி 150, அம்மார் அஹமட் 149, எம்.ஆர்.எம். அப்ஸல் 147 ஆகிய மாணவர்களே சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.



முஸ்லிம் சமய, கலாசார திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைஸல், ஹஜ் குழுவின் தலைவர் இப்றாஹீம் அன்ஸார் ஆகியோர் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம். இச்சமயம் 2024 ஆண்டுக்கான இலங்கை ஹஜ் யாத்திரிகர்களுக்கான ஏற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

# கோட்டகொட முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து மூன்று மாணவர்கள் சித்தி







அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் படி மாத்தளை கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டகொட முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்கு தோற்றியவர்களுள் 3 மாணவர்கள் முதல்முறையாக சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் கே.எம்.எம் பர்ஹான் தெரிவித்தார். சித்தியடைந்த மாணவர்கள் வருமாறு; எம்.இஸட். ஸக்கி அஹ்மத் (149), எம்.ஏ.எப். ஹைதா (152), எம்.எப்.எப். ஹைபா(151) புள்ளிகளைப்பெற்றுள்ளனர்.

(படங்கள்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தும் அருகதை எவருக்கும் கிடையாது

## சபையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தும் அருகதை எவருக்கும் கிடையாது என்றும் நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சித்துக் கொண்டிருக்காமல் உரிய தரப்பினர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தினால் நாட்டு மக்கள் பாராளுமன்றத்தை கடுமையாக விமர்சிப்பதை தவிர்க்க முடியாது என குறிப்பிட்ட அவர் மீதியாகவுள்ள கௌரவமும் இல்லாமல் போகும் என்றும் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பொருளாதார மீட்சிக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த சிறந்த திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் பின்னர் இடைநிறுத்தப்பட்டன.



உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் 04 நிறுவனம் வெளியிட்ட காணொளிகள் வெறும் திரைப்படமாக்கப்பட்டு விட்டன.

பொருளாதார பாதிப்புக்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தியுள்ளது. அந்த வகையில் தீர்ப்பு வழங்கிய நீதியரசர்களை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அழைத்து விசாரணை செய்ய எவருக்கும்அருகதை கிடையாது என்பதால் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள்.

பொருளாதார பாதிப்புக்கு யார் காரணம் என்று இதுவரை காலமும் பேசப்பட்ட விடயத்துக்கு உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை தற்போது வழங்கியுள்ளது.நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எமது கௌரவத்தையும்,நன்றியையும் தெரிவிக்கின்றோம். நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் அரச தரப்பினர் மாறு பட்ட கருத்துக்களை முன்வைக்கின்றனர் பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாக இந்த வழக்கு விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும், நீதியரசர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்யவும் கோருகின்றார்கள் .

நீதியரசர்களை விசாரணைக்குட்படுத்தும் அருகதை எவருக்கும் கிடையாது. பாராளுமன்ற தெரிவு குழுக்கள் தோல்வியடைந்துள்ளமைக்கு பல விடயங்கள் ஆதாரமாகவுள்ளன..

பொருளாதார பாதிப்பினால் சமூக கட்டமைப்பில் போதைப்பொருள் வியாபாரம்,விபசாரம் போன்ற சமூக விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இது சிறந்ததொரு நிலையல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**திறைசேரி உண்டியல்கள் வழங்கல்**

**ரூ. 145,000 மில்லியனுக்கான திறைச் சேரி உண்டியல்கள் 2023 நவம்பர் 22ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124B237 | LKA18224E246 | LKA36424K221 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 55,000 | 60,000 | 30,000 | 145,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2023 நவம்பர் 22 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2023 நவம்பர் 24 |
| வழங்கப்படும் திகதி | : 2023 நவம்பர் 24 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2023 நவம்பர் 22 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறீப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ. பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**


# பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்த சட்டமூலம்

**சபாநாயகர் சபையில் அறிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

"பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தம்)" சட்டமூலத்தின் பரிசீலனைக்கென நிலையியற் கட்டளையின் 113 (2)இன் படி சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களை மேலதிகமாக நியமித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தன பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கிணங்க அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, பவித்ரா வன்னியாரச்சி, கஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திம



வீரக்கொடி, நாமல் ராஜபக்ஷ, மயந்த திசாநாயக்க மற்றும் ரோஹிணி குமாரி விஜேரத்ன ஆகியோர் அந்தக்குழுவுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை,"மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்)" எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென நிலையியற் கட்டளையின்113 (2) இன் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் வகையில் மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமித்துள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

அதற்கிணங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜானக வக்கும்புர, இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், ஆர்.எம். ரஞ்சித் மத்துமபண்டார, எரான் விக்கிரமரத்ன, இசுரு தொடங்கொட, எம்.டப்ளியூ.டீ. சஹன் பிரதீப் விதான மற்றும் டீ. வீரசிங்க ஆகியோர் இந்த குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.






# கிழக்கின் குரல்



# காரைதீவில் சூரசம்ஹார நிகழ்வு பல்லாயிரம் பக்தர்கள் பங்கேற்பு





வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த சூரசம்ஹார நிகழ்வு, ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் நேற்று (19) மாலை சிறப்பாக நடைபெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா தலைமையில் இந்த சூரசம்ஹார நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.ஆலய பரிபாலன சபையினரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். ஆலய சுற்று வளாகத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ சுமார் மூன்று மணி நேரம், கடும் சமர் இடம்பெற்றது.ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணத்துடன் கந்தசஷ்டி விரதம் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (காரைதீவு குறூப் நிருபர்)





புதிய பொருளாதார மூலோபாயங்களை வலுப்படுத்தும் நோக்குடன், பொத்துவில் மற்றும் அறுகம்பே சுற்றுலா வலயத்தை ஒருங்கிணைத்து போக்குவரத்து சேவை மேம்படுத்தப்படவுள்ளது. இதன் ஓர் அங்கமாக பொத்துவில் உப பஸ் டிப்போ நேற்று பிரதான டிப்போவாக தரம் உயர்த்தப்பட்ட நிகழ்வில் பிடிக்கப்பட்ட படங்கள்.

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

## 19 வருடங்களின் பின்னர் சாதனை



(திருகோணமலை தினகரன் நிருபர்)

திருகோணமலை மாவட்ட எல்லைக் கிராமங்களில் ஒன்றான பன்குளம் கிராமத்திலுள்ள நொச்சிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், சுமார் 19 வருடங்களின் பின்னர் மாணவி ஒருவர் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

மாணவி கார்னிகா ஆனந்தம் 144 புள்ளிகளை பெற்று இப்பரீட்சையில் சாதனை படைத்துள்ளார்.

திருகோணமலை வடக்கு கல்வி வலயம் (கோமரங்கடவெல) உருவாக்கப்பட்ட பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில், சித்தியடைந்த முதல் மாணவி இவரென்பது குறிப்பிடத்தக்கது. 1990 இல், இக்கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த இக்கிராம மக்கள் அனைவரும், மீண்டும் 2004 இல் மீள் குடியேற்றப்பட்டதையடுத்து இப்பாடசாலையும் மீண்டும் இயங்கத் தொடங்கியது.

## பனங்காடு வைத்தியசாலையில் புதிய மாடிக்கட்டம் திறந்து வைப்பு

(பாலமுனை விசேட நிருபர்)

பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் அண்மையில் (13) திறக்கப்பட்டு, வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.



வெளிநோயாளர் மற்றும் கிளினிக் பிரிவுகளைக்கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடத்தை கையளிக்கும் நிகழ்வு, பனங்காடு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் யூ.எல்.எம்.சகீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகவும், முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், தற்போதைய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான டொக்டர் ஜீ.சுகுணன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு கட்டடத்தை கையளித்தனர்.

## பாடசாலை மாணவர்களின் உளநல, சமூக அபிவிருத்தி பயிற்சி செயலமர்வு

(பாலமுனை விசேட நிருபர்)

பாடசாலை செல்லும் இளம் பருவத்தினரின் உளநல, வாழ்வியல் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாக சுகாதார மற்றும் கல்வித்துறை அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் செயலமர்வு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய், சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.றிஸ்பின் இச்செயலமர்வை ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் அனுசரணையில், இரு தினங்கள் இடம்பெற்ற இச்செயலமர்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள், கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் கல்வி வலயங்களின் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலை தரவு மீளாய்வு, இள வயது பருவத்தினரின் வளர்ச்சி, குழந்தை வளர்ப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மன அழுத்தம், போதைக்கு அடிமையாகும் சந்தர்ப்பங்கள் , அதனை தடுப்பதற்கான வழிகள் உள புத்தாக்க பயிற்சி, விசேட தேவையுடைய பிள்ளைகளை கையாளும் முறை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

## ஏறாவூர் பிரதேச செயலக பதிவாளர் பிரிவு சேவைகளை ஆரம்பிக்கவும்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)



ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தின் பதிவாளர் பிரிவு சேவைகள் முற்றாக முடங்கியுள்ளமை குறித்து,

பிரதமரும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள பதிவாளர் பிரிவுகளில் பிறப்பு இறப்பு மற்றும் விவாக விவாகரத்து சான்றிதழ்கள் விரைவாகவும் ஒன்லைன் ஊடாகவும் வழங்கும் முறைமைகள் சுமுகமாக இடம்பெறுகின்றன.

இந்நிலையில், ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தில் சுமார் ஐந்து மாத காலமாக Local Government Wifi (LGN Wifi) செயலிழந்துள்ளது. இதே பிரச்சினை செங்கலடி பிரதேச செயலகத்திலும் ஏற்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

இது,பிரதேச மக்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேலையற்ற இளைஞர்கள் தொழிலுக்காக வெளிநாடு செல்லுகின்ற நிலை அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில், கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்காக பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதில் காலதாமதத்தை ஏற்படுத்துகிறது.

இதனால், குறித்த பிரதேச மக்கள் மட்டக்களப்பு கச்சேரிக்கு சென்று தங்களது பதிவுப்பிரதிகளை எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.இந்த விடயமாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும், எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.எனவே, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எழுத்து மூலம் இதுபற்றி அறிவித்துள்ளதாக சுபைர் குறிப்பிட்டார்.



"குளிருக்கு அழுத மழை "கவிதை நூலின் பிரதியொன்றை முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்பெ ற்றுக்கொண்டார்.நூலாசிரியரான இல்மி அஹமட் லெப்பை இந்நூலை வழங்கி வைத்தார்.

படம்: கல்முனை குறூப் நிருபர்

# அக்கரைப்பற்றில் கலை இலக்கிய பெருவிழா: கலைஞர்கள் கௌரவிப்பு

### கலாசார நிகழ்வுகளுடன் அரங்காற்று கலைகளும் அறிமுகம்





(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட காரியாலையத்துடன் இணைந்து அக்கரைப்பற்று கலை இலக்கியப் பேரவை நடத்திய கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு (18) சனிக்கிழமை நடைபெற்றது.

பேரவையின் தலைவர் ஊடகவியலாளர் கலா பூஷணம் மீரா இஸ்ஸத்தின் தலைமையில் அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் (18) நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ,எல்,எம்,அதாஉல்லா கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவலர் திணைக்கள பணிப்பாளர் எஸ். நவநீதன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.ஜெகதீசன் மற்றும் பிரதேச செயலாளர் டி.எம்.அன்சார் உதவி பிரதேச செயலாளர் வை.ராசிக், சட்டத்தரணி நஹீஜா முஸாபீர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்தியர் டி.எஸ். ஆர்.தாசிம் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜவ்பர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கௌரவம் பெற்ற கலைஞர்களை படங்களில் காணலாம்.



இறக்காமம் கல்வி கோட்டத்திற்குட்பட்ட நான்கு பாடசாலைகளில் தரம் ஐந்து புலமை பரீட்சையில் வெட்டு புள்ளிகளுக்கு மேல் 33 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இறக்காமம் றோயல் ஜூனியர் கல்லூரியில் 19 மாணவர்களும், வரிப்பத்தான்சேனை அஷ்ஹர் வித்தியாலயத்தில் 08 மாணவர்களும், இறக்காமம் அமீர் அலிபுர வித்தியாலயத்தில் 04 மாணவர்களும், லிடர் ஜூனியர் பாடசாலையில் 02 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.இம்மாணவர்களை படத்தில் காணலாம்.

(இறக்காமம் தினகரன் நிருபர்)

# ஐயப்பனின் அவதார மகிமை

முன்பு ஒரு காலத்தில் மகிஷாசுரனின் தங்கையான அரக்கி மகிஷி பூலோகத்தையும், தேவலோகத்தையும் ஆட்டி படைத்து கொண்டிருந்தாள். அது மட்டுமில்லாமல் தனது அண்ணன் மகிஷாசுரனின் மரணத்திற்கு காரணமானவர்கள் தேவர்கள் என்று கருதி அவர்களை பழிதீர்க்க காத்திருந்தாள். அதற்கான சக்தியை பெற மகிஷி பிரம்மனை நோக்கி தவமிருந்தாள். இதைப் பார்த்த பிரம்மன் மகிஷி முன்பு தோன்றி என்ன வரம் வேண்டும் கேள் என்றார். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்த புத்திரனால் அல்லாது வேறு யாராலும் எனக்கு மரணம் நேரிடக்கூடாது என மகிஷி வரம் கேட்டாள். பிரம்மனும் அந்த வரத்தை அளித்தார். வரம் கிடைத்தவுடன் மகிஷி பூலோகத்தில் உள்ள மனிதர்களையும், தேவலோகத்தில் உள்ள தேவர்களையும் கொடுமைப் படுத்தினாள்.

தேவர்கள் அவளின் கொடுமை தாங்காமல் பரமசிவனிடம் முறையிட்டனர். விஷ்ணுவின் அம்சமான மோகினி மூலம் சைவ வைஷ்ணவ ஜோதியாக ஐயப்பன் பூலோகத்தில் அவதரித்தார்.

பம்பா தீரத்தில் அடர்ந்த காட்டுக்கு நடுவே ஒரு குழந்தை அழும் சத்தம் கேட்டு அன்றைய பாண்டிய மன்னனும் பந்தளத்து அரசனுமான ராஜசேகரன் சென்று பார்த்தார். அவருக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் அந்த குழந்தையை எடுத்துக்கொண்டு தனது மனைவியான ராணியிடம் கொடுத்து மகிழ்ந்தார்.

அவரின் கழுத்தில் மணி இருந்தால் மணிகண்டன் என்றும் ஐயப்பன் என்றும் பெயர் சூட்டினார். ஐயப்ப சுவாமி வந்த நேரம் ராணியும் கருவுற்றாள்.

சிறிது காலத்தில் ராணிக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் சகல லட்சணங்களையும் பெற்றிருந்தான். அன்பு மகனுக்கு ராஜராஜன் என பெயர் சூட்டினர். மணிகண்டன் வந்த நேரமே தனக்கு எல்லா நல்லவையும் நடக்கிறது என்று எண்ணிய ராஜசேகரன் மணிகண்டனுக்கு பட்டாபிஷேகம் நடத்த முடிவு செய்தார்.

**மந்திரியின் சூழ்ச்சி**

மணிகண்டன் ராஜா ஆவதை சற்றும் விரும்பாத மந்திரி மணிகண்டனை அழிக்க எண்ணுகிறான். பல திட்டங்களைத் தீட்டும் அவனது கனவு பலிக்கவில்லை. அரண்மனை வைத்தியரை வைத்து ராணிக்கு உடல்நிலை சரியில்லை புலிப்பால் கொண்டு வந்தால்தான் உடல்நிலை சரியாகும் எனக்கூறி மணிகண்டனை காட்டுக்குள் அனுப்பி வைக்கின்றனர்.

இது சூழ்ச்சி என்று தெரிந்தும் மணிகண்டன் காட்டுக்குள் சென்று புலி பாலை எடுத்து வர புறப்பட்டார்.

ஐயப்பனின் வரவுக்காகக் காத்திருந்த தேவர்கள் பகவானை பொன்னம்பல மேட்டில் பூஜை செய்து மகிஷியினால் படும் துயரத்தைக் கூறி முறையிட்டனர். மணிகண்டன் தேவலோகம் சென்று மகிஷியை வென்று பூமிக்குத் தள்ள மகிஷி அழுதா நதிக்கரையில் விழுந்தாள்.

ஐயப்பன் அவள் மேலேறி நர்த்தனம் ஆடி மகிஷியை உயிரிழக்க செய்தார். மகிஷி மீண்டும் சாப விமோசனம் பெற்று ஐயப்பனை அடைய வேண்டும் எனும் ஆவலைத் தெரிவிக்கிறாள்.

ஆனால் தான் பிரம்மச்சர்ய நிஷ்டையுள்ளவனானதால் அது சாத்தியமாகாது என்றும், தான் இருக்கும் இடத்தின் இடப்பக்கத்தில் மாளிகைப்புரத்தம்மா என்ற பெயருடன் அவர் விளங்கி வர ஐயன் அருள் செய்தார்.

மகிஷியின் கொடுமையில் இருந்து தப்பித்த தேவர்கள் அனைவரும் புலியாக உருவெடுத்து ஐயப்பனின் பணிகளை நிறைவேற்றுவதற்காகப் பந்தளம் சென்றனர்.

புலிக்கூட்டம் வருவதை பார்த்த மக்கள் பீதியடைந்தனர். ஐயப்பனின் சக்தியையும், பெருமையும் உணர்ந்த மந்திரி மணிகண்டனிடம் மன்னிப்பு கேட்டனர். இதில் உன்னை மன்னிப்பதற்கு எதுவுமில்லை. எல்லாம் இறைவனின் லீலை. நான் இந்த பூமிக்கு வந்த வேலை முடிந்து விட்டது நான் தேவலோகம் செல்கிறேன், என மணிகண்டன் கிளம்ப தயாரானார். மன்னன், பகவானே தாங்கள் எங்களுடன் இருந்ததன் அடையாளமாக ஒரு கோயில் கட்ட நினைக்கிறோம் அதை எங்கு கட்டுவது என்று கேட்டனர். ஐயப்பன் ஒரு அம்பை எடுத்து எய்தார்.

இந்த அம்பு எங்கு சென்று விழுகிறதோ அங்கு எனக்கு கோயில் கட்டுங்கள். அத்துடன் 18 படி உடன் கிழக்கே நோக்கி தனக்கும் பக்கத்தில் மாளிகைப்புறத்தம்மனுக்கும் கோயில் கட்டும்படி கூறினார்.

பின்பு மணிகண்டனாகிய ஐயப்பன் தேவலோகம் சென்றார்.



## சைவ மஞ்சரி

## மானுடவியல்

அவருடைய அச்செயல் திட்பம் சேக்கிழார் திருவாக்கில், "உலகு நிகழ்ந்த பல்லவர்கோச்சிங்க ருரிமைப் பெருந்தேவி நிலவு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்ததொரு மலரை யெடுத்து மோந்ததற்கு வந்து பொறாமை வழித்தொண்டர் இலகு கூர்வாய்க் கருவியெடுத் தெழுந்த வேகத்தாலெய்தி" "கடிது முற்றி மற்றவள்தன் கருமென் கூந்தல் பிடித்தீர்த்துப் படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் பரமர் செய்யசடை முடியிலேறுந் திருப்பூமண் டபத்து மலர்மோந் திடுமூக்கைத் தடிவ னென்று கருவியினா லரிந்தார் தலைமைத் தனித் தொண்டர்" என வரும்.



142

திருப்பூ மண்டபத்துக்கு அயலிற் கிடந்ததேனும், சிவபெருமான் திருமுடிக்கேற வெனக் கொணரப்பட்ட மலரல்லவா அது என்று நாயனார் அதன் கௌரவம் பற்றிக் கொண்டிருந்த பேருணர்வே அவர்பால் குரூரச்சார்பான பெருந்தீரம் விளைந்ததற்கு உடனடிக் காரணமாம். அது நன்கு புலப்படுமாறு, "பரமர் செய்யசடை முடியி லேறும் மலர் மோந்த மூக்கைத் தடிவனென்று கருவியினா லரிந்தார்" எனச் சேக்கிழார் அருளியிருப்பதும் அவ்விஷயத்தில் அத்தனைத் துடிப்பாக அத்தனைக் குரூரச் செயலில் அவர் இறங்கியதற்கான பரம்பரைக் காரணம். சிவத்திரவிய மகிமை பேணுதலில் பூர்வப் பயிற்சி வழியாக வந்து அவரிடத்தில் தழும்பேறியிருந்த தொண்டுறுதி என்பது புலப்பட அவரை "வழித்தொண்டர்" எனக் குறிப்பிட்டிருப்பதும் அத்தகைய தீரமானது தொண்டர்களுள் அவரவர்க்குரிய தனித்துவப் பண்புகளுக்கெல்லாந் தலைமையானது எனல் புலப்படத் "தலைமைத் தனித்தொண்டர்" என மேலும் விதந்திருப்பதுங் கொண்டு இந்த நாயனாரின் பெருமகிமை அறியத்தகும்.

**(தொடரும்)**



கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 63



பிறிதொருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவைகளை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன்கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். நற்செயல்களால் மேலோங்கி வளர்பவர்களை, சமுதாயத்தில் நற்பெயர் பெற்ற சான்றோர்களின் வாழ்வை வழிக்காட்டும் பாடமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். வேண்டும். இம் முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வசக்தி மிகுந்து காணப்படும்.

வெளிப்புற உதவிகளை புறந்தள்ளி, மனிதனின் உள்ளே பொதிந்துள்ள நல்லியல்புகளை வெளிக் கொணர்ந்து, உயர்வதே சிறப்பு. முன்னேற்றத்திற்கான அனைத்து ஆதாரங்களும் மனிதனின் உள்ளாற்றலின் விழிப்புணர்வில் தான் உள்ளது. இவ்வகையில் மனிதன் அளப்பரிய சக்தி கொண்டவனாவான்.





உடப்பு கரைவலை சம்மாட்டிமார் சங்கத்தின் ஏற்பாட்டில் உடப்பு ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் விஷேட பூஜையுடன், பொங்கல் நிகழ்வு (18) சனிக்கிழமை இடம்பெற்றது. இதன் போது உடப்பிலுள்ள கரைவலை வள்ளம் உரிமையாளர்களினால் பொங்கல் வைக்கப்பட்டது. இதில் பொங்கிய பொங்கல் படைக்கப்பட்டு பின்னர் அவை கடலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கடலில் கரைக்கப்படும். இதன் நோக்கம் தங்களின் தொழில் தொடர்ந்து நல்ல முறையாக இடம்பெற வேண்டும் என்பதாகும்.

உடப்பு குறூப் நிருபர்

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

***19930 திருமணம் முடித்து வீட்டிற்கு வரும் மணமக்களை ஆரத்தி எடுத்து வீட்டிற்குள் அழைக்கும் நடைமுறை காலம் காலமாக நமது வழக்கத்தில் உள்ளது.***

***19931 ஏன் ஆரத்தி எடுக்கிறார்கள்?***

திருஷ்டி கழிப்பதற்கான ஒரு சம்பிரதாயம்

***19932 வெறும் திருஷ்டி கழிப்பதற்காக மட்டும் உண்டாக்கப்பட்ட ஓர் சடங்கு முறையா?***

அல்ல இதற்கு பல அறிவியல் காரணங்கள் உண்டு. தம்பதிகளுக்கு தீய சக்திகளினால் தீமைகள் ஏற்படாமல் இருக்கவும், கண் திருஷ்டி ஏதேனும் ஏற்பட்டிருந்தால் அதை போக்கவும் இந்த ஆரத்தியானது எடுக்கப்படுகிறது.

***19933 ஆரத்தி எடுப்பதன் முக்கிய நோக்கம் என்ன?***

இதன் முக்கிய நோக்கமே, யாருக்கு ஆரத்தி எடுக்கிறோமோ அவருக்கு லட்சுமி, சரஸ்வதி ஆகிய இரண்டு தெய்வங்களின் அருள் கிடைக்க வேண்டும் என்பதாகும்.

***19934 ஆரத்தி வேறு எங்கெல்லாம் எடுக்கப்படுகிறது?***

ஆரத்தி தூர பயணம் முடித்து வருபவர்கள், புதிதாக திருமணம் முடித்த மணமக்கள், மகப்பேறு முடித்து வீட்டிற்கு வரும் பெண் மற்றும் குழந்தை, மருத்துவமனையிலிருந்து சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வருபவர்கள் ஆகியோருக்கு ஆரத்தி எடுக்கும் நடைமுறை நமது வழக்கத்தில் உள்ளது.

***19935 ஆரத்தி எடுப்பதற்கு முதலில் என்ன செய்ய வேண்டும்?***

தாம்பாளத் தட்டில் மஞ்சளும் , சுண்ணாம்பும் வைத்து எடுத்து கொள்ள வேண்டும்.

***19936 அதன்பின் என்ன செய்ய வேண்டும்?***

அந்த மஞ்சளையும், சுண்ணாம்பையும் சிறிது தண்ணீர் விட்டு கலக்க வேண்டும்.



***19937 அதன்பின் என்ன நடக்கும்?***

மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்த தண்ணீர் சிவப்பு நிறமாக மாறும்.

***19938 அதன்பின் என்ன செய்ய வேண்டும்?***

இதன் மேல் ஒரு வெற்றிலை வைத்து அதன் மேல் கற்பூரத்தை வைத்து ஏற்ற வேண்டும்.

***19939 ஆரத்தி எப்படி எடுக்கப்படுகிறது?***

அதை ஆரத்தி எடுக்க போகிறவரின் உடலை 3 முறை சுற்றி விட வேண்டும்.

***19940 ஆரத்தி எடுப்பதற்கு முதலில் தாம்பாளத் தட்டில் மஞ்சள் வைக்கப்படுகிறது. இந்த மஞ்சள் யாரை குறிக்கும்?***

லட்சுமியை

***19941 சுண்ணாம்பு யாரை குறிக்கும்?***

சரஸ்வதியை

***19942 இதில் ஏன் மஞ்சள் மற்றும் சுண்ணாம்பு பயன்படுத்தப்படுகிறது?***

அவற்றுக்கு கிருமிகளை அழிக்கும் சக்தியுண்டு. இது உடலிலுள்ள உள்ள கண்ணுக்கு தெரியாத விஷ கிருமிகளை அழிக்கிறது.

***19943 ஆரத்தி சுற்றிய பின் அந்த ஆரத்தி எடுத்த நீரை என்ன செய்ய வேண்டும்?***

கொட்டிவிட வேண்டும்.

***19944 எங்கு கொட்டி விடவேண்டும்?***

யார் காலிலும் படாதபடி ஏதேனும் செடிக்கும் ஊற்றலாம்.

***19945 வாசலில் வைத்து ஆரத்தி எடுப்பது ஏன்?***

வெளியில் இருந்து வரும்போது உடலில் பல நச்சு கிருமிகள் தொற்றியிருக்கும் நிலையில், வீட்டுக்குள் வரும்போது அது வீட்டில் இருக்கும் சிறு குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த பெரியவர்களை எளிதில் தொற்றிக்கொள்ளும். இதனால் அவர்களுக்கு உடலில் பிரச்னைகளை ஏற்படுத்தலாம். அதனால் தான் சம்பந்தப்பட்டவர்களை வாசலிலேயே நிற்க வைத்து ஆரத்தி எடுத்து வீட்டினுள் அழைத்து வருகிறார்கள்.



கம்பளை நாட்டுக்கோட்டை நகரத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் தீபாவளித்தினத்தன்று இடம்பெற்ற விசேட பூஜையை படத்தில் காணலாம்.

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)





வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் கந்தசஷ்டி விரத நிறைவுநாளின் சூரசம்ஹாரம் நிகழ்வு சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. மாலை 4 மணியளவில் இடம்பெற்ற வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து ஆறுமுக சுவாமி கிடா வாகனத்தில் எழுந்தருளி சூரனை சம்ஹாரம் செய்து பக்தர்களுக்கு அருள்காட்சி அளித்தார். அதன் போது, யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு ஆறுமுகசுவாமியின் அருள்காட்சியை கண்டு களித்தனர். (படங்கள்: யாழ். விசேட நிருபர்)

# வடக்கில் விவசாய முதலீட்டை மேற்கொள்ள அழைப்பு




**யாழ். விசேட நிருபர்**

வடக்கில் விவசாய முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவோருக்கான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இயக்கச்சி பகுதியில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில், தென்னம் பிள்ளைகள் நடும் செயற்திட்டம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் மீள்குடியேற்றத்தின் பின்னர் வழங்கப்பட்ட தென்னம் பிள்ளைகள் இன்று மக்களின் வாழ்வாதாரமாக மாறியுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அதேவேளை நட்புசார் விவசாயத்தை விஸ்தரிக்கும் நோக்கில் எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய கையடக்க தொலைபேசி செயலி ஒன்றை அறிமுகபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் விவசாய முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவோருக்கான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் என தெரிவித்தார்.

நிகழ்வில், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ். கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், தென்னை பயிர் செய்கை சபையின் தலைவர் ஏ.வீ. கே.மாதவி ஹேரத், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இரண்டாவது தென்னை முக்கோண வலயம் கடந்த செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய 03 மாவட்டங்களுடன், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கி வடக்கு தென்னை முக்கோண வலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் 03 மாதங்களுக்குள் நான்கு இலட்சத்து 50 ஆயிரம் தென்னம் பிள்ளைகளை பயிர்செய்கை செய்யும் நோக்குடன் இந்த செயற்றிட்டம் முன்னேடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் உதயம்

### இலங்கை கடற்பரப்பில் 22 தமிழக மீனவர்கள் கைது

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

பருத்தித்துறை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 22 தமிழக மீனவர்களை கடற்படையினர் சனிக்கிழமை (18) கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு படகில் வந்த 22 மீனவர்களையும் 2 படகையும் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்று விசாரணைகளின் பின்னர் மயிலிட்டி துறைமுகத்தில் வைத்து கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

மீனவர்கள் 22 பேரையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக நீரியல் வளத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



யாழ்.பொம்மைவெளி மகப்பேற்று நிலையத்தில் வறுமைக் கோட்டின் கீழுள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கு யாழ் மாநகரசபை முன்னாள் உறுப்பினர் லயன் கலாநிதி தனேந்திரன் உலர்உணவு பொதிகளை வழங்கினார். அவரது மனைவியின் 02வது ஆண்டு நினைவாக இத் தாய்மாருக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம் வேலணை குறூப் நிருபர்)

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் சூரசம்ஹார நிகழ்வு





**(மன்னார் குறூப் நிருபர்)**

தமிழ் கடவுளான முருகப் பெருமானை நோக்கி அனுஷ்டிக்கப்படுகின்ற விரதங்களில் மிகவும் முக்கியமான விரதம் கந்த சஷ்டி விரதமாகும்.

இந்த விரதம் கடந்த ஆறு நாட்களாக நடைபெற்று இறுதி நிகழ்வான சூரசம்ஹார நிகழ்வுகள் சனிக்கிழமை மாலை மன்னார் மாவட்டத்தில் உள்ள பல இந்து ஆலயங்களில் சிறப்புற நடைபெற்றன.

சரவணப் பொய்கையில் ஆறு திரு முகங்களுடன் அவதரித்த முருகனை நோக்கி ஆறு தினங்களுக்கு இந்த விரதம் அனுஷ்டிக்கப்படும். இந்த கந்த சஷ்டி விரதத்தின் இறுதி நாளான சனிக்கிழமை (18) முருகப் பெருமான் மூல மூர்த்தியாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற ஆலயங்களில் சூரன் போர் இடம்பெற்றது.

மன்னாரில் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பக்தர்கள் புடைசூழ சூரசம்ஹார நிகழ்வு (18) மாலை சிறப்பாக இடம்பெற்றது. இது திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மேளதாளம், வாத்திய இசை முழங்க, அந்தணச் சிவாச்சாரியர்கள் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ ஆலய வளாகத்தில் சூரனுடன் போர் செய்து சூரனை வதம் செய்து பக்த அடியார்களுக்கு அருள் பாலித்தார்.

## யாழ். பாடசாலையொன்றில் 23 வருடங்களுக்கு பின்னர் மாணவியொருவர் சித்தி

**யாழ். விசேட நிருபர்**



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், 23 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவி ஜஸ்ரின் ஜனனி 160 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார்.

2000 ஆண்டிற்கு பின்னர் இம்முறைதான் மாணவியொருவர் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமைச் சேர்த்துள்ளார்.

பாடசாலைக்குத் தனது ஒழுங்கான வரவு, அதிபர் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் விடா முயற்சியே தனது வெற்றிக்குக் காரணமென குறித்த மாணவி தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றிய நான்கு மாணவர்களில் மாணவன் ஒருவன் 144 புள்ளிகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உடுவிலில் வெகுசிறப்பாக நடந்தேறிய பண்பாட்டுப் பெருவிழா





வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், உடுவில் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்திய பண்பாட்டுப் பெருவிழா 2023 நிகழ்வு வியாழக்கிழமை(16.11.2023) காலை09.30 மணி முதல் உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான த.முகுந்தன் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

விழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் சிறப்பு விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் செல்வி.மைதிலி அருளையா கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

விழாவின் முக்கிய அம்சமாக 'ஞான ஏந்தல்' விருது வழங்கல் இடம்பெற்றது. அந்தவகையில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக ஊடகப் பணியாற்றி வரும் செல்வநாயகம் ரவிசாந் ஊடகத் துறைக்கான விருதினையும், நீண்ட காலமாக இலக்கிய எழுத்துப் பணிகளில் ஈடுபட்டு வரும் சபாபதி புஸ்பநாதன் இலக்கியத் துறைக்கான விருதினையும், நீண்ட காலமாக இசைத் துறையில் ஆர்வம் செலுத்தி வரும் திருமதி.மனோகரி சற்குருநாதன் இசைத்துறைக்கான விருதினையும், பல வருடங்களாக நாடகத் துறையில் ஈடுபட்டு வரும் மகேந்திரராசா ரவிசங்கர் நாடகத் துறைக்கான விருதினையும் பெற்றுக் கொண்டனர். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நால்வருக்குமான ஞான ஏந்தல் விருதினை மேடையில் வைத்து வழங்கிச் சிறப்பித்தார்.








தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோவிலில் சூரன் போர் நடைபெற்றது. தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ மு.வாமதேவ பிரசாந்த் குருக்கள் தலைமையில் விசேட பூஜைகள் நடைபெற்றன. இதன்போது நூற்றுக் கணக்கான பக்தர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தலவாக்கலை குறூப் நிருபர்

# நானுஓயா, கிளாரண்டன் தோட்டத்தில் தனி வீடுகள் கையளிக்கப்பட்டன





**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா நானுஓயா, கிளாரண்டன் தோட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் மக்கள் பாவனைக்காக (18) சனிக்கிழமை கையளிக்கப்பட்டன. அத்துடன், அவர்களுக்கு பிரத்தியேக 'முகவரி' வழங்கப்பட்டு வீடுகளுக்கு முன் வைப்பதற்கான கடித பெட்டியும் வழங்கப்பட்டது. நானுஓயா, கிளாரண்டன் தோட்டத்தில் தற்காலிக குடில்களில் வாழ்ந்து வந்த 30 குடும்பங்களுக்கு தனி வீடுகளை அமைப்பதற்கான வேலைத்திட்டம் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட வீட்டு திட்டங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனினும், முழுமைப்படுத்தப்பட்ட வீடுகளே மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டு, குடிநீர், மின்சாரம், வீதி உட்பட சகல உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதன்பிரகாரம் முழுமைப்படுத்தப்பட்ட வீட்டு திட்டமே கையளிக்கப்பட்டுள்ளன. இந் நிகழ்வில் இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், இ.தொ.காவின் பிரதி தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.ராஜதுரை, இ.தொ.காவின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பி. சக்திவேல், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும், இ.தொ.காவின் உப தலைவருமான பாரத் அருள்சாமி, உப தலைவர் பிலிப், முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஹப்புத்தளையில் மண் சரிவு ரயில் எஞ்சினுக்கு பாரிய சேதம்




**(படம் .ஊவா சுழற்சி நிருபர்)**

பதுளை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக தியத்தலாவை ஹப்புத்தளை இடையிலான புகையிரத பாதையில் பாரிய மண் சரிவு ஏற்பட்டதில் புகையிரத எஞ்சினுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப் பிரதேசத்தில் தொடரும் அடை மழை காரணமாக நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட உடரடமெனிக்கே புகையிரதம் ஹப்புதளையிலிருந்து தியத்தலாவை நேக்கிச் சென்று கொண்டிருந்த வேளை திடீரென மண் சரிவு ஏற்பட்டு புகையிரதத்தில் விழுந்ததில் புகையிரதம் உடன் செயலிழந்ததாகவும் புரையிரத எஞ்சினுக்கு மேலும் கீழும் கற்பாறைகள் விழுந்து பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த புகையிரதத் திணைக்களம் தியத்தலாவை இராணுவ பாதுகாப்புப் பிரிவின் உதவியுடன் புகையிரதத்தில் விழுந்த பாறைகளை அகற்றி வருகின்றனர்.



பதுளை மாநகரிலும் "கந்தசஷ்டி" விரதத்தை முன்னிட்டு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தின் "சூரன்போர்" நிகழ்வுகள் நேற்று முன்தினம் (18) நடைபெற்றது.

# ஹாலி எலயின் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியது



**(ஹாலிஎல விசேட நிருபர்)**

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் ஹாலி எல நகரின் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கி ஏராளமான கடைகள் சேதமடைந்துள்ளன.

ஹாலிஎல கந்தேகெதர வீதியின் சுமார் 300 மீற்றர் நீரில் மூழ்கியுள்ளதுடன் பல கடைகளின் பொருட்கள் சேதமடைந்துள்ளதுடன் வீதியின் போக்குவரத்தும் சில மணித்தியாலத்திற்கு தடைப்பட்டுள்ளது.

# நல்லதண்ணி நகரில் பன்றிகள் நடமாட்டம்

**(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)**



நல்லதண்ணி நகரில் அதிகளவில் காட்டு பன்றிகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அங்கு உள்ள விருந்தினர் விடுதிகளிலும், குடியிருப்பு பகுதியிலும், நகரிலும் இவ்வாறு பன்றிகளின் நடமாட்டம் உள்ளது. நல்லதண்ணி நகரில் உள்ள அனைத்து இல்லங்கள், விருந்தினர் விடுதி, வர்த்தக நிலையங்களில் உள்ள கழிவு பொருட்களில் உள்ள உணவுகளை உண்ண வருகிறது. இவ்வாறு வரும் காட்டு பன்றிகள் சில நேரங்களில் விருந்தினர் விடுதி வர்த்தக நிலையங்கள் குடியிருப்புகளுக்கு உள்ளே சென்று அங்கு உள்ள உணவு பொருட்களை உண்ணும் நிலையில் உள்ளது என அப் பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் காலங்களில் சிவனடி பாதமலை பருவகாலம் ஆரம்பித்தவுடன் இங்கு யாத்திரிகர்கள் வருகை ஆரம்பித்தால் மேலும் பன்றிகள் நடமாட்டம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனால் மக்களுக்கு தீங்கு ஏற்படும் அபாயமும் உள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவணம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர் நகர் மக்கள்.

# கடும் மழை : பல இடங்கள் பாதிப்பு



**(அக்குறணை குறூப் நிருபர்)**

கண்டி மாவட்டத்தில் கடும் மழை காரணமாக பல்வேறு இடங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அனர்த்த முகாமைத்துவ மத்தியள நிலையம் தகவல் தருகையில் இவ்வாறு குறிப்பிட்டது.

தெல்தெனிய, உடிஸ்பத்துவ போகாபிட்டிய நீரோடையில் மோட்டார் சைக்கிளுடன் ஒருவர் நீரில் வீழ்ந்துள்ளதாகவும், அவரை தேடும் பணியில் இறங்கலைப் பொலிசார் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீரினால் எடுத்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளை பிரதேச மக்கள கண்டெடுத்துள்ளனர்.

மற்றும் ஒரு சம்பவத்தில் கட்டுகஸ்தோட்டை, கஹல்ல பிரதேசத்தில் உள்ள இஹல கம்மெத்த என்ற இடத்தில் மண்மேட்டுடன் கற்பாறை ஒன்றும் சேர்ந்து வீடு ஒன்றின் மீது வீழ்ந்துள்ளது. இதனால் வீடு பலத்த சேத்திற்கு உள்ளாகியுள்ளது, உயிர்ச் சேதங்கள் இல்லை எனவும் கட்டுகஸ்தோட்டைப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கண்டி ரட்டேமுல்ல பாதையில் ஏற்பட்டுள்ள ஒரு மண் சரிவு காரணமாக பாதையில் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கந்தேகம என்ற இடத்தில் இடம் பெற்றுள்ள இவ் மண்சரிவை அகற்றி, பாதையை சீராக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே நேரம் வத்துகாமம் கபரகல பாதையில் மண்மேடு சரிந்ததால் பன்வில முதல் கபறகல வரையான போக்கவரத்தும் முற்றாகப் பாதிக்கப்பட்டது.

அதனையும் சீர் செய்யும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். கண்டி – மாத்தளை பிரதான பாதையில் அக்குணை நகரத்தில் மாலைநேரங்களில் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதால் கண்டி மாத்தளைப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்படுகின்றன. சாரதிகள் பாதிப்டைந்தநேரங்களில் மாற்று வழியைப் பயன் படுத்தி வருகின்றனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் அல்மினாரா மாணவர்கள் 18 பேர் சித்திடைந்து சாதனை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை கல்வி வலயத்தின் இ/ அல்மினாரா ஆரம்ப பாடசாலை மாணவர்கள் அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 18 மாணவர்கள் சிறப்பாக சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக இப்பாடசாலை மாணவர்கள் இச்சாதனையை நிலை நிறுத்தி வருவதாகவும் இச்சாதனைகளுக்காக தம்மை அர்ப்பணித்து செயலாற்றும் பொறுப்பாசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திக்குழு பழைய மாணவர் அமைப்பு மற்றும் நலன் விரும்பிகள் கல்வித்துறை சார் அதிகாரிகள் அனைவருக்கு ம் பாடசாலை அதிபர் முக்தார் சவாஹிர் தனது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் பின்வருமாறு எம்.ஆர்.றிப்கி அஹமட் (171) அஹமட்.ஐ.எப்.அம்ரா (170) எம்.ஐ.ருகையா (169) எம்.ஐ.எம் சுஹைல் (158) எம்.எப்.அஹமட். பிர் னாஸ் (154) எம்.எஸ்.எப்.சகாமா (153 ) எம். ஆர்.எம்.ஹம்தி(152) எம்.ஆர். எ ப் . றைஹா



(152) எம்.ஜே.பாத்திமா இபா (151) எம்.என். எப்.தஹானி(151 ) எம்.ஆர்.எம்.தஸ்ரின் (149) எம்.ஆர். எப்.சீமா (148) எம்.ஏ.எப்.அசா (147) எஸ்.ராதிகா (147) எஸ்.நித்ருஜான் (14 7) எம்.ஏ.எப். ஸஹ்ரா (146) எம்.ஐ.எப். ஷமா (144) எம்.ஆர். எப்.அஸ்கா (144).

# அட்டுலுகம அல் கஸ்ஸாலியில் 16 பேர் சிறந்த பெறுபேறு

(பாணந்துறை மத்திய குறுப் நிருபர்)

களுத்துறை மாவட்டத்தில் ஹொரண கல்வி வலயத்தைச் சேர்ந்த அட்டுலுகம அல் கஸ்ஸாலி ஆரம்ப பாடசாலையில் பதினாறு பேர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்று சித்தியடைந்து பாடசாலையில் வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்கள்:அஸ்மா ஜெமீல் 183, இல்மா இர்ஷாத்172, ஹமாம் நிஜாம் 171, நுஹா ஹஸன்168, றிபா பஹ்ஜான்164, அஹமத் முஜீப்164, யாஸிர் உபைதுல்லா161, நஸ்ஹா நஸ்மின்161, நுஹா ரிப்தி159, சஹானி ரிம்ஸான்158, இல்மா இமாம்156, ஹம்ளா ரினாஸ்156, ஸல்ஹா நஸ்மின்156, இஸ்மா இம்ரான்151, சிமா நபாயிஸ்148, இஷ்பா இஷாக்147.

மேற்படி மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை சித்தியானது பெரு மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமன்றி பாடசாலையின் வரலாற்றுச் சாதனையாகவும் உள்ளதாக அதிபர் அஷ்ஷெய்ஹ் எம்.என்.எம். ஜொழிபர் (நளீமி) தெரிவித்தார். கற்பித்தல் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அட்டுலுகம உமாறத் சமூக ஊடக வலையமைப்பு உள்ளிட்ட கல்வி ஆர்வலர்களும் மாணவர்களுக்கு பாராட்டு, வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்.


## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை - மாத்தளை
### பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் — 2024

2024 ஆம் ஆண்டுக்காக மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலைக்காக பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்காக, கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் இலங்கை நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்திருக்கும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் 2023.12.29 ஆம் திகதி பி.ப. 2.00 வரை கேள்விமனுக்கள் ஏற்கப்படும்.

| வரிசை இலக்கம் | உருப்படி | தகைமைகள் | மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 2024 ஆம் ஆண்டுக்காக பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் | M8/C9/C8/C7 (திருத்தப்பட்ட பதிவுப் பட்டியலுக்கு அமைய) EM 5 மற்றும் அதற்கு மேல் (மின் பராமரிப்புக்காக) | ரூபா 2,000.00 |

02. விலைமனு ஆவணங்களை 2023.11.22 ஆம் திகதி தொடக்கம் 2023.12.28ஆம் திகதி வரை சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 – பி.ப. 2.00க்கு இடையே மற்றும் 2023.12.29 ஆம் திகதி மு.ப. 10.00 வரை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலை அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு தகைமைகளை பூர்த்தி செய்கின்ற அத்தாட்சி மற்றும் மீளளிக்கப்படாத கேள்விமனுக் கட்டணத்தை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலை கணக்காளரிடம் பணமாக செலுத்திய பின் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனு ஆவணங்களை சமர்ப்பிக்கும்போது வேறு வைத்தியசாலை ஒன்றில் அல்லது வைத்தியசாலைகளில் கடந்த அண்மித்த மூன்று வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்பில் தகைமை தொடர்பில் சான்றிதழ்களை சமர்ப்பிப்பது விசேட தகைமையாக பார்க்கப்படும்.

04. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023.12.29 ஆம் திகதி பி.ப. 2.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கின்ற வகையில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் உள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். விலைமனுக்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் - 2024'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. விலைமனுக்களை ஏற்கின்ற காலம் முடிவுற்ற உடன் அதாவது 2023.12.29 ஆம் திகதி பி.ப. 2.00க்கு வைத்தியசாலை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும்.

06. விலைமனு ஆவணங்களை அலுவலக நேரங்களில் கொடுப்பனவு இன்றி பரீட்சித்துப் பார்க்க முடியும். விலைமனுக்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்திய பெறுகைக் குழு வசமானது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**மாத்தளை**
**2023.11.20**



## மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் (PGIM)
## கொழும்பு பல்கலைக்கழகம்

பெறுகை அறிவித்தல்

### பாதுகாப்பு சேவைகளை வழங்கல்

Bid No.: PGIM/GA/03/Security/2023

ஒரு வருட கால எல்லைக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்றுள்ள செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வருடாந்த உரிமமுள்ள புகழ் வாய்ந்த பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

ஆர்வமும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2023.11.20 ஆம் திகதியிலிருந்து 2023.12.04 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 011-2688650 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் saradmin@pgim.cmb.ac.lk என்ற மின்னஞ்சலூடாகவும் வார நாட்களில் மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவன பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2023.11.20 ஆம் திகதியிலிருந்து 2023.12.04 ஆம் திகதியன்று வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவை இலங்கை வங்கி பொறளை சுப்பர் தர கிளையின் PGIM இன் 193413 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பின்னர், saradmin@pgim.cmb.ac.lk என்ற மின்னஞ்சலூடாக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவன பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கிலத்திலுள்ள (PDF Format) விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

அனைத்து விலைமனுக்களும் 120,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுப்பிணையானது 2023 நவம்பர் 30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

2023.12.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Provision of Security Services to the PGIM" என அடையாளமிடப்பட்டு மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவன பொது நிருவாகத்திற்கான கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர்/ திணைக்கள பெறுகைக் குழு, மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், இல.: 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு-7 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023.12.05 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவன 1 ஆம் மாடியின் பொது நிருவாகத்திற்கான கிளையில் விலைமனுக்களின் திறத்தலின் நிகழ்வில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான மற்றும் பூர்த்தி செய்யப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07.**
**17.11.2023.**


# இலங்கையர் என்ற ரீதியில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இதுவாகும்

## காலி, மாகால்ல ஹச்சிவத்த பள்ளிவாசலை தொல்பொருள் மரபுரிமை இடமாக அடையாளப்படுத்தும் நிகழ்வில் அமைச்சர் மனுஷ நாணயக்கார



இலங்கையர் என்ற ரீதியில், நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும், நாட்டின் அபிவிருத்தி மற்றும் தேசிய ஐக்கியத்தை எவரேனும் எதிர்பார்ப்பார்களாயின் ஒருவரையொருவர் குற்றம் சாட்டாது, அதற்காக ஆரம்பத்தை தன்னிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலி, மாகால்ல ஹச்சிவத்த பள்ளிவாசலை (காலி மக்குலுவ பாலத்திற்கு அருகாமையில்) தொல்பொருள் பெறுமதிமிக்க மரபுரிமை இடமாக அடையாளப்படுத்தும் நிகழ்வில் பங்கேற்று நேற்று (19) உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பள்ளிவாசலை மரபுரிமையாக பெயரிட்டு தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் தொடக்க நிகழ்வைக் குறிக்கும் வகையில், வரலாற்றை விளக்கும் பலகையையும் அமைச்சர் திரைநீக்கம் செய்து வைத்தார். இது தொடர்பான தொல்பொருள் ஆய்வுகளை விரைவில் நிறைவு செய்யுமாறு, தொல்பொருள் திணைக்களத்தை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

"தேசிய ஒற்றுமையை நீங்கள் விரும்பினால், அதனை உங்களிடமிருந்து ஆரம்பியுங்கள். நான் என்னில் இருந்து ஆரம்பிப்பது என்றால் எப்பொழுதும் பிறரைக் குற்றம் சொல்ல வேண்டிய அவசிய நிலை இருக்காது. நாம் ஒன்றிணைந்து இலங்கையர் என்ற ரீதியில் மனிதர்களாக ஒன்றிணைய வேண்டிய நேரம் வந்துவிட்டது.

பிறரைப் பற்றி அறிந்து கொள்வதுதான் கூட்டு நல்லிணக்கத்துடன் கூடிய நாட்டிற்கான அடிப்படை. ஒரு நாட்டில் வாழும் சகோதரனாகவோஅல்லதுசகோதரியாகவோ மற்றவரை நேசிக்கக் கூடியவர்கள் அந்த நாட்டின் கண்ணியத்திற்கும் பெருமைக்கும், தேசப்பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருப்பார்கள். அப்படிப்பட்ட நாடே வலிமையான நாடு என்று நாம் சொல்கிறோம். கடந்த காலங்களில் அரசியல், சமூக மற்றும் மத மற்றும் கலசாரரீதியாக மக்கள் வேறுபட்டவர்களாக இருந்திருக்கலாம். வெவ்வேறு மக்கள் வெவ்வேறு மரபுகளை மதங்களுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். சிலர் மாற்றங்களை மேற்கொள்ள முயன்றனர். சிலர் புதிய கலாசாரப் போக்குகளுக்குள் அந்த மாற்றத்தை ஏற்படுத்த முயன்றனர்.

இதற்கு மத்தியில் மக்கள் வீதியில் இறங்கி வாக்களித்து போராடி அந்த மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

ஒவ்வொரு மாற்றத்திற்கும் செயற்பாடு தேவை. சற்று யோசித்துப் பாருங்கள், உங்கள் உடலை மாற்ற வேண்டுமானால் உங்கள் தோரணையை மாற்ற வேண்டும். அந்த மாற்றம் என்னில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கூறி ஜனாதிபதி தலைமையில் அந்தக் எண்ணக்கருவை ஆரம்பித்தோம். முறைமை மாற்றத்திற்கு நாம் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது, இந்தப் பணியை 'என்னில் இருந்து' என்ற தொனிப்பொருளில் ஆரம்பித்தோம். அதுவரை இருந்த சீர்குலைந்த அரசியல் கலாசாரத்தை மாற்றும் நடவடிக்கை என்னில் இருந்து தொடங்கியது. நானே ஆரம்பித்தேன். அந்த நேரத்தில் பொறுப்பேற்ற அனைவரும் இதனை ஆரம்பித்தார்கள். ஜனாதிபதி அவருடன் ஆரம்பித்தார்.

அதனால்தான் இன்று ஒரு நாடு என்ற ரீதியில் தற்போது பொருளாதார ரீதியில் சுதந்திரமாக சுவாசிக்க முடிகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தை விட இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் நீங்கள் சுதந்திரமாக பொருளாதார ரீதியில் சுவாசிப்பீர்கள். இது குறித்து சிந்தித்துப் பாருங்கள். எனது தத்துவம் மனிதநேயம். அதனையே நம்புகின்றேன்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நமது நாடு 75 ஆண்டுகளாக வறிய நாடாக இருப்பதற்கு ஒரு காரணம் இனவெறிக் கலவரம்தான் அல்லது ஒரு குழு ஆயுதம் ஏந்தியமை. மக்கள் போராட வேண்டும். விலங்குகளாக அல்ல, மனிதர்களாக போராட வேண்டும்.

தற்போது அரசியல் இலாப நோக்கில் சிலர் இஸ்ரேல்_பலஸ்தீன பிரச்சினையை இனவாத கலவரமாகக் கொண்டுசெல்ல முயற்சிக்கின்றனர். வரலாற்றின் முந்திய தவறு மீண்டும் நிகழாமல் இருக்க என்னில் இருந்து எப்படித் தொடங்க வேண்டும் என்று யோசித்தேன். இன்று நாங்கள் எனது சிந்தனையின் ஒரு விளைவாக பங்கேற்கிறோம். அதற்கு எனக்கு வழிகாட்டிய அம்ஹர் மௌலவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹச்சிவத்த பழமையான வழிபாட்டுத்தலம் மூலம் இலங்கையர்களாகிய நாம் கடந்த காலத்திலிருந்து எம்மிடையே இருந்த சக வாழ்வின் நெருக்கத்தையும் உணர்திறனையும் தொன்மையாக உலகுக்கு எடுத்துரைக்கிறோம்.

எனவே தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், எங்களின் இந்த தொன்மையான பாரம்பரியத்தை விரைவில் உலகுக்கு எடுத்துரைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்தர்ப்பத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நான் என்னில் ஆரம்பித்தேன். நீங்களே தொடங்குங்கள். நீங்கள் தேசிய ஒற்றுமையை விரும்பினால், அது உங்களிடமிருந்து ஆரம்பமாகட்டும். நீங்கள் ஒரு வளர்ச்சிக்கண்ட நாட்டை விரும்பினால், நீங்களே இதனை தொடங்குங்கள்" என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

# நாட்டின் போக்குவரத்து அமைப்புகள் மின் வலுசக்தி முறைக்கு மாற வேண்டும்

## போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன







நாட்டின் போக்குவரத்து அமைப்புகள் மின் வலுசக்தி முறைக்கு மாற வேண்டும் என்பது காலத்தின் தேவையாகுமென போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 16ஆவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட கொழும்பு மோட்டார் வண்டிகள் கண்காட்சி (Colombo motor show ) 2023 கூடத்தை ஆரம்பித்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்காட்சியின் ஆரம்ப நாளில், சிறப்பு விருந்தினராக அமைச்சர் கலந்துகொண்டார்.

இவ் ஆண்டு கண்காட்சியில் இறக்குமதி செய்யப்பட்ட மின்சார வாகனங்கள், கார் உதிரிப்பாகங்கள் கொண்ட காட்சிக்கூடங்கள் மற்றும் இராணுவம் மற்றும் கடற்படையால் உள்நாட்டில் தயாரிக்கப்படும் யுத்த தாங்கிகள் மற்றும் ஜீப்புகள் உள்ளிட்ட பல வாகனங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

கண்காட்சியின் பல சிறப்புக் காட்சிக்கூடங்கள் அமைச்சரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதுடன், அங்கிருந்த வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் அவர் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

'உலகம் முழுவதும் வாகனத் துறையில் பல புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் நவீன கண்டுபிடிப்புகள் தற்போது காணப்படுகின்றன. புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தி, கலப்பு மற்றும் மின்சாரம் உள்ளிட்ட மாற்று வலுசக்தி அமைப்புகளுக்கு உலகம் மாறி வருகிறது என்றார்.

# கிரிக்கெட்டுக்கான தடைக்கு சூழலை ஏற்படுத்தியது கிரிக்கெட் சபையே

## ஆராய விசேட குழு அமைக்க வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம்



இலங்கை கிரிக்கெட்டை தடை செய்வதற்கான சூழலை ஏற்படுத்தியது இலங்கை கிரிக்கெட் சபையே என்றும் சர்வதேச கிரிகெட் சபைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் பொய் குற்றச்சாட்டுக்களே தடைக்கு வழி வகுத்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய விசேட குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து கருத்துக்களை முன் வைக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியினர் கிரிக்கெட் தொடர்பாக முன் வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் காரணமாகவே இலங்கை கிரிக்கெட்டுக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை தடை விதித்தது என ஆளும் கட்சியினர் குற்றம் சுமத்தி வந்தனர்.

தடை செய்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்தது இலங்கை கிரிக்கெட் சபையாகும்.

கிரிக்கெட் சபையின் தலைவர் சம்மி சில்வா கடந்த ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி பிரதான 5 குற்றச்சாட்டுக்களை தெரிவித்து, அரசாங்கம் கிரிக்கெட்டின் சுயாதீன தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த பொய் குற்றச்சாட்டுக்களே தடைக்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முதலாவது குற்றச்சாட்டு, கிரிக்கெட் போட்டிகளுக்காக விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் தலையீடு, இரண்டாவது குற்றச்சாட்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகளின் சம்பள விபரத்தை விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கோருவது, மூன்றாவது குற்றச்சாட்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அனுமதியின்றி இலங்கை பிரீமியர் லீக்கை நடத்த முடியுமாக இருப்பது, நான்காவது குற்றச்சாட்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கான புதிய யாப்பு அமைப்பதாக கூறி விளையாட்டுத் துறை அமைச்சர் மேற்கொள்ளும் தலையீடு, ஐந்தாவது குற்றச்சாட்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கணக்காய்வு அறிக்கை வரைபை வெளியிட்டதன் மூலம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு, மற்றும் மேலதிக குற்றச்சாட்டாக விளையாட்டுத்துறை அமைச்சர் தேசிய விளையாட்டு நிதியத்துக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடமிருந்து 20வீத நன்கொடை வழங்குமாறு அழுத்தம் கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் எந்த அடிப்படையுமற்றவை.

அதனால் இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய விசேட குழுவொன்றை அமைக்க வேண்டும். அதில் ஆளும் எதிர்க்கட்சியிலுள்ள கிரிக்கெட் தொடர்பான ஆர்வம் உள்ளவர்களை உள்ளடக்க வேண்டும். மாறாக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதால் இந்த விடயம் இழுத்தடிக்கப்பட்டு உண்மை மறைக்கப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று மாநகர சபை 2024ம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்ட வரவு - செலவுத்திட்டம்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 212(ஆ) பிரகாரம், அக்கரைப்பற்று மாநகர சபைக்கென மதிப்பீடு செய்யப்பட்ட 2024ம் நிதி ஆண்டுக்கான வருமானம், செலவு விபரங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சித்திட்ட வரவு - செலவு செலவுத் திட்டம் 20.11.2023ம் திகதி முதல் 07 தினங்களுக்கு பொதுமக்கள் பார்வைக்காக அக்கரைப்பற்று மாநகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஏ.ரி.எம். ராபி**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**அக்கரைப்பற்று.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

பேராதனை விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி பிரிவினால் மேற்கொள்ளப்படும் குண்டசாலை விவசாயப் பாடசாலையில் திசு வளர்ப்பு ஆய்வுகூடத்தில் 04 வளிச்சீராக்கிகளை வழங்கி பொருத்துவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இது தொடர்பான மேலதிக விபரங்களை **www.doa.gov.lk** எனும் இணையதளத்தில் அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் இறுதி நாள் 2023-12-04

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விரிவாக்கல் மற்றும் பயிற்சிப் பிரிவு,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி,**
**பேராதனை.**
**தொலைபேசி இல. 081-2388098**

# அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பகல் பராமரிப்பு நிலையத்திற்காக கட்டிடம் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்லைக்கழகத்தின் பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலையத்திற்காக பொருத்தமான கட்டிடம் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டி உள்ளது. அதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்புகளிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலையிடப்பட்ட முன்மொழிவுகள் இத்தால் கோரப்படுகின்றன.

1. இடம்: ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கங்கொடவில பிரதான வளவில் இருந்து ஒரு (1) கிலோமீற்றருக்குள் இருத்தல் வேண்டும் என்பதோடு, பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு பொருத்தமான சூழல் ஒன்றில் அமைந்திருத்தல் வேண்டும்.
2. கட்டிடத்தின் தேவை: 1500 சதுர அடிக்கு மேல் இருத்தல் வேண்டும்.
3. நுழைவு: காணி பிரதான வீதிக்கு முகப்பாக இல்லாவிட்டால் நுழைவு பாதை 10 அடி அகலம் கொண்டிருத்தல் வேண்டும்.
4. உரிமை: தெளிவான சட்டரீதியான உரிமை இருப்பின் ஓர் உரிமையாளர் அல்லது குடும்ப உரிமையாக இருக்கலாம்.
5. இடத் தேவை: 20 பிள்ளைகளைக் கொண்ட மூன்று வகுப்புகள் நடத்துவதற்கு போதுமான வகுப்பறைகளுக்காக இடம் இருத்தல் வேண்டும் என்பதோடு, மூன்று படுக்கையறைகள் மற்றும் சமையலறைக்காக போதுமான அறை ஒன்று இருத்தல் வேண்டும். விளையாட்டு முற்றம் ஒன்றை தயாரிப்பதற்கு போதுமான முற்றவெளி ஒன்று இருத்தல் வேண்டும்.
6. வேறு: மின்சாரம், குழாய் நீர் மற்றும் போதுமான கழிப்பறை இருத்தல் வேண்டும்.
7. வாடகை செலுத்துதல்: வாடகை மாதாந்தம் வழங்கப்படும் (பல்கலைக்கழகம் ஏற்கும் வாடகைத் தொகை மதிப்பீட்டு அறிக்கை அடிப்படையில் இருக்கும்).
8. வாடகைக் காலம்: வாடகைக் காலம் ஓர் ஆண்டாகும். தேவைக்கு அமைய இந்தக் காலத்தை நீடிக்க முடியும். (உரிமையாளர் பல்கலைக்கழகத்துடன் சட்டரீதியான ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும்)

கீழுள்ள விபரங்கள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிப்பது அவசியமாகும்.

I. கூறுவிலைக்கான முன்மொழிவு ஆவணத்தை சமர்ப்பிக்கும் நபரின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்.
II. காணி அமைந்துள்ள இடம், கிராம சேவகர் பிரிவின் முகவரி மற்றும் வரிப்பண இலக்கம்.
III. உரிமையாளரின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம்
IV. கட்டிடத்தின் தற்போதைய பயன்பாடு
V. உரிமை உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதி
VI. அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்தின் திட்டம்
VII. உரிமை அறிக்கை (கடந்த 10 ஆண்டுகளுக்கு)
VIII. அங்கீகரிக்கப்பட்ட நில அளவைப் பத்திரம் (இற்றைப்படுத்தப்பட்டது)

முன்வைக்கப்படும் கூறுவிலை குறிப்பிடப்பட்ட முன்மொழிவு ஆவணம் 2024 மார்ச் 12 வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வது மற்றும் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இடத்தின் தகுதியை இடத்தை பரீட்சித்த பின் கருத்தில் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ஒன்றினால் முன்மொழிவுகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

இது தொடர்பில் எடுக்கப்படும் இறுதி முடிவு பெறுகைக் குழு வசமானது.

முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகள் 2023.12.12 ஆம் திகதி பி.ப. 02.30 க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு நுகேகொடை, கங்கொடவிலவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளருக்கு/ நிறுவனம் (தகவல் மற்றும் சேவை) பதிவுத் தபாலில் சமர்ப்பிப்பது அல்லது மேல் குறிப்பிடப்பட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்களை இடுகின்ற பெட்டியில் இடுவதை மேற்கொள்ள வேண்டும். கூறுவிலையிடப்பட்ட முன்மொழிவை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பல்கலைக்கழக பகல் பராமரிப்பு நிலையத்திற்காக வாடகை அடிப்படையில் கட்டிடம் ஒன்றை பெற்றுக்கொள்ளல்" என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற கூறுவிலை இடப்பட்ட முன்மொழிவு நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாது மீண்டும் விலைமனுதாரர்களுக்கு அனுப்பப்படும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற பொருத்தமான சேவை வழங்குநர்களுக்கு வார நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 04.15 வரை தொலைபேசி இலக்கம் 011-2802856 ஊடாக உதவிப் பதிவாளரை/ நிறுவனம் (தகவல் மற்றும் சேவை) அழைத்து மேலதிக விபரங்களை பெற முடியும்.

**பதிவாளர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**கங்கொடவில**
**நுகேகொடை**
**2023.11.20**

# அறிவித்தல்

## கேள்விக்கான அழைப்பு

## இலங்கை மின்சார (தனியார்) கம்பனி

**கேள்வியின் பெயர் : பாதுகாப்பு சேவை பெறுகை**
**கேள்வி இலக்கம் : LECO/NU/ADM/SVC1/PRO/23/62-02**

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியின் நுகேகொடை கிளையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணுமாறு 2023/2025 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு சேவைப் பெறுகைக்காக தகைமையுடைய மற்றும் தகுதிகொண்ட கேள்விதாரர்களிடமிருந்து பொதியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| சேவை நிலையம் | முகவரி | ஊழியர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | பகல் | | இரவு |
| | | பாதுகாப்பு அதிகாரி | பாதுகாப்பு ஊழியர் | பாதுகாப்பு ஊழியர் |
| கிளை அலுவலகம் நுகேகொடை | இல. 204, ஹைலெவல் வீதி, நுகேகொடை | 01 | 01 | 02 |
| பாவனையாளர் சேவை நிலையம் (நுகேகொடை) | இல. 115, சுபத்ராராம வீதி, கங்கொடவல, நுகேகொடை | - | 01 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (மஹரகம) | இல. 48/7, நீலம்மஹர வீதி, கொடிகமுவ, மஹரகம | - | 01 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (பொலன்நருவ) | இல. 61, மஹரகம வீதி, பொரலஸ்கமுவ | - | 01 | 01 |

01. பாதுகாப்பு சேவைக் காலம் கேள்வி பெறுகை மேற்கொள்ளும் தினம் முதல் இரண்டு வருடங்களாகும்.
02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும்.
03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு நுகேகொட, ஹைலெவல வீதி, இல. 204இல் அமைந்துள்ள நுகேகொட கிளையலுவலகத்தில் கடமை நாட்களில் (மு.ப 9.00 முதல் பி.ப 4.30 இற்கு இடையில்) கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
04. மீளளிக்கப்படாத ரூ. 1500.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் கேள்வி ஆவணத்தொகுதியை நுகேகொட கிளை அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம். குறித்த கொடுப்பனவுகளை நுகேகொட கிளை அலுவலகத்தின் கணக்கு இலக்கத்திற்கு காசாக செலுத்த வேண்டும்.
05. கேள்விகள் 2023.12.06 பி.ப 3.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கிளை அலுவலகத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விகோரல் 2023.12.06 பி.ப 3.00 இற்கு கிளை அலுவலகத்தில் பெறுகைக்குழுவின் மூலம் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் நேரடியாக சமுகமளிக்கமுடியும்.
07. கேள்விகளை ஒப்படைப்பதற்காக குறித்த இறுதித் திகதி முதல் 60 நாட்கள் காலம் கேள்விகள் செல்லுப்படியாதல் வேண்டும்.

**பிரதம பொறியிலாளர்,**
**(பொது முகாமையாளர் சார்பாக)**
**இலங்கை மின்சார (தனியார்) கம்பனி,**
**கிளை அலுவலகம், நுகேகொடை**
**இல. 204, ஹைலெவல் வீதி, நுகேகொடை**
**011-2856380 / 011-2813509**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# களுபோவில – கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை 2024 ஆம் ஆண்டுக்காக பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்கான அழைப்பு

## (300,000.00 ரூபாவை விஞ்சாத ஒப்பந்தங்கள்)

1. கீழ் விபரிக்கப்பட்டவாறு "களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்காக 2024ஆம் ஆண்டுக்கு பராமரிப்பு ஒப்பந்தங்களின் பதிவுக்காக (300,000.00 ரூபாவை விஞ்சாத ஒப்பந்தங்கள்)" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து களுபோவில – கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட முன் தகைமை ஆவணங்கள் கோரப்படுகின்றன.
2. வேலைத் தளங்கள் களுபோவில – கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை வளவுக்குள் அமைந்திருப்பதோடு மருத்துவமனை மற்றும் மற்ற நிறுவனங்களின் வழக்கமான செயற்பாடுகளுக்கு இடையூறு இன்றி வேலைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். குறித்த வேலைக்கு அமைய ஒப்பந்தக்காலம் அமையலாம். நாளுக்கு நாள் உள்ள அவசர பழுதுபார்த்தல்கள் கொண்டதாக வேலை அமையும்; குழாய் வேலைகள், கழிவுநீர், மின்சாரம், வர்ணம் பூசுதல், கொங்கிறீட் செய்தல், வளிச்சீராக்கி, நீர் காப்பு, அலுமினிய வேலை முதலியவை இதர வேலைகளாகும்.
3. ஆவணத்தில் தரப்பட்டுள்ள தகைமைக்கான தேவைகள் மற்றும் தேசிய பெறுகை நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 2006, பெறுகை வழிகாட்டி நடைமுறைக்கு அமைய முன் தகைமை மேற்கொள்ளப்படும். நிறுவனத்தின் கீழ் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் CIDA பதிவை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

   நிபுணத்துவம்: கட்டிடம், மின்சாரம், வளிச்சீராக்கி, குழாய் பொருத்தல்

   தரம்: C9 மற்றும் அதற்கு மேல் (திருத்தப்பட்ட பதிவுத் திட்டத்திற்கு அமைய); EM5 அல்லது அதற்கு மேல், SP5 அல்லது அதற்கு மேல்
5. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தேவையான தகைமையில் உள்ளடங்குவன;
   - ஒப்பந்ததாரர் பிரதான ஒப்பந்ததாரர்/ பராமரிப்புக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் குறைந்தது வேலை அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
   - பராமரிப்பு வேலைகளுக்கு உடன் வருவதற்கான திறனை ஒப்பந்ததாரர் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு மருத்துவமனை இயங்கும் அதே நேரத்தில் அந்த வேலையை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் வேண்டும்.
   - வேலை அனுபவத்திற்காக அத்தாட்சி ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 2000.00 ரூபாவை செலுத்தி சாதாரண வேலை நாட்களில் 2023.11.21 ஆம் திகதி தொடக்கம் 2023.12.06 ஆம் திகதி வரை களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான முன் தகைமை விண்ணப்பத்தின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும். அதனை களுபோவில, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, சிறாப்பருக்கு செலுத்துதல் வேண்டும்.
7. முன் தகைமை விண்ணப்பங்களை 2023.12.07 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.
8. அனைத்து விண்ணப்பதாரர்களும் அதிகாரம் பெற்ற கையொப்பதாரர் மூலம் முறையாக கையொப்பமிட: வழங்கப்பட்டுள்ள வடிவத்தில் அறிவிப்பு ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

**கணக்காளர்,**
**1ஆவது மாடி,**
**நிர்வாகக் கட்டிடம்,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில.**

# வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## மாகாண கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்

பாடசாலையின் அடிப்படை நலன்கள், மற்றும் வியூக அமைப்பினாலான அபிவிருத்திக்கு திட்டமிடல் மற்றும் பெறுகைகள் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் 26/2018ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கமைய கல்விச் செயற்பாடுகளுக்கான கொள்வனவு மற்றும் சேவைகளை வழங்குவதற்கு குறித்த 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவார்கள்.
2023 டிசம்பர் 22ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு பின்வரும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் அவ்வலுவலகத்திலேயே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 2023 நவம்பர் 21ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை குறித்த வலயக் கல்விப் பணிப்பாளருக்கு 300.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பின்வரும் ஒவ்வொரு பொருள் மற்றும் சேவை தொகுதிகளின் பொருட்டு வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களை குறித்த வலயக் கல்வி அலுவலகத்திற்கு நேரில் கொண்டு வந்து கையளித்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

| தொ. இல. | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|
| 01. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம் | 025-2234808 |
| 02. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தம்புத்தேகம | 025-2275116 |
| 03. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கெக்கிராவ | 025-2264501 |
| 04. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கலென்பிந்துனுவெவ | 025-2258382 |
| 05. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கெப்பெத்திகொல்லாவ | 025-2298069 |
| 06. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், பொலொன்னறுவை | 027-2226982 |
| 07. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், திம்புலாகல | 027-2245844 |
| 08. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், ஹிங்குரக்கொட | 027-2051105 |

| தொகுதி இலக்கம் | பொருள் மற்றும் சேவைகள் |
|---|---|
| 01. | காகிதாதிகள் |
| 02. | கணனி, போட்டோப்பிரதி, அச்சு இயந்திரம், சேவை மற்றும் பழுதுபார்த்தல் |
| 03. | விஞ்ஞான கணித, விவசாய, தொழிநுட்ப விடய பொருட்கள், உபகரணங்கள் |
| 04. | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| 05. | அழகியற்கலை பொருட்கள் (சங்கீதம், நடனம், நாட்டியம், கலை, சித்தரம்) |
| 06. | விசேடக் கல்வி உபகரணங்கள் |
| 07. | விஞ்ஞானகூட உபகரணங்களின் சேவை மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல் |
| 08. | அலுவலக உபகரணங்கள் (இரும்பு, பிளாஸ்டிக், மரம் கலப்பு) |
| 09. | வளிச்சீராக்கி இயந்திரம் சேவை / பழுதுபார்த்தல் |
| 10. | பாடசாலை மரத் தளபாடங்களை வழங்குதல், சேவை மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல் |
| 11. | பரிசுப் பொருட்கள் |
| 12. | ஒலிபெருக்கி மற்றும் உற்சவப் பொருட்கள் வாடகைக்கு வழங்குதல் |
| 13. | மின் உபகரணங்கள் வழங்குதல், சேர்விஸ் மற்றும் பழுதுபார்த்தல் |
| 14. | அலுவலக அச்சு விடயங்கள் (எழுத்து ஒழுங்குப்படுத்தல்) |
| 15. | உணவகத்தை நடத்திச் செல்லல் |
| 16. | சிற்றுண்டி, பான வகைகள் மற்றும் கேட்டரிங் சேவை வழங்குதல் |
| 17. | நூலக புத்தகங்கள் வழங்குதல் |
| 18. | பாடசாலை சீருடை வழங்குதல் மற்றும் தைத்தல் |
| 19. | மேலைத்தே மற்றும் உள்ளூர் மருந்து வகைகள் வழங்குதல் |
| 20. | போக்குவரத்து வசதிகள் வாடகைக்கு வழங்குதல் |
| 21. | ஒதுக்கப்பட்ட பொருட்கள் (இரும்பு, பிளாஸ்டிக், புத்தகங்கள், பத்திரிகை, கடதாசி போன்ற) கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் |
| 22. | கட்டிடம் பொருட்கள் வழங்குதல் |

**எஸ்.எம்.டபிள்யூ. சமரக்கோன்,**
**மாகாண கல்விப் பணிப்பாளர்,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**

**2023.11.16**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# விவசாய திணைக்களம் — பேராதனை

## விலைமனுக் கோரல்

**பேராதனை, விவசாய திணைக்கள நிர்வாகப் பிரிவின் பெறுகைக் குழுவினால் துப்புரவேற்பாடு மற்றும் துப்புரவு சேவைகளை மேற்கொள்வதற்காக இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

இது தொடர்பிலான விபரங்கள், விலைமனு படிவம் மற்றும் நிபந்தனைகள் போன்றவை, விவசாய திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் பா/2 கிளையில் இலவசமாக பரீட்சித்து பார்க்க முடியும். விண்ணப்பதாரர்களுக்கு மீளளிக்கப்படாத 3500/- கட்டணம் ஒன்றை விவசாயத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு பணமாக செலுத்திய பின் பேராதனை, பழைய கலஹா வீதியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவின் பா/2 கிளையில், 2023.11.20 ஆம் திகதி தொடக்கம் 2023.12.11 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை குறித்த விலைமனு ஆவணங்கள் மற்றும் விலைமனு படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

பெ.ந.கோ. 13 ஆவது பிரிவின் 8.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொடர்புபட்ட விண்ணப்பதாரர்கள் 1987 இல் 03 ஆம் இலக்கம் கொண்ட ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு அதன் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது குறித்த வளவை நேரடியாக பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் இட்டு, தலைவர், நிர்வாகப் பிரிவு பெறுகைக் குழு, விவசாயத் திணைக்களம், பழைய கலஹ வீதி, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் மேலுள்ள முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பா/2 கிளையில் வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் பதிவிட்டு விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். விலைமனுக்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "துப்புரவேற்பாடு மற்றும் துப்புரவு சேவைக்கான விலைமனுக்கள் - 2023/2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது 2023.12.12 ஆம் திகதி மு.ப. 10.30க்கு நிறைவு செய்வதோடு, அப்போதே விவசாயத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் பா/2 கிளையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுக்களை சமர்ப்பித்தவர்களுக்கு அல்லது அவர்களின் எழுத்துமூலம் அதிகாரத்தை பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு மாத்திரம் பங்கேற்க முடியும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட ரூபா 218,000 விலைமனு பிணை ஒன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். பணமாக செலுத்துவதாயின் பிணை ரூபா 109,000 ஆகும். ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களுக்கு மேலதிக விபரங்களை தொலைபேசி இலக்கம் 081-2388331-33 (நீடிப்பு 125) மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**நிர்வாகப் பிரவின் பெறுகைக் குழு.**

ஈரான் தூதரகத்தின் ஏற்பாட்டில்

# பலஸ்தீன் – இஸ்ரேல் விவகாரம் தொடர்பான ஊடக சந்திப்பு

*ருஸைக் பாரூக்*

கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்தின் ஏற்பாட்டில் பலஸ்தீன் இஸ்ரேல் விவகாரம் தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பொன்று அண்மையில் கலாசார நிலைய கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இலங்கைக்கான ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதுவர் டாக்டர் அலிரேசா டெல்கோஷ் இதன்போது கருத்து தெரிவிக் கையில்; பலஸ்தீனப் பிரச்சினை கடந்த ஏழு தசாப்தங்களாக பழங்கால மக்களின் நில ஆக்கிரமிப்பு, பெரும்பான்மை



யான பூர்வீக குடிகளின் இடம்பெயர்வு மற்றும் ஒடுக்குமுறை காசா மற்றும் மேற்குக் கரையில் இன்னும் வாழும் மக்களை அவமானப்படுத் துவது பலஸ்தீனிய இஸ்ரேலியப் பிரச்சினை அல்ல, அரபுஇஸ்ரேலியப் பிரச்சினை அல்லது முஸ்லீம்இஸ்ரேலியப் பிரச்சினையும் அல்ல. இது உலகளாவிய மற்றும் முழு சர்வதேசத்திற் கும் ஒன்றாகும்

டாக்டர் அலிரேசா மேலும் கூறுகையில், கடந்த ஆறு வாரங்களாக காஸாவில் மிகவும் பயங்கரமான பயங்கரங்கள் வெளிப்பட்டன. காசா பகுதி முழுவதும் இஸ்ரேல் இடைவி டாத மற்றும் அதிகரித்து வரும் குண்டுத் தாக்கு தல்களை நடத்தியது.

அவை பல மாடி குடியிருப்பு கட்டடங் கள், மருத்துவ வசதிகள், மசூதிகள், தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் மற்றும் அகதிகள் மற்றும் இடம்பெயர்வு முகாம்கள் உட்பட பொதுமக்களின் இலக்குகளை குறிவைத்து அழித்துள்ளன. காசா மீதான இஸ்ரேலின் ஆக் கிரமிப்பு ஒரு முழுமையான போர்க்குற்றம் மட்டுமல்ல, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங் களும் இஸ்ரேலிய ஆட்சியால் செய்யப்பட் டுள்ளன எனவும் தெரிவித்தார்.

## மக்கள் வங்கி

# பிராந்திய தலைமைக் காரியாலயம் — வன்னி

## மீட்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

மக்கள் வங்கி வன்னிப் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / மற்றும் சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 05.12.2023 தேதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள தேதிகள் மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் 06.12.2023 மற்றும் 07.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடம் | பிராந்திய காரியாலயம், வன்னி, வவுனியா |
|---|---|
| கிளைகள் | முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம் |
| சேவை மையங்கள் | புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வவுனியா நகரம், நெடுங்கேணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, விசுவமடு, மல்லாவி, கனகராயன்குளம், நானாட்டான், சிலாவத்துறை |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம், இல.9, 1/1, புகையிரத நிலைய வீதி, வவுனியா, வன்னி தொலைபேசி இல. : 0242225054 / 024-2222972

PEOPLE'S BANK
Pride of the Nation

# அதிபர் சேவைக்கு பதவி உயர்வு



அகில இலங்கை ரீதியாக அண்மை யில் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டோர் பெயர்ப் பட்டியலில், கஹட்டோவிட்ட பிரதேசத்தை பிறப்பிடமாக கொண்ட ஆசிரியை கலாநிதி ஜவாஹிருல் இம்ரத் நுஸ்கி மற்றும் ஆசிரியை பாத்திமா ரயீஸா ரஸ்ஸாக் ஆகியோர், அதிபர் சேவை தரம் 3 க்கு உயர்தர சித்திகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அதிபர் நியமனக் கடி தங்கள், கல்வி அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்டன.

வதுறுகம கூறுவமுல்ல மகா வித்தியால யத்தில் உள வளத்துறை ஆலோசகராக 2015 ஆம் ஆண்டு முதல் 9 வருடங்களாக சேவை யாற்றும் ஆசிரியை இம்ரத், ஓய்வுபெற்ற ஆசிரியர்களான மௌலவி அப்துஸ்ஸலாம் மர்ஹூமா பழீலா பேகம் ஆகியோரின் புதல் வியும், வர்த்தகர் எம். என்.எம். நுஸ்கியின் துணைவியுமாவார்.

திஹாரிய தாருஸ்ஸலாம் ஆரம்பப் பாடசா லையில் 2018 ஆம் வருடம் முதல் 6 ஆண்டுக ளாகக் கடமை புரியும் ஆசிரியை ரயீஸா, ஓய் வுபெற்ற ஆசிரியர் மௌலவி அப்துர்ரஸ்ஸாக் மர்ஹூமா சித்தி பௌஸியா ஆகியோரின் புதல்வியும், திஹாரிய அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையில் கணக்கியல் பாட ஆசிரிய ராகப் பணியாற்றும் எஸ்.எம். றிஸ்வானின் மனைவியுமாவார்.

# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகாரசபை

## 2024 ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல் மற்றும் கழிக்கப்பட்ட பொருட்களை ஏலமிடுதல்

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இந்த அதிகார சபையில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்துகொள்ளும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோர்களிடமிருந்து 2023.12.22 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. வழங்கல்கள்**

1.1 காகிதாதிகள்/ கணனி காகிதாதிகள் / டோனர் / ரிபன் மற்றும் தீந்தை
1.2 வாகனங்களுக்கான டயர்கள், டியூப்கள் மற்றும் பற்றரிகள்
1.3 அனைத்து வகையான வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள்
1.4 அலுவலக தளபாடங்கள், மரம், உருக்கு, பிளாஸ்டிக் பொருட்கள்
1.5 அலுவலக உபகரணங்கள் (ரோணியோ இயந்திரம்/ நிழற்பிரதி இயந்திரம்/ முத்திரை அச்சுப்பொறி/ வளிச்சீராக்கி இயந்திரம் ஆகியன)
1.6 கணனி கருவிகள், கணனி அச்சுப் பொறிகள் மற்றும் துணைப்பாகங்கள்
1.7 மின் உபகரணங்கள்
1.8 குடைகள்/ மழையங்கிகள்/ பிரயாணப்பைகள்/ தோற்பொருட்கள்
1.9 கொழுந்துக் கூடை/ கொழுந்து கத்தரி/ நிறுவைத் தராசு/ அளவை நாடா/ நாற்றுமேடை நிழல் வலைகள்
1.10 பொலித்தீன்/ விவசாய இரசாயனப் பொருட்கள்/ உரம்/ டொலமைட் / கொம்போஸ்ட்
1.11 கட்புல, செவிப்புல உபகரணங்கள்
1.12 விவசாய உபகரணங்கள் (தெளிகருவிகள், மண்வெட்டிகள், கவ்வாத்து கத்தி மற்றும் முள்ளுகள் போன்றன)
1.13 துணிகள்
1.14 மோட்டார் வாகனங்கள்/ மோட்டார் சைக்கிள்கள்
1.15 ஆய்வுகூட உபகரணங்கள்/ இரசாயனப் பொருட்கள்
1.16 வளிச்சீராக்கி இயந்திரங்கள் / குளிர்சாதனப்பெட்டிகள்
1.17 தீயணைப்பு உபகரணம்
1.18 மின்பிறப்பாக்கி
1.19 CCTV Camera மற்றும் துணைப்பாகங்கள்

**2. சேவைகள்**

2.1 அச்சிடல்/ கணனி அச்சு வேலைகள்
2.2 அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (தளபாடங்கள்)
2.3 மின் உபகரணங்களின் திருத்தவேலைகள்/ பராமரிப்பு மற்றும் நீர்க்குழாய் திருத்தவேலைகள்
2.4 அலுவலக இயந்திரப் பொறிமுறை திருத்தவேலைகள்/ பராமரிப்பு
2.5 அனைத்துவித வாகனங்களினதும் பொறிமுறை திருத்தவேலைகள்/ தகர வேலை மற்றும் நிறப்பூச்சு பூசுதல்
2.6 வாகனங்களுக்கான (சேர்விஸ்) சேவை வழங்குதல்
2.7 அனைத்துவித வாகனங்களினதும் மோட்டார் மின் தொழில்நுட்ப வேலைகள்
2.8 மோட்டார் வாகன வளிச்சீராக்கி திருத்தவேலைகள்
2.9 கட்டிட வளிச்சீராக்கி திருத்தவேலைகள்
2.10 கட்டிட நிர்மாணங்கள் / திருத்தவேலைகள் (CIDA பதிவிலக்கத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
2.11 கணனி/ கணனி அச்சுப்பொறி திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
2.12 தீயணைப்பு உபகரண பராமரிப்பு மற்றும் சேவை.
2.13 மின்பிறப்பாக்கி திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள்
2.14 CCTV Camera மற்றும் துணைப்பாகங்கள் திருத்தவேலைகள் மற்றும் சேவை
2.15 நிகழ்வு முகாமைத்துவ ஒழுங்குபடுத்தல் வேலைகள்

இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட உரிய விண்ணப்பப் படிவத்தில் மாத்திரமே பதிவு செய்துகொள்வதற்கு விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் தேவையான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சேவை நிபந்தனைகளை ஒரு உருப்படிக்கு 500.00 ரூபா வீதம் செலுத்தி ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக பதிவு செய்துகொள்வது கட்டாயமாகும்.

**தேசிய சிறுதோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் கழிக்கப்பட்ட பொருட்களை ஏலத்தில் விற்றல்.**

பொருட்களின் ஏலவிற்பனை 2023.12.04 மு.ப. 9.00 இற்கு தேயிலை சிறுதோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையக வளாகத்தில் நடைபெறும். கீழேயுள்ள முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தில் அறிவித்தல் பலகையில் பொருட்களை ஏலவிற்பனையிடலுடன் சம்பந்தப்பட்ட நிபந்தனை மற்றும் பொருட்களின் விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகள் : 011-7909027 தொ.பே. இல. ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்

**தலைவர்**
**தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகாரசபை**
**இல. 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

**தொலைபேசி: 011-7909020/21**
**தொலைநகல்: 011-2784925/28**

MILCO®

# மில்கோ (பிறைவட்) லிமிடட்

(அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# 2024 ஆம் ஆண்டுக்காக காப்புறுதித் திட்டத்தின் பெறுகை

## கேள்விமனு இல. M/PUR/TEN/2023/03

மில்கோ (பிறைவட்) லிமிடட், இலங்கையில் ஹைலேண்ட் வர்த்தக நாமத்தின் கீழ் பால் உற்பத்திகளை தயாரிக்கும் முன்னணி பால் பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனம் ஒன்றாகும்.

ஓர் ஆண்டு காலத்திற்கு பின்வருவனவற்றுக்காக (தகைமை அளவுகோலுக்கு இந்த ஆவணத்தின் பொது நிபந்தனைகளின் கீழ் 4ஆம் இலக்க குறிப்பை பார்க்கவும்) தகுதியுடைய காப்புறுதி நிறுவனங்கள்/ காப்புறுதி தரகர் நிறுவனங்களிடம் இருந்து மாத்திரம் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கேள்விமனு குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. குழு ஆயுள் காப்புறுதி
2. சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலை காப்பீடு
3. தொழிலாளர் இழப்பீடு
4. தீ காப்புறுதி
5. கணினி மற்றும் துணைப்பொருட்கள்
6. பணம் (போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு)
7. மோட்டார் வாகனங்கள்
8. பொருட்கள் போக்குவரத்து
9. Boilers & Pressure Vessels

**பொது நிபந்தனைகள்**

1. விபரங்களுடன் கேள்விமனு ஆவணங்களை 2023.11.21 ஆம் திகதி தொடக்கம் 2023.12.08 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 4.00 வரை கொழும்பு 3, காலி வீதி, இல. 345, 5ஆவது மாடி, கொள்வனவுப் பிரிவு, மில்கோ (பிறைவட்) லிமிடட்டில் இருந்து (மீளளிக்கப்படாத கட்டணத்தின் வங்கி வைப்பு ரசீது மற்றும் எழுத்துமூல கோரிக்கையை சமர்ப்பித்து) விபரங்களுடன் கேள்விமனு ஆவணங்களை பெற முடியும். கேள்விமனு ஆவணங்களை மில்கோவின் கொள்வனவுப் பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்க முடியும்.
2. இந்த கேள்விமனுவில் பங்கேற்பதற்கு விரும்பும் அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் ரொக்கப்பணம் மூலம் மக்கள் வங்கியின் எந்த ஒரு கிளையிலும் ரூபா 25000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்தல் வேண்டும். (வைப்புச் செய்யும் ரசீதில் நிறுவனத்தின் பெயர் மற்றும் நோக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்). வங்கி விபரம் வருமாறு. (எந்த ஒரு சூழலிலும் ரொக்கப்பணம் ஏற்கப்படமாட்டாது).
   கணக்கின் பெயர்: மில்கோ (பிறைவட்) லிமிடட்
   வங்கி மற்றும் கிளை: மக்கள் வங்கி கோர்பரேட் வங்கிப் பிரிவு
   கணக்கு இல.: 004100180210331
3. உயர் முகாமையாளரிடம் இருந்து அங்கீகார கோரிக்கை கடிதம் ஒன்றுடன் ஒவ்வொரு காப்புறுதி நிறுவனம்/ காப்புறுதி தரகர் நிறுவனத்திற்கு ஒரு தொகுதி கேள்விமனு ஆவணமே வழங்கப்படும்.
4. **தகைமை அளவுகோல்**

   **4.1 காப்புறுதி நிறுவனம்**

   4.1.1 நிறுவனமானது இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் (IRCSL) முறையான உரிமத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
   4.1.2 காப்புறுதி விண்ணப்ப கணிப்பு ஆண்டு 2020 காலத்தின் ஆண்டு புரள்வு 3 பில்லியன் இ. ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
   4.1.3 அனைத்து காப்புறுதி இடுநர்களும் IRCSL மூலம் வழங்கப்பட்ட வழிகாட்டலின்படி மீள்காப்புறுதி நிறுவனங்களுடன் மாத்திரம் தமது மீள்காப்புறுதியை வைக்க வேண்டும் (சமர்ப்பிக்கப்படும் ஆவணத்துடன் சேர்த்து முன்மொழியப்பட்ட காப்புறுதியில் மீள்காப்புறுதி/கள், தமது கடன் மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு நிறுவனத்தை அறிவிக்கவும்)

   **4.2 காப்புறுதி தரகர் நிறுவனம்**

   4.2.1 நிறுவனமானது பொது மற்றும் ஆயுள் காப்புறுதி இரண்டையும் கையாள்வதற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் (IRCSL) முறையான உரிமத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
   4.2.2 காப்புறுதி விண்ணப்ப கணிப்பு ஆண்டு 2020 காலத்தின் ஆண்டின் மொத்த ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பணம் 1 பில்லியன் இ. ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
   4.2.3 அனைத்து தரகர்களும் இந்த ஆவணத்தின் 4.1 இல் குறிப்பிடப்பட்ட தகைமை அளவுகோலின்படி மாத்திரம் தமது காப்புறுதியை வைத்திருத்தல் வேண்டும் என்பதோடு சமர்ப்பிக்கப்படும் ஆவணத்துடன் சேர்த்து முன்மொழியப்பட்ட காப்புறுதியின் காப்புறுதியிடுநர் மற்றும் அவர்களின் மீள்காப்புறுதி/களை அறிவிப்பது தேவையாகும்.
   4.2.4 கடந்த 3 ஆண்டு காலத்தில் இதனை ஒத்த அளவு அல்லது இதனைவிடவும் பெரிய கூட்டு நிறுவனங்களை கையாண்ட அனுபவம் (நிறுவனத்தின் அளவுடன் சேர்த்து கூட்டு நிறுவனங்களின் பட்டியலை அறிவிக்கவும்)
   4.2.5 காப்புறுதித் துறையில் 15 ஆண்டுகளுக்கு குறையாத செயற்படும் அனுபவம் மற்றும் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் இணை அல்லது சக ஒருவராக உள்ள தகுதிபெற்ற தொழில்முறையாளர்களை நிறுவனம் கொண்டிருத்தல் வேண்டும்.
   4.2.6 முறையாக பதிவு செய்யப்பட்ட காப்புறுதி தரகர் ஒருவராக குறைந்தது 20 ஆண்டுகள் செயற்பட்டிருத்தல் வேண்டும்.
5. 90 நாட்கள் செல்லுபடிக் காலத்திற்காக இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட வழங்கலுடன் 1,000,000.00 ரூபாவின் விலைமனு பத்திரத்தை (கேள்விமனு உத்தரவாதப் பத்திரம்) அளித்தல் வேண்டும்.
6. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவுப் பிரிவில் 2023.12.11 ஆம் திகதி பி.ப. 3.00க்கு மூடப்பட்டு திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவரின் பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.
7. எந்த ஒரு காரணமும் கூறாது அனைத்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்களையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விக் குழு வசமானது.
8. மில்கோ ஊழியர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுவில் பங்கேற்க முடியாது.

தேவை ஏற்படின் மேலதிக விபரங்களை 011-4500530 என்ற தொலைபேசி இலக்கத்தில் கொள்வனவு முகாமையாளரிடம் இருந்து பெற முடியும்.

**தலைவர் - கேள்விக் குழு**
**மில்கோ (பிறைவட்) லிமிடட்**
**இல. 345, காலி வீதி, கொழும்பு 3**

# புது மாணவர் அனுமதிக்கு விண்ணப்பம்

*திறப்பனை தினகரன் நிருபர்*

இக்கிரிகொல்லாவ ஹமீதியா அரபுக் கல்லூரிக்கு 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய மாணவர் களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. கல்லூரியின் மனனப் பிரிவுக்கு 2023 ல் தரம் 06 அல்லது 07 சித்தியடைந்தும், ஷரீஆ பிரிவுக்கு 2023 ல் தரம் 08 அல்லது 09 சித் தியடைந்த, அல் குர் ஆனை சரளமாக ஓதத்தெரிந்த ஆண் மாணவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை கல்லூரி வளா கத்தில் எதிர்வரும் டிசம்பர் 03, 09 ஆகிய தினங் களில் காலை 8.30 க்கு ஆரம்பிக்கப் படவுள்ளது. சகல விபரங்களும் அடங்கிய மாணவரின் சுய விபர கோவையை தயாரித்து அதிபர், ஹமீதியா அரபுக் கல்லூரி, இக்கிரிகொல்லாவ, வஹமல்கொல்லாவ எனும் முகவரிக்கு டிசம்பர் 03 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கல்லூரி அதிபர் அஷ் ஷெய்க் ஆதம் யாசின் (ரஹ்மானி ) தெரிவித்தார்.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**119**

**பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

EP DAG-9753 MAHINDRA MAXXIMO HD PLUS SINGLE CAB 2019, WHITE ALUMINIUM கூடிய விலைக் கோ ரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீ தி, கண்டி. தொ.பே. 0812 081033. 075326

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

YS-2808 PIAGGIO, 2011, THREE-WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711 2 1 081 0 . 075690

**Repeat Your ad For Better Offers**

## கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுத்திகரிப்புப் பிரிவு**

**சபுகஸ்கந்த முனையத்திற்காக துப்புரவேற்பாடு மற்றும் துப்புரவு சேவைகளை வழங்கல் பகிரங்க கேள்விமனு குறிப்பு**

**PD/SER/04/2023**

## தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23 BB (4) இன் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 2000 நவம்பர் 22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22ம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993ம் ஆண்டின் 1ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9(1) இற்கமைவாக இரண்டாவது மாடி லேன்ட் மார்க் பில்டிங், இல. 385, காலி வீதி, கொழும்பு-03 இல் அமைந்துள்ள திருகோணமலை பவர் கம்பனி லிமிடெட்டிற்கு மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் விஷேட விதிகளுக்கமைய வழங்கத் தீர்மானித்துள்ளது. என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000ம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**"பரிசர பியச"**
**இல: 104 டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல**

The Housewives' companion
Classifieds on
Daily News

# கண்டி மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்

### கண்டி மத்திய சந்தையில் 126ஆம் இலக்கம் கொண்ட ஆட்டிறைச்சிக் கடைக்கு கேள்விமனுக் கோரல்

கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கண்டி மாநகர சபைக்கு சொந்தமாக மத்திய சந்தையில் கீழ் குறிப்பிடப்பட்ட கடைகளின் உரிமையை தற்காலிகமாக குத்தகைக்கு விடுவதற்கு 2023-12-08 ஆம் திகதி மு.ப. 09.45 வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு விண்ணப்பங்கள் என்னால் ஏற்கப்படும்.

கேள்விமனு படிவத்தை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் 2023.12.07 ஆம் திகதி பி.ப. 2.45 வரை வழங்கப்படுவதோடு 2023.12.08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு திறக்கப்படும். மேலதிக விபரங்களை கண்டி மாநகர கணக்காளர் (வருவாய்) இடமிருந்து அலுவலக நேரங்களில் வருகைதந்து அல்லது 081-2227395 என்ற தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**அட்டவணை**

| வரிசை இலக்கம் | இடம் | வர்த்தகம் | கடை அறை இலக்கம் | கேள்விமனு காலம் | மீளளிக்காத கேள்விமனு படிவக் கட்டணம் (வரியுடன்) ரூபா சதம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை ரூபா சதம் | குறைந்தபட்ச விலைமனு (வரி இன்றி) | மாதாந்த கடை வாடகை தொகை (வரி இன்றி) ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | மத்திய சந்தை | ஆட்டிறைச்சி | 126 | 02 ஆண்டுகள் | ரூபா 2,320.00 | ரூபா 50,000.00 | ரூபா 1,210,000.00 | ரூபா 6,000.00 |

01) ஏற்கப்படும் கேள்விமனு தொகை தவிர அரசுக்கு செலுத்த வேண்டிய வரிப் பணம் சேர்த்து அறவிடப்படும். மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி மாதாந்த கடை வாடகை திருத்தப்பட வேண்டும்.

02) கேள்விமனு வைப்புத் தொகைக்காக கண்டி மாநகர சபையின் சிறாப்பர் பிரிவுக்கு பணம் செலுத்திய கேள்விமனு விண்ணப்பத்துடன் இணைத்து, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கேள்விமனுவின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03) ஏதேனும் கேள்விமனு விண்ணப்பப் படிவம் அல்லது கேள்விமனு விண்ணப்பப் படிவங்கள் அனைத்தையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை கண்டி நகர சபை வசமானது.

**2023.11.16 ஆம் திகதி,**
**கண்டி மாநகர சபையில்,**
**கே.கே.ஜே.ஐ.டி.பீ. விஜேதிலக்க,**
**மாநகர ஆணையாளர்**

# கண்டி மாநகர சபை — கேள்வி அறிவித்தல்

கண்டி மாநகர சபையில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட சிற்றுண்டிச்சாலைகளை 2 ஆண்டு காலத்திற்கு தற்காலிகமாக குத்தகைக்கு விடுவதற்கு 2023.12.08 ஆம் திகதி மு.ப. 10.00 வரை இரு பிரதிகளைக் கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு விண்ணப்பங்கள் மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்விமனு விண்ணப்பங்கள் 2023.12.07 ஆம் திகதி பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில் கண்டி மாநகர சபையின் வருவாய் பிரிவில் வெளியிடப்படுவதோடு 2023.12.08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு திறக்கப்படும். முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு விண்ணப்பங்களை மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என்பதோடு, கைகளால் கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் தலைமை மாநகர கணக்காளரின் பொறுப்பில் இருக்கும் விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும்.

| வரிசை இலக்கம் | இடம் | கேள்விமனு காலம் | மீளளிக்காத கேள்விமனு படிவக் கட்டணம் - (ரூபா) | மீளளிக்கப்படும் கேள்விமனு வைப்புத் தொகை (ரூபா) | குறைந்தபட்ச விலைமனு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | மாநகர உள்ளக விளையாட்டரங்கின் முன்னாள் உள்ள சிற்றுண்டிச்சாலை | 02 ஆண்டுகள் | 2,320.00 | 50,000.00 | 720,000.00 |
| 02 | டி.எஸ். சேனநாயக்க பொது நூலத்தின் சிற்றுண்டிச்சாலை | 02 ஆண்டுகள் | 2,320.00 | 50,000.00 | 468,000.00 |

- கேள்விமனுக் குழு மூலம் அங்கீகரிக்கப்படுகின்ற விலைமனு தொகை தவிர அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிப் பணமும் சேர்த்து அறவிடப்படும். மேலதிக விபரங்களை கண்டி மாநகர சபையின் கணக்காளர் (வருவாய்) இடமிருந்து அலுவலக நேரங்களில் வருகை தந்து அல்லது தொலைபேசி இலக்கம் 081-2227395 மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
- கண்டி மாநகர சபையுடன் சட்டரீதியான செயற்பாட்டுக்கு வந்துள்ள நபர்கள் அல்லது/ மற்றும் கண்டி மாநகர சபையில் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெற்ற நபர்களுக்கு விலைமனுக்கள் சமர்ப்பிக்க முடியாது.
- விலைமனுவை பெறுகின்ற நபர் மூலமே விலைமனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.
- குறைந்தபட்ச விலைமனு தொகை அரசாங்கத்தின் மாதாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருப்பதோடு, எதிர்காலத்தில் அந்த மதிப்பீட்டுத் தொகை அதிகரிப்பதாயின் அதற்கு கீழ்படிதல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் விலைமனு தொடர்பில் இறுதி முடிவு மாநகர ஆணையாளர்/ மாநகர சபை வசமானதாகும்.

**2023.11.17 அன்று**

**கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக்க**
**மாநகர ஆணையாளர்**
**கண்டி மாநகர சபை**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

## மாவட்ட பொது வைத்தியசாலை — மாத்தளை

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு தேவையான கீழ் குறிப்பிடப்பட்ட வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்துகொள்வதற்கு விரும்பும் இலங்கை பிரசைகள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வழங்குநர்கள், கூட்டுறவு சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் முகவர்களிடமிருந்து 2023.12.29ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. வழங்கல்**

i. அனைத்து வகையான அலுவலக காகிதாதிகள் மற்றும் அனைத்து அலுவலக உபகரணங்கள்
ii. கணனி இயந்திரங்கள் உட்பட கணனி துணைப்பாகங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் அலுவலக மின் உபகரணங்கள், கண்காணிப்பு கெமரா கட்டமைப்பு.
iii. இறப்பர் முத்திரை, திகதி முத்திரை, பெயர் பலகை, விளம்பரப் பலகை தயாரித்தல் மற்றும் அச்சிடுதல்.
iv. அனைத்துவிதமான அலுவலக பொருட்கள் மற்றும் அலுவலக தளபாடங்கள்
v. அனைத்து விதமான கனரகப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள், அரிந்த பலகை, இறப்பர் கலப்பு உற்பத்திகள்
vi. சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, வடிகான் தூரிகை, கழிப்பறை தூரிகை, மொப் மற்றும் தும்பு தரைவிரிப்பு ஆகியன)
vii. அனைத்து வகையான மின் உபகரணங்கள், மின் கருவிகள் மற்றும் மின்குமிழ் ஆகியன
viii. மோட்டார் வாகன டயர், டியூப் மற்றும் மின்கலம் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல்
ix. அனைத்து வகையான காலணிகள்
x. துப்புரவேற்பாட்டு பாவனைப் பொருட்கள் (சவர்க்காரம், சவர்க்காரத்தூள் மற்றும் திரவம், கிருமிநாசினி பொருட்கள், சுத்தம் செய்யும் இரசாயனப் பொருட்கள், வாகனங்கள் சுத்தம் செய்யும் பொருட்கள் ஆகியன)
xi. நுளம்பு மற்றும் ஏனைய பூச்சிக்கொல்லிப் பொருட்கள் மற்றும் நுளம்பு வலை ஆகியன
xii. அம்பியுலன்ஸ் நோயாளர் காவி, தள்ளு வண்டி, சக்கர நாற்காலி, நோயாளர் காவி, சேலைன் ஸ்டான்ட் உட்பட அனைத்து வார்ட்டுக்கான உபகரணங்கள் மற்றும் ட்ரொலி சக்கரம் போன்ற அதன் உதிரிப்பாகங்கள்
xiii. மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை மருத்துவ உபகரணங்கள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
xiv. ஆய்வுகூட உபகரணம், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
xv. ஆய்வுகூடம், கதிர்வீச்சு பிரிவு மற்றும் வார்டுகளின் செயற்பாடுகளுக்குத் தேவையான இரசாயன பொருட்கள் (உதா.: மெதிலேடட் ஸ்ப்ரிட், ஆய்வுகூட பொருட்கள் மற்றும் எதிர்த்தாக்கம்)
xvi. அனைத்து வைத்தியசாலை ஆடை, சீருடைகளுக்கான துணி, மெகின்டோஷ் மற்றும் ரெக்சின்
xvii. பாரிய அளவிலான எரிவாயு அடுப்பு, சாஸ்பான் உட்பட அனைத்து சமையலறை உபகரணங்கள்
xviii. எல்.பீ. கேஸ் மற்றும் எரிவாயு சிலிண்டர்
xix. குப்பை பை, பொலித்தின் பொருட்கள், குப்பை கொள்கலன்கள் ஆகியன
xx. மருந்துகள் இடும் அச்சிடப்பட்ட காகித உறை மற்றும் பெரிய அளவான உறுதியான காகித உறை அச்சிடல் மற்றும் தயாரித்தல் (CT films/ x-ray films safety cover)
xxi. அனைத்து வகையான அலுமினியப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், பீங்கான் பொருட்கள், கண்ணாடி பொருட்கள் மற்றும் நீர் வடிகட்டி
xxii. மருந்து, கட்டுத்துணி, சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் பல் மருத்துவ பாவனைப் பொருட்கள் வழங்குதல்
xxiii. ஊட்டச்சத்து, மேலதிக மற்றும் அதிக ஊட்டச்சத்து கொண்ட பால் வகைகளை வழங்குதல்

**2. சேவைகள்**

i. கணனி உபகரணங்கள், கணனி வலையமைப்பு முறைமை மற்றும் அனைத்து மின் அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
ii. அலுவலக காகிதாதிகளை அச்சிடல்
iii. அனைத்து மின் உபகரணங்களின் திருத்தவேலைகள்
iv. நீர் மோட்டர் மற்றும் நீர் விநியோக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
v. வளிச்சீராக்கி மற்றும் குளிர்சாதனப் பெட்டி திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
vi. சலவை இயந்திரம், துணி உலர்த்தும் இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
vii. தையல் இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
viii. மலம் அப்புறப்படுத்தும் முறைமை மற்றும் கழிவு நீர் முறைமையை சீரமைத்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
ix. மின்பிறப்பாக்கி இயந்திரம், வீலர் இயந்திரம், மின்னுயர்தி, சடலங்களை இடும் அதி குளிர்சாதனப் பெட்டி, மருந்துகளை இடும் குளிர்சாதனப்பெட்டி போன்ற பாரிய அளவான மின் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
x. வைத்தியசாலைக்கு சமைக்காத உணவு, சமைத்த உணவு, நிகழ்ச்சிகளுக்காக சிற்றுண்டி, பானங்கள் வழங்குதல்
xi. அனைத்து வாகனங்களினதும் திருத்தவேலைகள் மற்றும் டிங்கரின், வண்ணப்பூச்சு மற்றும் மின் கட்டமைப்பு திருத்தவேலைகள் மற்றும் குஷன் வேலை மற்றும் அப்ஹோஸ்டின் செய்தல் போன்ற செயற்பாடுகள்
xii. அனைத்து வாகனங்களையும் சேர்விஸ் செய்தல்
xiii. திணைக்கள (அலுவலக) அடையாள அட்டை தயாரித்தல்
xiv. எரிவாயு அடுப்பு, கொதிகலன், அலுமினியம் பிடிச்சட்டி, நிலத் தராசு போன்வற்றின் திருத்தவேலைகள்
xv. அம்பியுலன்ஸ் நோயாளர் காவி, தள்ளுவண்டி, சக்கர நாற்காலி போன்ற வைத்தியசாலை உபகரணங்களின் திருத்தவேலைகள்
xvi. மேசை, கதிரை, அலுமாரி, லொக்கர், பின்னப்பட்ட கதிரை உட்பட அலுவலக தளபாடங்களின் திருத்த வேலைகள்
xvii. உரிமை கோராத சடலங்களை அடக்கம் செய்தல்
xviii. ஆய்வுகூட சேவை வழங்கல்
xix. தச்சர், கட்டிட நிர்மாணக் கலைஞர், குழாய் பொருத்துநர், அலுமினியம் பாட்டிசன் சேவைகளை வழங்குதல்
xx. மருந்து பொருட்கள், ஆய்வுகூட மாதிரி உட்பட வேறு அத்தியாவசிய பொருட்களை வைத்தியசாலையின் தேவைக்கு அமைய பாதுகாப்பாக எடுத்துவரும் விரைதூதர் சேவைகள்
xxi. வைத்தியசாலை வளவில் நிகழும் மரக் கிளைகள் உடைந்து விழுவதை சீர்படுத்துதல், உள்ளக மின் இணைப்புகளை சீர்படுத்துதல், தொலைபேசி இணைப்பு முறைமைகளை சீர்படுத்துதல், நீர்க் குழாய் முறைமைகளை சீர்படுத்துதல் போன்ற சேவை வழங்கல்கள்

**3. கொள்வனவு**

i. வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படுகின்ற பொருட்களை கொள்வனவு செய்தல் உதா.: பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கண்ணாடி/ பிளாஸ்டிக் போத்தல், பிளாஸ்டிக் கேன், சேலைன் போத்தல், தேங்காய் சிரட்டை, எக்ஸ்ரே அட்டை, எக்ஸ்ரே அட்டைகளை கழுவி அகற்றப்பட்ட திரவங்கள், கழிவு எண்ணெய், வைத்தியசாலையில் இருந்து அகற்றப்பட்ட பிளாஸ்டிக்/ பலகை உடைந்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள், வைத்தியசாலையிலிருந்து அகற்றப்படும் மிகுதி உணவு போன்றவற்றைக் கொள்வனவு செய்தல்.

**ஆலோசனை மற்றும் நிபந்தனைகள்**

i. ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்காக வழங்குநர்கள் பதிவு செய்துகொள்ளலாம்.
ii. பின்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தம்மால் சுயமாகத் தயாரித்துகொண்ட விண்ணப்பப் படிவங்களை, வர்த்தகப் பதிவு சான்றிதழின் பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு/ ரசீதுடன் 2023.12.29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு "கணக்காளர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை - மாத்தளை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அல்லாவிட்டால் நேரில் கொண்டுவந்து இந்த அலுவலகத்தின் கணக்காளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**
**வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024ஆம் வருடம்**
**மாவட்ட பொது வைத்தியசாலை - மாத்தளை**

1. உற்பத்தி நிறுவனம்/ வர்த்தகம்/ வழங்குநரின் பெயர்:-
2. முகவரி:-
3. வர்த்தகத்தின் தன்மை (ஏக உரிமை/ வரையறுக்கப்பட்ட நிறுவனம் என்பது பற்றி):-
4. தொலைபேசி இலக்கம்:- தொலைநகல் இலக்கம்:-
5. பதிவு இலக்கம்:-
   (எந்த வழங்கல்/ உற்பத்திக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடவும்)
6. வழங்க முடியுமான கடன் வசதி:-
7. பதிவு செய்வதற்கு விரும்பும் வழங்கல்/ சேவை மற்றும் அதன் இலக்கம்:-
8. பதிவு கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம்:-

வழங்கல் இலக்கம்..... /சேவை இலக்கம் ..... /கொள்வனவு இலக்கம் ..... என்பதற்கு பதிவு செய்யும்படி வேண்டிக் கொள்கின்றேன். ரூபா..... பெறுமதியான பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

மேல் குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானது மற்றும் சரியானது என அறிவிக்கிறேன். ஏதேனும் பொய்யான தகவல் வழங்கப்பட்டிருந்தால் பதிவு நிராகரிக்கப்பட்டு இரத்துச் செய்யப்படும் என்பதை நான் அறிவேன். இத்துடன் வர்த்தகப் பதிவு சான்றிதழின் பிரதி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது

........................ ........................................................
**திகதி** **விண்ணப்பதாரரின் கையொப்பம் உத்தியோகபூர்வ முத்திரை:**

iii. விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
iv. பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்தபட்சம் 06 வார காலத்திற்கு கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
v. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டபோதும் பதிவு செய்யப்படாத வெளி வழங்குநர்களிடம் இருந்தும் விலைமனுக்களை கோரும் உரிமையை இந்த வைத்தியசாலை பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதுடன் எந்த காரணமும் கூறாது பதிவுக்கான எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
vi. கோருகின்ற அனைத்து பொருட்களையும் முறையாக களஞ்சியத்திற்கு வழங்கிய பின் மற்றும் சேவைகளை முறையாக நிறைவேற்றிய பின் மாத்திரமே கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
vii. இலவசமாக போக்குவரத்து வசதியை வழங்குதல் வேண்டும்.
viii. விலைகளைக் கோரும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களுக்கு பொருட்களை வழங்காத நிறுவனங்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் (Black List) சேர்க்கப்படும்.
ix. ஒவ்வொரு உருப்படிக்காகவும் 1500.00 ரூபா மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்தை இந்த வைத்தியசாலையின் கணக்குப் பிரிவுக்கு ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் என்பதோடு, பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது அதன் பிரதி ஒன்றை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை மற்றும் காசுக்கட்டளை ஏற்கப்படமாட்டாது.
x. ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்கு பதிவு செய்வதாயின் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் வர்த்தகப் பதிவு சான்றிதழின் பிரதி மற்றும் பதிவுக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனைத்தையும் ஒரே கடித உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும்.
xi. மேற் குறிப்பிடப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும்போது அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய பெறுகை நிறுவனத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் என்பதை மேலும் அறியத்தருகிறோம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**மாத்தளை**
**2023.11.20**

# கேள்வி அறிவித்தல் - கண்டி மாநகர சபை

## கண்டி குளத்தில் படகு சேவையை மேற்கொள்வதற்கான உரிமையை ஐந்து ஆண்டுகளுக்கு தற்காலிகமாக குத்தகைக்கு விடுதல்

கண்டி குளத்தில் படகு சேவையை மேற்கொள்வதற்கான உரிமையை ஐந்து ஆண்டுகளுக்கு தற்காலிகமாக குத்தகைக்கு விடுவதற்கு 2023.12.08 ஆம் திகதி மு.ப. 10.00 வரை இரு பிரதிகளைக் கொண்டதாக முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு விண்ணப்பங்கள் மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன

கேள்விமனு விண்ணப்பங்கள் 2023.12.07 ஆம் திகதி பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில் கண்டி மாநகர சபையின் வருவாய் பிரிவில் வெளியடப்படுவதோடு 2023.12.08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு திறக்கப்படும். முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு விண்ணப்பங்களை மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது கைகளால் கொண்டுவந்து ஒப்படைக்க முடியும். கைகளால் கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் தலைமை மாநகர கணக்காளரின் பொறுப்பில் இருக்கும் விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும்.

| இடம் / சேவை | மீளளிக்காத கேள்விமனு படிவக் கட்டணம் (வரியுடன்) ரூபா சதம் | மீளளிக்கப்படும் கேள்விமனு வைப்புத் தொகை ரூபா சதம் | குறைந்தபட்ச விலைமனு தொகை (வரி இன்றி) ரூபா சதம் | காலம் |
|---|---|---|---|---|
| கண்டி குளத்தில் படகு சேவையை மேற்கொள்வதற்காக உரிமையை தற்காலிகமாக குத்தகைக்கு விடுதல் | 2,320.00 | 100,000.00 | 2,500,000.00 | 05 ஆண்டுகள் |

- ➢ கேள்விமனுக் குழு மூலம் அங்கீகரிக்கப்படுகின்ற விலைமனு தொகை தவிர அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிப் பணமும் சேர்த்து அறவிடப்படும். மேலதிக விபரங்களை கண்டி மாநகர சபையின் கணக்காளர் (வருவாய்) இடமிருந்து அலுவலக நேரங்களில் வருகை தந்து அல்லது தொலைபேசி இலக்கம் 081-2227395 மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
- ➢ கண்டி மாநகர சபையுடன் சட்டரீதியான செயற்பாட்டுக்கு வந்துள்ள நபர்கள் அல்லது/ மற்றும் கண்டி மாநகர சபையில் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெற்ற நபர்களுக்கு விலைமனுக்கள் சமர்ப்பிக்க முடியாது.
- ➢ விலைமனுவை பெறுகின்ற நபர் மூலமே விலைமனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.
- ➢ சமர்ப்பிக்கப்படும் விலைமனு தொடர்பில் இறுதி முடிவு மாநகர ஆணையாளர்/ மாநகர சபை வசமானதாகும்.

2023.11.15 அன்று
**கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக்க**
**மாநகர ஆணையாளர்**
**கண்டி மாநகர சபை**

# கொட்டகலை பிரதேச சபை

## 2024 ஆண்டுக்கான பிரதேச சபைக்கு சொந்தமான மாட்டிறைச்சிக் கடை / ஆட்டிறைச்சிக் கடை வாகனம் தரிக்குமிடங்கள் / பொது மலசலகூடங்கள் மற்றும் மீன் விற்பனை உரிமையை குத்தகைக்கு விடுதலுக்கான கேள்விக்கோரல்

1. 2024 ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு கொட்டகலை பிரதேச சபைக்கு உரித்தான பின்வரும் கடையறைகள் / வாகனம் நிறுத்துமிடங்கள் / பொது மலசலகூடங்கள் மற்றும் மீன் விற்பனை வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இதில் ஆர்வம் காட்டும் தரப்பினரிடமிருந்து சீல் செய்யப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | இடம் | கேள்வி விபரம் | மீளளிக்கபடும் கேள்வி த்திர வைப்புத் தொகை கட்டணம் ரூ. | கேள்விப் பத்திர கட்டணம் ரூ. | வருடத்திற்கு குறைந்த கேள்வி ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | கொட்டகலை சந்தைக் கட்டிடம் | ஆட்டிறைச்சி கடை | 10,000.00 | 1,000.00 | 180,000.00 |
| | | மாட்டிறைச்சி கடை | 25,000.00 | 2,500.00 | 1,060,500.00 |
| 02 | வாகனம் நிறுத்துமிடம் | டெவன் வாகன நிறுத்துமிடம் | 5,000.00 | 1,000.00 | 91,000.00 |
| | | கொட்டகலை ரொசிட்டா நகரம் தொடக்கம் வூட்டன் நகரம் வரை - பிரதேச சபையினால் அனுமதியளிக்கப்பட்ட முச்சக்கர வண்டி தரிப்பிடம் தவிர்ந்தவை | 5,000.00 | 1,000.00 | 109,100.00 |
| 03 | பொது மலசலகூடம் | கொட்டகலை ரொசிட்டா பொது மலசலகூடம் | 5,000.00 | 1,000.00 | 30,000.00 |
| | | பத்தனை பொது மலசலகூடம் | 5,000.00 | 1,000.00 | 30,000.00 |
| 04 | மீன் விற்பனை | கொட்டகலை வூட்டன் - 1 | 5,000.00 | 1,000.00 | 150,000.00 |
| | | கொட்டகலை வூட்டன் - 2 | 5,000.00 | 1,000.00 | 150,000.00 |
| | | கொட்டகலை ரொசிட்டா - 1 | 5,000.00 | 1,000.00 | 150,000.00 |
| | | கொட்டகலை ரொசிட்டா - 2 | 5,000.00 | 1,000.00 | 150,000.00 |
| | | பாமஸ்டன் | 5,000.00 | 1,000.00 | 50,000.00 |

**2. விலைக்கோரல் விண்ணப்பங்கள் விநியோகித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்**

I 2023.11.20ஆம் திகதி முதல் 2023.12.07ஆம் திகதி வரையில் வார நாட்கனில் பிற்பகல் 03.00 மணி வரையில் கொட்டகலை பிரதேச சபை பணிமனைக்கு வருகை தந்து மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தையும் மற்றும் மீளளிக்கப்படும் வைப்புக்கட்டணத்தையும் செலுத்தி கேள்வி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

II. 2023.12.08ஆம் திகதி மு.ப. 10.00க்கு முன் பிரதேச சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் உள்ளிட்டு சீல் செய்யப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம். விலைமனுக்களை தபாலில் சமர்ப்பிப்பதானால், மேற்கூறிய நியமிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

III. விலைக்கோரல் விண்ணப்பப்படிவங்களுடன் விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கிய படிவமொன்று வழங்கப்படும்.

**3. விலைக்கோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படுதல்**

I. 2023.12.08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொட்டகலை பிரதேச சபையில் விலைக்கோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

II. விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் விலைக்கோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

III. தெரிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்கள் இறைச்சிக்காக அனுமதிக்கப்பட்ட மாடு வெட்டும் இடமொன்றிலிருந்து இறைச்சியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**4. மேலதிக விபரங்களை அறிந்துகொள்ளல்**

I. வார நாட்களில் அலுவலக நேரத்தினுள் 051 4932140 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது பிரதேச சபையின் அலுவலகத்தில் இது தொடர்பான மேலதிக விபரங்களை விசாரித்து அறியலாம்.

II. எந்தவொரு கடையறை / மீன் தட்டு அல்லது பொது மலசலகூடங்களின் நிலைமையை பரீட்சித்துப் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வே. விஜேசுந்தரம்,**
**செயலாளர்,**
**கொட்டகலை பிரதேச சபை**
**20.11.2023**

## 2024 ஆம் வருடத்திற்கான விநியோகஸ்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

# மஸ்கெலியா பிரதேச சபை

### 2024 ஆம் வருடத்திற்கான மஸ்கெலியா பிரதேச சபைக்கு அவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக விநியோகஸ்தர்களை பதிவு செய்வது தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காரியாலய தளபாடங்கள் மற்றும் மரத் தளபாடங்கள்
2. காரியாலய உபகரணங்கள் மற்றும் எழுதுகருவிகள்
3. டோனர் வகைகள் மற்றும் Ink வகைகள்
4. அச்சிடல் சேவை
5. கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்கள்
6. காரியாலயத்திற்கான இயந்திரங்களை பழுதுபார்த்தல். (போட்டோபிரதி இயந்திரம், தொலைநகல், அச்சு இயந்திரங்கள்)
7. பெயர்ப்பலகை, அறிவித்தல் பலகை, பதாகை, இறப்பர் முத்திரைகள், தின முத்திரைகள், பெயர் பலகை பதக்கங்கள் மற்றும் கேடயங்கள் என்பவற்றை தயார் செய்தல்
8. உபசரிப்பு செலவுக்கு தேவையான உணவுப் பொருட்கள்.
9. வாகனங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்.
10. வாகன உதிரிப்பாகங்கள், டயர் மற்றும் டியூப், வாகனங்களுக்கான பற்றரிகள்.
11. வாகனங்களை சர்வீஸ் செய்தல் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டுதல்.
12. வாகனங்கள் மற்றும் டிரக்டர் இயந்திரங்களை பழுதுபார்த்தல்.
13. வீதி விளக்குகள் மற்றும் அவசியமான பொருட்கள்.
14. மின் உபகரணங்கள் மற்றும் மின்குமிழ்கள், மின் இணைப்பு உபகரணங்களும் சேவைகளும்.
15. அனைத்து மின் உபகரணங்கள் மற்றும் ஜெனரேட்டர்களை பழுதுபார்த்தல் மற்றும் சர்விஸ் செய்தல்,
16. பெயிலர் இயந்திரம் பழுதுபார்த்தல் மற்றும் சர்விஸ் செய்தல்.
17. Spray Tank மற்றும் Grass cutter (புல் வெட்டும் இயந்திரம்) பழுதுபார்த்தல் மற்றும் சர்விஸ் செய்தல்.
18. நீர்க் குழாய் உபகரணங்கள்
19. கல், மணல், மெட்டல் மற்றும் பிளொக்கல் போன்ற கட்டிட நிர்மாண பொருட்கள் விநியோகம்.
20. பாதை புனரமைப்பிற்கான பொருட்கள் (தார், கோலாஸ், பிரிமிக்ஸ் போன்றவை)
21. சுகாதார உபகரணங்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கான பாதுகாப்பு அணிகலன்கள்
22. ஒலிபெருக்கி இயந்திரங்கள்.
23. இசைக்கருவிகள் / சங்கீத உபகரணங்கள்.
24. பலகை வகைகள் விநியோகம்.
25. விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு பொருட்கள்.
26. சிறுவர் பூங்காவிற்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு பொருட்களை விநியோகித்தல்.
27. கர்ப்பிணித் தாய்மாருக்கு தேவையான பொருட்கள் மற்றும் சிசுவிற்கு தேவையான பொருட்கள்.
28. சீருடை, துணிமணிகள், தைத்த ஆடைகள், மேசை விரிப்பு மற்றும் திரைச்சீலைகள் விநியோகம்.
29. பூங்கா மற்றும் உள்ளக அலங்காரத்திற்கான பொருட்களை வழங்கல்.
30. தீயணைக்கும் கருவிகள்.
31. நூலகங்களுக்கான பத்திரிகை விநியோகம்
32. பழைய பத்திரிகைகள் மற்றும் பழைய இரும்புகளுக்கான விற்பனை. (பெறுனர்)
33. பெட் போத்தல் (Pet Bottle) விற்பனை (பெறுனர்)
34. மரம் வெட்டுதலுக்கான சேவையினை வழங்கல்
35. வழக்கறிஞர் சேவை
36. கட்டிட வரைபடம் நிர்மாணிப்போர்
37. 10 இலட்சத்துக்கு குறைவான ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்.
38. 10 இலட்சத்துக்கு அதிகமான ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்.

- பதிவுகளை மேற்கொள்ள விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்தல் அவசியமாகும். விண்ணப்பப்படிவத்தினை www. maskeliya.ps.gov.lk என்ற அலுவலக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யமுடியும் அல்லது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- விண்ணப்பிக்கும் வகைக்கேற்ப தனித்தனியாக விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்வதுடன் அதற்கேற்ப கட்டணம் செலுத்துதல் வேண்டும்.
- ஒரு விநியோக சேவைக்காக ரூ. 1500.00 வை செலுத்தி பதிவு செய்தல் வேண்டும்.
- கட்டிட நிர்மான ஒப்பந்தங்களை ரூ. 3000.00 வை செலுத்தி பதிவு செய்தல் வேண்டும்.
- காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் "செயலாளர், மஸ்கெலியா பிரதேச சபை" என எழுதுதல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் 2023.12.15 பிற்பகல் 3.00 மணியுடன் நிறைவுறும்.
- விண்ணப்பங்களை "செயலாளர், மஸ்கெலியா பிரதேச சபை, மஸ்கெலியா" என்ற முகவரிக்கு அனுப்புவதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விநியோகஸ்தர் பதிவு – 2024" என குறிப்பிடல் வேண்டும்.
- பதிவுகளை பெற்றுக்கொடுக்கும் இறுதித்தீர்மானம் மஸ்கெலியா பிரதேச சபைக்குரியதாகும்.
- மேலதிக விபரங்களுக்கு : 052-2277275

**2023.11.15 செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**மஸ்கெலியா பிரதேச சபை**

**2024ம் வருடத்திற்கான விநியோகஸ்தர் பதிவு மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் - ..............................
2. தொலைபேசி இலக்கம் - ..............................
3. விலாசம் - ..............................
4. மின்னஞ்சல் முகவரி - ..............................
5. வியாபார பதிவுச் சான்றிதழ் - ..............................
6. விநியோகத்திற்கான சேவை அல்லது பொருட்கள் - ..............................
   (பொருட்கள் அல்லது சேவையின் உரிய இலக்கத்தை பதிவிடவும்.)
7. பதிவு கட்டணம் ரூபா - .............................. (ஒரு விநியோகப்பொருளுக்கு ரூ. 1500.00 ஆகும்)
8. காசோலை இல / காசுக் கட்டளை இல - ..............................
   மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும் குறித்த வியாபார பதிவு சான்றிதழ் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

விநியோகஸ்தர் பதிவிற்காக சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுகின்றேன் எனவும் அறியத்தருகின்றேன்.

.............................. ..............................
திகதி கையொப்பம்

**அலுவலக உபயோகத்திற்காக**

பற்றுச்சீட்டு இல : .............................. திகதி : ..............................

## பெறுகை அறிவித்தல்

# தணமல்வில பிரதேச சபை

### 2024ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு விடுதல்

பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தணமல்வில பிரதேச சபைக்குரித்தான பின்வரும் ஆதனங்களின் விற்பனை உரிமையை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையில் குத்தகைக்கு வழங்குவதற்காக பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் படிவங்கள் வழங்குதல்: 2023-11-20ஆம் திகதி முதல் 2023-12-06ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 10.30 மணி வரையில் மட்டும் விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.

02. கேள்விப் படிவங்களை ஏற்றுக் கொள்ளல்: 2023-12-06ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக இச்சபையின் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

03. கேள்விப் படிவங்களைத் திறத்தல்: 2023-12-06ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு தணமல்வில பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நியமிக்கப்பட்டுள்ள கேள்விச் சபையின் முன்னிலையில் இடம்பெறும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

04. கேள்வி நிபந்தனைகள் மற்றும் தெரிந்துகொள்ள வேண்டிய ஏனைய தகவல்கள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். பெறுகை அறிவித்தல் மற்றும் பெறுகை விண்ணப்பங்களுடன் வழங்கப்படும் கேள்வி நிபந்தனையை பெறுகை நிபந்தனையாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

| தொடர் இல. | பதவி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 01 | அலுவலக தொலைநகல் இல. | 047-2234075 |
| 02 | செயலாளர் | 071-8045944 |
| 03 | விடயப்பொறுப்பு அதிகாரி | 077-9388606 |

05. பெறுகை நிபந்தனைகள் மற்றும் தெரிந்துகொள்ள வேண்டிய ஏனைய தகவல்கள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம், மின்னஞ்சல் தொலைநகல் போன்ற எந்தவொரு ஊடகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை 01**

வாரச்சந்தை 2023-07-01 முதல் 2023-12-31ஆம் திகதி வரையான 06 மாத காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு

| தொ. இல. | ஆதனம் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | படிவக் கட்டணம் ரூபா | பிணை வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | தணமல்வில வாரச்சந்தை | 2500000.00 | 5000.00 | 100000.00 |
| 02 | ஹம்பேகமுவ வாரச்சந்தை | 500000.00 | 5000.00 | 25000.00 |
| 03 | கிரிஇப்பன்ஆர வாரச்சந்தை | 400000.00 | 5000.00 | 25000.00 |
| 04 | டங்டும வாரச்சந்தை | 4000000.00 | 5000.00 | 100000.00 |
| 05 | மஹகம வாரச்சந்தை | 500000.00 | 5000.00 | 25000.00 |

**அட்டவணை 02**

| தொ. இல. | ஆதனத்தின் பெயர் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | படிவக் கட்டணம் ரூபா | பிணை வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | 16½ வாரச்சந்தை அருகிலுள்ள 13 A கடை அறை | 400000.00 | 5000.00 | 1000.00 |
| 02 | ஹம்பேகமுவ வாரச்சந்தை அருகிலுள்ள புதிய கடை நிலப்பரப்பு இல. 01 | 20000.00 | 5000.00 | 1000.00 |
| 03 | ஹம்பேகமுவ வாரச்சந்தை அருகிலுள்ள புதிய கடை நிலப்பரப்பு இல. 01 | 20000.00 | 5000.00 | 1000.00 |
| 04 | மஹவெவ வாரச்சந்தை அருகிலுள்ள மேல் மாடி 01ஆம் இலக்கம் முதல் 06ஆம் இலக்கம் வரையான கடை நிலப்பரப்பு | 20000.00 (ஒரு கடை நிலப்பரப்பிற்கு) | 5000.00 | 1000.00 |
| 05 | நுகேகலயாய வாரச்சந்தை அருகிலுள்ள 1, 2, 3ஆம் இலக்க கடை அறைகள் | ஒரு கடை அறைக்கு 100000.00 | 5000.00 | 1000.00 |
| 06 | டங்டும வாரச்சந்தை அருகிலுள்ள இரண்டாம் மாடி 01ஆம் இலக்கம் முதல் 12ஆம் இலக்கம் வரையான கடை நிலப்பரப்புகள் | 1500000.00 (ஒரு கடை நிலப்பரப்பிற்கு) | 5000.00 | 1000.00 |
| 07 | தணமல்வில பொது மலசலகூடம் | 20000.00 | 5000.00 | 1000.00 |

**2023-12-15ஆம் திகதி தணமல்வில பிரதேச சபை அலுவலகத்தில்.**
**லக்ஷ்மன் அபேகோன்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**தணமல்வில.**



## கடற்றொழில் அமைச்சு

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

# விலைமனுக்கோரல்

## கொள்முதல் அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழுத் தலைவரினால் (மேஜர்) பின்வரும் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததின் பெயர் | மனுப் பாதுகாப்புத் தொகை (SLR) மற்றும் செல்லுபடியாகும் காலம் | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| **NQ/DPC/2023/NCB/G/09** Procurement of Machinery Equipment (Water pump, Grass cutter Machine, Bush cutter Submersible Pumps, Refrigerator for Lab, Soya Milk Machine, Ring Blowers, Sludge Pumps, Polythene Sealers, Grinders) | மனுப்பாதுகாப்பு கட்டணம் மற்றும் செல்லுபடியாகும் காலம் பிரிவு II இல் மனு தரவு தாள் (BDS) இன் (ITB) உட்பிரிவு 20.2 பிரிவு I இல் குறிப்பிடப்பட்டுள்ளது. | ரூ.6,000.00 | 2023.12.04 பி.ப.3.00 | 2023.12.05 பி.ப.2.00 |

02. மேலதிக தகவல்களை **(076-0981169, 011-278 6544** மின்னஞ்சல் : **po@naqda.gov.lk** மற்றும் **www.naqda.gov.lk)** மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்),
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
**2023.11.20**

SELACINE

## திறந்த கேள்வி அறிவித்தல் - 2024

# மஸ்கெலியா பிரதேச சபை – மஸ்கெலியா

மஸ்கெலியா பிரதேச சபைக்குரித்தான வியாபார நிலையங்களில் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, மீன் விற்பனை பொது மலசலகூடம் மற்றும் தற்காலிக கடையறைகள் மற்றும் சிவனொளிபாத பருவகாலத்தை முன்னிட்டு நல்லதண்ணியில் பொது வாகனத்தரிப்பிடம் நல்லதண்ணி தொடக்கம் சீத்தகங்குல வரையில் மலசலகூட சுத்திகரித்தல் சேவையினை 2024ஆம் வருடத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையில் கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | குத்தகையில் விடப்படும் சேவைகள் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (ரூ.) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூ.) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | மஸ்கெலியா மாட்டிறைச்சி கடை இல. 09 | 4,400,000.00 | 200,000.00 | 10,000.00 |
| 2 | மஸ்கெலியா ஆட்டிறைச்சி கடை இல. 08 | 305,000.00 | 50,000.00 | 5,000.00 |
| 3 | மஸ்கெலியா மீன் கடை இல. 01 | 190,000.00 | 35,000.00 | 5,000.00 |
| 4 | மஸ்கெலியா மீன் கடை இல. 02 | 190,000.00 | 35,000.00 | 5,000.00 |
| 5 | மஸ்கெலியா மீன் கடை இல. 03 | 190,000.00 | 35,000.00 | 5,000.00 |
| 6 | சாமிமலை மீன் கடை இல. 01 | 147,000.00 | 30,000.00 | 5,000.00 |
| 7 | மஸ்கெலியா பொது மலசலகூடம் | 218,000.00 | 30,000.00 | 5,000.00 |
| 8 | சாமிமலை பொது மலசலகூடம் | 10,000.00 | 5,000.00 | 1,000.00 |

**தற்காலிக கடையறைகள் – நல்லதண்ணி முள்ளுகாமம் சந்தி, மஸ்கெலியா நகரம், காட்மோர் சந்தி**

| இல. | குத்தகையில் விடப்படும் சேவைகள் | ஆகக்குறைந்த கமிஷன் பணம் (ஒரு மாதத்திற்கு) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | நல்லதண்ணி முள்ளுகாமம் சந்தியில் தற்காலிக கடையறை - இல. 09 | 5,500.00 | 50,000.00 | 2,000.00 |
| 2 | மஸ்கெலியா 04ஆம் வீதி கடையறை இல. 05 | 5,000.00 | 90,000.00 | 2,000.00 |
| 3 | காட்மோர் சந்தி தற்காலிக கடையறை இல. 03 | 5,000.00 | 90,000.00 | 2,000.00 |

**நல்லதண்ணி பொது வாகனத்தரிப்பிடம் மற்றும் மலசலகூடத் தொகுதி**

| இல. | குத்தகையில் விடப்படும் சேவைகள் | சபைக்கு செலுத்த வேண்டிய ஆகக்குறைந்த கமிஷன் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | நல்லதண்ணி பொது வாகனத் தரிப்பிடம் மற்றும் பொது மலசலகூடம் | 1,980,000.00 | 200,000.00 | 7500.00 |

**நல்லதண்ணி – சிவனொளிபாதமலை வழி**

| இல. | குத்தகையில் விடப்படும் சேவைகள் | சபைக்கு செலுத்தவேண்டிய ஆகக்குறைந்த கமிஷன் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | மகரதொரண மலசலகூட தொகுதி | 1,078,000.00 | 50,000.00 | 5000.00 |
| 2 | கங்குலதென்ன மலசலகூட தொகுதி | 650,000.00 | 50,000.00 | 5000.00 |

### நிபந்தனைகள்

கேள்வி விண்ணப்பங்களை **2023.11.16** ம் திகதி மு.ப. 9.00 மணி முதல் **2023.11.29** ம் திகதி பி.ப. **04.00** மணி வரை அரச வேலை நாட்களில் மஸ்கெலியா பிரதேச சபையின் பிரதான காரியாலயத்தில் குறித்த தொகையினை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

டெண்டர் மூல பிரதி, துணைப்பிரதி என தனித்தனியாக குறிப்பிடப்படுவதோடு கேள்வி பத்திரங்கள் முன்வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ……………… சேவை/ வியாபாரம் என தனித்தனியாக தெளிவாக குறிப்பிட வேண்டும்.

அனைத்து கேள்வி விண்ணப்பங்களும் "செயலாளர், மஸ்கெலியா பிரதேச சபை, மஸ்கெலியா " எனும் முகவரிக்கு **2023.11.30** ஆம் திகதி மு.ப. **10.00** மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடல் வேண்டும். அன்றைய தினம் மு.ப. **10.30** மணிக்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அதன் போது கேள்விதாரர் அல்லது அவர் சார்பாக பிரதிநிதி ஒருவர் வருகைதரல் அவசியமாகும். பிரதிநிதி ஒருவர் வருகைதருமிடத்து அவர் கேள்விதாரரிடம் இருந்து கடிதமொன்றை பெற்றுவரல் வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் முன்வைக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் கேள்விதாரர் சபையுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்காக கேள்விகளை முன்வைக்க முடியும். கேள்வி குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானம் என்பதுடன், மேலதிக தகவல்களை காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1. குத்தகை காலமானது 2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரையானதாகும்.
2. மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி என்பவற்றை மஸ்கெலியா பிரதேச சபையின் இறைச்சி வெட்டுமிடத்தில் மாத்திரமே வெட்டுதல் வேண்டும்.
3. 2023.11.30 அன்று மு.ப 10.30 மணிக்கு அச்சனிக்கா விழா மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
4. மஸ்கெலியா மற்றும் சாமிமலை நகர குத்தகைக்கு கேள்வித் தொகையில் 30% அவ்வேளையிலேயே செலுத்தப்படவேண்டியதுடன் மிகுதி தொகைக்காக பிணை முன்வைக்கப்படல் வேண்டும்.
5. நல்லதண்ணி நகரின் டென்டரினை தவிர்த்து ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகையில் 50% அவ்வேளையிலேயே செலுத்தப்படவேண்டியதுடன் மிகுதி தொகைக்காக பிணை முன்வைக்கப்படல் வேண்டும்.
6. தற்காலிக கடையறைக்காக அதிகபட்ச கேள்வித்தொகையினை விண்ணப்பிப்பவர்க்கே டெண்டர் வழங்கப்படும் என்பதுடன் நல்லதண்ணி முள்ளுகாமம் சந்தி தற்காலிக கடையறைக்கு மீளளிக்கப்பட வேண்டிய வைப்புத்தொகை பருவகாலம் முடிந்தவுடன் செலுத்தப்படும்.
7. மஸ்கெலியா கடையறை இல. 05 மற்றும் காட்மோர் சந்தி கடையறை இல. 03 ஆகியவற்றிற்கான குத்தகை காலம் 05 வருடங்கள் ஆவதோடு மீளளிக்கப்பட வேண்டிய வைப்புத்தொகை குத்தகை காலம் நிறைவடைந்தவுடன் செலுத்தப்படும்.
8. குத்தகைதாரர் டெண்டரிலிருந்து விலகும் பட்சத்தில் டெண்டர் வைப்புப்பணமானது மீளச்செலுத்தப்படமாட்டாது.
9. டெண்டர் தொகைக்கு மேலதிகமாக அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1% முத்திரை வரியினை கட்டாயமாக செலுத்துதல் வேண்டும். (அரசின் கொள்கைக்கு அமைய இவ்வரி வீதங்கள் மாறுபட முடியும்).
10. சிவனொளிபாத பருவகால ஒப்பந்த காலம் 2023.12.26 முதல் 2024.05.31 வரையாகும்.
11. நல்லதண்ணி நகரத்தில் மலசலகூடத் தொகுதி சுத்தம் செய்தல் மற்றும் வாகனங்களை நிர்வகித்தல் போன்றவற்றிற்கு ஊழியர்களை நியமித்தல் குத்தகைதாரர்களினாலே மேற்கொள்ள வேண்டும்.
12. கடந்த ஆண்டின் குத்தகைதாரர்களின் நிலுவைகள் செலுத்தப்படாதிருப்பின் அவற்றை செலுத்திய பின்னரே கேள்வி விண்ணப்பம் விநியோகிக்கப்படும்.
13. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரரினால் கேள்வி விதிகள் மீறப்பட்டிருக்குமாயின் அவர்களின் வைப்புப்பணம் சபைக்கு உட்படுத்தப்படுவதுடன் கேள்வி தொடர்பாக குற்றம் இழைத்தவராக கருதி குற்றப்பதிவு ஆவணத்தில் பெயர் உள்ளடக்கப்படும்.
14. குத்தகை வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் நீர் மற்றும் மின்சார கட்டணங்களை குத்தகையாளரே செலுத்துதல் வேண்டும்.
15. நல்லதண்ணி நகரத்தில் மலசலகூடத் தொகுதி மற்றும் வாகன தரிப்பிடம் பெற்றுக்கொண்ட கேள்விதாரர்களின் மீள செலுத்தவேண்டிய வைப்புப்பணம் பருவ காலம் முடிந்ததும் மீள செலுத்தப்படும்.
16. மலசலகூட கழிவுகள் ஒப்பந்ததாரரினாலேயே அகற்றப்பட வேண்டியதோடு மலசலகூட சுற்று சூழலை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மஸ்கெலியா பிரதேச சபையின் உத்தியோகத்தரின் வழிக்காட்டலுக்கமைவாக மலசலகூடங்களை பேணல் வேண்டும்.
17. கேள்விகள் திறக்கப்பட்டதனை தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைதாரர் அவ்வேளையிலேயே பிரதேச சபையுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டியதினால் கேள்விக்கான முத்திரை கட்டணம், சட்டத்தரணி கட்டணம் என்பவற்றை இத்தினத்தில் எடுத்து வரல் வேண்டும்.
18. குத்தகைதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை மற்றும் கிராம அலுவலர் சான்றிதழ் என்பன முன்வைக்கப்படல் வேண்டும். (கேள்வி விண்ணப்பங்களுடன்)
19. கேள்விக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

செயலாளர்,
மஸ்கெலியா பிரதேச சபை,
மஸ்கெலியா.

**மேலதிக தகவல்களுக்கு 052-2277275**

## பெறுகை அறிவித்தல்

## கைத்தொழில் அமைச்சு

# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்

**Design, supply, delivery & installation of Lightning Arrester System for Block "A" Plant, Block "B" Plant & Jetty Pump House**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

| விலைமனு இல. | பண்டங்களின் விளக்கம் | ஆவண கட்டணங்கள் (மீளளிக்கப்படாதது) | விலைமனுப்-பிணை | விலைமனுப்பிணை கட்டாயமாக செல்லுபடியாகும் காலப்பகுதி | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| LMSL/SUP/ DPC/16/ 2023 | Design, supply, delivery & installation of Lightning Arrester System for Block "A" Plant, Block "B Plant & Jetty Pump House | 2,000 | 20,000 | 2024.02.26 ஆம் திகதியன்று வரையும் | 2023.12.12 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு |

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13, ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்று 2023.11.20 ஆம் திகதியிலிருந்து 2023.12.11 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   தொடர்பிலக்கங்கள்: 011-2882025, 2883951, 2883952.

4. 2023.11.20 ஆம் திகதியிலிருந்து 2023.12.11 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் நிதிப் பிரிவின் காசாளரின் கருமபீடத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தனித்தனியாக இரு தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர் அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு மேலே குறிப்பிட்டுள்ளவாறான திகதியன்று அல்லது அதற்கு முன்னராக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட், 341/13, சரண மாவத்தை, இராஜகிரிய என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. விலைமனுக்கள் மேலே விபரிக்கப்பட்டவாறு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 3 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்,**
**341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

# கொள்வனவு அறிவித்தல்

## வத்தேகம நகர சபை

இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணைக்கிணங்க பொதுச்சந்தை கடை அறைகளில் விற்பனை செய்யும் உரிமை மற்றும், வத்தேகம நகர பஸ் தரிப்பிட பொது மலசலகூட பராமரிப்பும் கொண்டு நடாத்தும் அதிகாரம் வத்தேகம பழைய நகர சபை கட்டிடத்தை 2024ம் வருடத்திற்கு குத்தகைக்கு விட இரு பிரதிகளுடனான முத்திரையிட்டு அனுப்பப்படுகின்ற விலைமனுக்கள் 2023.12.07 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. விலைமனு 2023.12.06ஆம் திகதி பி.ப. 3.00 வரை அலுவலக நேரத்தினுள் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
02. 2023.12.07 மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
03. விலைமனுக்களிடும் உறையின் இடது பக்கத்தில் தான் வேண்டி நிற்கும் கடையின்/கட்டடத்தின் இலக்கம் வியாபாரத்தை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் வத்தேகம நகர சபை செயலாளர் முகவரிக்கு அனுப்ப வேண்டும். இல்லையெனில் நகர சபையில் வைக்கப்பட்டுள்ள பெட்டியிலிட வேண்டும்.
04. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு குறைவாக மற்றும் அனுமதிக்கப்பட்ட அலுவலுக்கு புறம்பாக கோருகின்ற விலைமனுதாரரின் வைப்புப்பணம் சபை தன் வசப்படுத்திக்கொள்ளும்.
05. எவ்வித காரணமும் கூறாது எந்த விலைமனுவையும் ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் வத்தேகம நகர சபைக்கு அதிகாரமுண்டு.
06. வெற்றி பெற்ற மனுதாரர்களுக்கு அவர்களது மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்த பின் அவ்வறிவித்தல் தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் உரிய வைப்புப்பணத்தை செலுத்தி முறையான ஒப்பந்தத்திற்கு வர வேண்டும்.
07. கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் உங்களுக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிப்பதற்கு வாய்ப்பு உண்டு.
08. மேலதிக விபரங்களை வத்தேகம நகர சபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம்: 081-2475850.

**அட்டவணை இல - 01**

**2024.01.01 - 2024.12.31 வரை**

| சொத்தின் இலக்கம் | அனுமதிக்கப்பட்ட வியாபாரம் அல்லது காரியம் | ஆகக் குறைந்த விலைக் கட்டணம் வருடத்திற்கு | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கப் படும்) | கேள்வி விண்ணப்ப விலை (மீளளிக்கப் படாத) |
|---|---|---|---|---|
| 13 | கோழி இறைச்சி | 300,100.00 | 2500.00 | 500.00 |
| 14 | மாட்டிறைச்சி | 1,320,000.00 | 7500.00 | 500.00 |
| 15 | மீன் விற்பனை | 705100.00 | 2500.00 | 500.00 |
| வத்தேகம நகர பஸ் தரிப்பிட பொது மலசலகூடம் | பராமரிப்பும் கொண்டு நடாத்தலும் (நிபந்தனைகள் விலைமனுவில் உள்ளடங்கும்) | 462,000.00 | 2500.00 | 500.00 |
| வத்தேகம நகர சபை மண்டப கீழ் மாடி | விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர) | 660,100.00 | 2500.00 | 500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| பழைய நகர சபை கட்டிட மேல் மாடி, அறை 49 1/1 | விருப்பத் தேர்வு - (இறைச்சி, மீன், மரக்கறி, பழங்கள் தவிர்த்து) | 102,000.00 | 2500.00 | 500.00 |
| பழைய நகர சபை கட்டிட மேல் மாடி, அறை 49 1/2 | விருப்பத் தேர்வு - (இறைச்சி, மீன், மரக்கறி, பழங்கள் தவிர்த்து) | 270,000.00 | 2500.00 | 500.00 |

**அட்டவணை இல - 02**

**2024.01.01 - 2027.12.31 வரை**

| சொத்தின் இலக்கம் | அனுமதிக்கப்பட்ட வியாபாரம் அல்லது காரியம் | ஆகக் குறைந்த விலைக் கட்டணம் வருடத்திற்கு | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கப் படும்) | கேள்வி விண்ணப்ப விலை (மீளளிக்கப் படாத) |
|---|---|---|---|---|
| 17 | விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர) | 39600.00 | 2500.00 | 500.00 |
| 34 | விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர) | 42000.00 | 2500.00 | 500.00 |
| 35 | விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர) | 39600.00 | 2500.00 | 500.00 |
| 39 | விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர) | 43200.00 | 2500.00 | 500.00 |
| 49 | விருப்பத் தேர்வு (இறைச்சி, மீன், காய்கறிகள், பழங்கள் தவிர) | 43200.00 | 2500.00 | 500.00 |

**2023.11.15 திகதி வத்தேகம நகர சபை காரியாலயத்திலிருந்து**

**பி.எஸ்.பீ. மடுகல்லே**
**செயலாளர்,**
**வத்தேகம நகர சபை.**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.